June 1954
Vol. 1
No 7

714

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஜய ஹூ வைகாசி–ஆனி

இந்த இதழில்

714
2.

★

★ நல்லா[illegible]பரே நல்வாழ்க்கையின் சிற்பி

★ ராக்ஷஸ நதி

★ மாய மகாராஜா!

★ விஷப் பாம்புகளோடு விளையாடலாம்

★ பேதையின் குழந்தை மேதை!

இன்னும் பல அரசியல், சமூக, சுகாதார ஆராய்ச்சிக் கட்டுரைகள், உண்மைக் கதைகள்.

128 பக்கங்கள்

8 அணா

52
198748

அனைவரும் பார்க்க வேண்டிய நாடகம்

இகபர நன்மைதரும் நவரஸம் நிறைந்த தெய்வீகக் கதை
அதிகப் பொருட் செலவில் தயாரித்தது
சினிமா, நாடகத்திற்கும் முற்றும் புதியது

தி ஸ்டேஜ் அளிக்கும்

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

சபரிமலை

ஸ்ரீ ஐயப்பன்

தினசரி மாலை 6-30 மணிக்கு

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில்

இப்பொழுது நடைபெறுகிறது

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

சாதாரணம் - பாக்கெட்டில்

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யூனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை - 1.

பொருளடக்கம்

●

நல்லாசிரியரே நல்வாழ்க்கையின் சிற்பி 3

தீராத வேட்கை 7

ஆஸ்திரேலிய பாம்பின்மீது அரபு அக்ஷரங்கள் 11

ஞாபகச் சின்னம் 13

மூக்கே ஜீவன் 15

மோர்சடிச் செய்திகள் 17

பூட்டும் சாவியும் 22

ஒரே பதில் 26

ராக்ஷஸ நதி 27

தாய் வேண்டுவோருக்குத் தாயை அளிக்கத் தயார் 29

ஓய்வற்ற வாழ்வு நோயற்ற வாழ்வை அளிக்காது 30

மந்திரியைத் தேர்ந்தெடுத்த நாய்க்குட்டி 33

ஆணவத்தால் அழிந்தான் அரக்கன் 36

பத்திரிகை உலக அதிசயம் 48

தேகதத்துவ சுதந்திரம் தேசத்தை அழிக்கும் 49

பட்டம் போயும் பணம் போகவில்லை 55

மாய மகா ராஜா! 57

ஜோதிடம் பலித்தது 61

விஷப்பாம்புகளோடு விளையாடலாம் 65

அவசரச் சாப்பாடு அசௌக்கியம் விளைவிக்கும் 69

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1954

அல்லி ராஜ்யம் 73
கோவளம் (கோமளவல்லிபுரம்) 74
பேதையின் குழந்தை மேதை!
மேதையின் குழந்தை மண்டு! 77
அவதூதர்கள்—ஆனால் சந்நியாசிகள் அல்ல 82
விசித்திர விமானப் பிரயாணிகள் 83
மாவாக்கிவிடும் மண் புழு 85
குட்டி ராஜ்யங்களில் மக்களுக்குத் துன்பமில்லை 87
சந்திரமண்டலத்திற்குச் சென்றால் 89
அதிருஷ்டக் கோழிமுட்டை 91
தலைகீழ்ப் பிராணி 93
வாழ்க்கை வண்டியின் தண்டவாளங்கள் 95
விருந்தினரைக் கைவிடாத மாரர் 97
காது குத்தலும் கண் பார்வையும் 101
இருபதடி நீளமுள்ள தாடி 103
ஒராணுத்தலையின் சாதனை 105
"பணம் வேண்டாம்! பணம் வேண்டாம்!" 108
ஜப்பானில் கொலு வைபவம் 111
தொண்டருக்குத் தொண்டு செய்வீர் 113
மலேயாவில் மேல் நாட்டு பாதர்களின்
அற்புதத் தொண்டு 116
குண்டுகளை ஏமாற்றிய குழந்தைகள் 119
உங்களுக்குத் தெரியுமா? 128

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
198748

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 7

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஜூன் 1954

இன்றைய கல்வி முறைகளினால் கவலைப்படுவோர்கள் கவனிக்க.

நல்லாசிரியரே நல்வாழ்க்கையின் சிற்பி

•

ஆசிரியரின் உண்மையான வேலை மாணவனுக்கு புத்தகத்திலிருப்பதைக் கற்றுக்கொடுப்பதுமட்டுமல்ல. புத்தகத்திலிருப்பதைக் கற்றுக்கொடுத்தால் பரீக்ஷையில் வெற்றிபெறலாம்.

மாணவனின் மனசுக்குச் சிந்திக்கப் பயிற்சி அளித்தால் அவன் பரீக்ஷையில் வெற்றிபெறுவதோடு நல்லது, தீது, சத்தியம், அழகு முதலிய தத்துவங்களை நன்குணர்ந்து மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்கள் எல்லாவற்றிலும் நன்கு தேர்ச்சியடைவான்.

இப்போது அமுலிலிருக்கும் வித்தியாப்பியாச முறைக்கும் பழங்காலத்திலிருந்த வித்தியாப்பியாச முறைக்கும்

வித்தியாசம் இதுதான். இக்காலத்தில் பரீக்ஷையில் வெற்றியடைவதும் உத்தியோகம் பெறுவதும்தான் வித்தியாப்பியாசத்தின் குறிக்கோள். பழங்காலங்களில் மனசைப் பண்படுத்துவதும், நல்லொழுக்கங்களில் பயிற்சி பெறுவதும்தான் வித்தியாப்பியாசத்தின் குறிக்கோளாயிருந்தது.

வித்தியாப்பியாசத்தின் அடிப்படையான இந்த அம்சங்கள் இப்போது மறைந்தே விட்டன.

விஞ்ஞானப் பாடங்கள் இப்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்கும் முறைகளிலிருந்து மாணவர்களுக்கு கடவுள் நம்பிக்கையே ஏற்படாது. பள்ளிக்கூடங்களிலும் மத போதனைகள் கிடையாது. பழைய ரீதியிலுள்ள மத அனுஷ்டானங்களும் கடவுளைப் பற்றிய நம்பிக்கையை யூட்டும் முறைகளும் அநேக வீடுகளில் இல்லை. புதுச் சட்டங்கள் பிரகாரம் விவாகரத்து அமுலுக்கு வந்து, குடும்பங்கள் சிதறிப்போவது சாதாரணமாகிவிட்டால் மேல் நாடுகளில் இப்போதுள்ள நிலைமை நம் நாட்டிலும் ஏற்பட்டுவிடும்.

சூழ்நிலை இப்படியிருந்தால், கடவுள்மீது நம்பிக்கையும் தீய காரியங்களைச் செய்தால் கடவுளின் கோபத்திற்காளாக நேரிடுமென்ற பயமும் இளைஞர்களுக்கு எப்படி ஏற்படும்?

இந்த சூழ்நிலை ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணமென்னவென்றால் ஆசிரியர்களின் தரம் குன்றிவிட்டதேதான். போலீஸ்காரர்களின் வேலை கள்ளர்களைப் பிடித்துச் சிறையில் வைப்பதுதான். ஆசிரியர்களின் வேலை இதோடு தீர்ந்துவிடவில்லை. திருடமுயற்சிக்கும் கள்வனின் மனசை மாற்றி திருடவேண்டுமென்ற ஆசை அவன் மனசில் தோன்றாமலிருக்கச் செய்வதே ஆசிரியரின் உண்மையான வேலையாகும். ஆசிரியர் தன் வேலையை வஞ்சனையின்றிச்

செய்தால் போலீஸ்காரனுக்கு வேலை இராது. ஆசிரியரின் தரம் குன்றிப் போனதால்தான் போலீஸ்காரன் இன்றும் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவனாக விளங்குகிறான்.

விஞ்ஞானம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியரின் மனம் பக்குவமடையாததாயிருந்தால் அவரால் மாணவர்கள் மனசில் கடவுள் நம்பிக்கையை யூட்டமுடியாது. தத்துவங்களைப் போதிக்கும் ஆசிரியர் தன் வாழ்க்கையிலும் இந்தத் தத்துவங்களைக் கடைபிடித்தால் தான் தன்னிடம் கற்றுக்கொள்ளும் மாணவர்களின் மதிப்பைப் பெறலாம்.

இன்றைய பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு போதிய திறமையும் தெளிந்த ஞானமுமிருந்தால் தான் அவர் வாழ்க்கை அவருடைய மாணவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும்.

இம்மாதிரி உத்தம ஆசிரியர்கள் நாட்டில் மறைந்து விட்டதால்தான் இன்றைய இளைஞர்கள் வேரற்ற மரங்கள் போன்றும், மாலுமியற்ற கப்பல்போன்றும் தவிக்கின்றனர்.

இந்த நிலைமைக்கு ஒரே பரிகாரம்தான் உண்டு. அது ஆசிரியரின் தரத்தை உயர்த்துவதுதான். ஆசிரியத் தொழிலின் வருமானம் மிகவும் சொற்பமாயிருக்கும் வரையில் உத்தம வாழ்க்கை நடத்த யோக்கியதையுள்ளவர்கள் இத்தொழிலில் ஈடுபடமாட்டார்கள். படித்தவர்களும் திறமையுள்ளவர்களும் தங்களுக்குத் தேவையான நல்ல ஊதியம் கிடைக்கும் துறைகளையே நாடுவார்கள். வறுமையால் பாதிக்கப்பட்டவர்களும் வேறு தொழில்களுக்கு லாயக்கற்றவர்களும்தான் ஆசிரியர் தொழிலுக்கு வந்து சேருகிறார்கள்.

இந்த நிலைமைக்குப் பரிகாரம் கிடையாதுதான். ஏனென்றால் ஆசிரியத் தொழிலை பிழைப்புக்கு ஒரு வழியென்று

வைக்காமல் வாழ்க்கையில் ஒரு புனிதமான லட்சியம் என்று கருதினால் இந்தத் தொழில் தகுதியான பலனைச் சமூகத்திற்கு அளிக்கும்.

இந்த மனப்பான்மை ஆசிரியர்களுக்கு ஒருவாறு வந்தால் இத்தொழிலின் சிறப்பு ஓங்கும். வேறு தொழில்களில் கிடைக்கும் ஊதியத்தைச் சமூகத்தார் ஆசிரியருக்கும் ஆசிரியத் தொழிலுக்கும் கொடுக்கமுடியுமானால் இன்றைய பிரச்னைகளுக்கு இதைவிடச் சிறந்த பரிகாரம் ஏது? நாட்டின் பொருளாதாரத்தில் மிகவும் பீதியளிக்கும் ஒரு அம்சம் என்னவென்றால், அரசாங்க நிர்வாகத்தின் செலவுகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்திருப்பதேயாகும்.

ஆசிரியர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கவேண்டுமானால் இந்தச் செலவுகள் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும். அதனால் அரசாங்க நிர்வாகிகள் எங்கெந்தத் துறைகளில் செலவைக் குறைக்கலாமோ, அந்தந்தத் துறைகளில் செலவுகளை மிகவும் கடுமையாகக் குறைத்து, மிகுதித் தொகையை ஆசிரியர்கள் ஊதியத்தை அதிகப்படுத்துவதற்கு உபயோகித்தால் சமூகமும் நாடும் அடையும் நலத்திற்கு அளவேயில்லை.

மிகப் பழமையான கதைகளில் முதல் ஸ்தானம் வகிக்கும் புத்த ஜாதகக் கதைகளிலொன்று.

தீராத வேட்கை

வெகு காலத்துக்கு முன்பு, மகாசம்மதன் என்ற பேரரசனுடைய மரபில் மாந்தாதா என்ற வீர மன்னன் உதித்தான். அவன் தன் இடது கையைமடக்கி வலக் கையால் தட்டினுல் ரத்தினங்கள் மழையாய்ப் பொழியும், இப்படி ஒரு வரத்தை அவன் பெற்றிருந்தான். அவனு டைய அந்தப்புறத்தில் உல்லாசப் பொருள்கள் அனைத் தும் நிரம்பியிருந்தன. அவன் காணுத பொருள் இல்லை; நுகராத இன்பம் இல்லை.

ஒரு நாள் மன்னன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப் பதை அமைச்சர்கள் கண்டார்கள். "உலகம் முழுவதை யும் ஆளும் ராஜாதி ராஜருக்கு எந்த வகையில் குறை நேரிட்டிருக்கிறது?" என்று அவர்கள் துணிவோடு கேட் டார்கள்.

அரசன் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தான்; அவர்க ளுடைய கவலையை உணர்ந்தான்; "மதியமைச்சரே, இந்த உலகத்துப் போகங்களில் இனி எனக்கு ஆசை இல்லை; சுவையும் இல்லை. ஏராளமான இந்த உல்லாசப் பொருள் களுக்கு நடுவில் எனக்கு விந்தையான அதிருப்தியொன்று ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவோ புண்ணியங்கள் செய் திருந்தும் இன்று என்னிடம் ஒன்றுமில்லைபோலத்

தோன்றுகிறது. இந்த மண்ணுலகத்தைவிடச் சிறந்த உலகம் வேறு எதுவும் இல்லையா?'' என்று கேட்டான்.

அமைச்சர்கள் சிறிது நேரம் அசைவற்று நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கைகூப்பி, "அரசே, இந்த சிறு விஷயத்துக்கா நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்? நீங்கள் நினைத்தால் எந்த உலகத்துச் செல்வந்தான் உங்கள் காலடியில் வந்து விழாது? தேவர்கள் உங்கள் வருகைக்காக எத்தனையோ நாளாகக் காத்திருக்கிறார்கள். தாங்கள் அங்கே எழுந்தருளலாமே'' என்றான்.

அரசன் நாற்படைகளோடு உடனே தேவலோகத்துக்குப் புறப்பட்டான். தேவர்கள் மலர்மாரி பொழிந்தும் துந்துபிகளை முழக்கியும் அவனை அமோகமாக வரவேற்றார்கள். மாந்தாதா இப்பொழுது தேவருலகை ஒரு குடைக்கீழ் ஆண்டு வரலானான். அப்ஸரஸ்களின் நாட்டியத்திலும் கற்பக மரத்து நிழலிலும் அவன் இன்பமாகப் பொழுது போக்குகிறான்.

சிறிது காலத்துக்கெல்லாம் மீண்டும் அவன் முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது. வாழ்க்கையே அவனுக்கு வெறுத்துவிட்டது. அவனுடைய அதிருப்தி, கண்களிலே நன்றாகத் தெரிந்தது.

அமைச்சர்கள் மறுபடி அவனிடம் வந்து, "அரசே, நீங்கள் கவலையுறக் காரணம் என்ன?'' என்று கேட்டார்கள்.

"இந்தச் செல்வமெல்லாம் எதுக்கு? அரை குறையான இந்தத் தெய்வீக இன்பங்களால் என்ன பயன்? இவற்றையும்விடப் பெரிய இன்பம், இதையும்விட நிறைந்த செல்வம் எங்குமே இல்லையா?'' என்று பெருமூச்சு விட்டான் பார்த்திபன்.

"இல்லாமல் என்ன, அரசே! இருபத்து மூன்ருவது விண்ணுலகம் இருக்கிறதே, அதற்கு முன்ஞல் ஆயிரம் தேவலோகங்களும் நிற்க முடியாது!" என்று அமைச்சர்கள் அமைதியாகக் கூறினர்கள்.

அரசன் உடனே இருபத்து மூன்ருவது விண்ணுலகத்துக்கும் சென்ருன். தேவர்களுக்கும் கிடைப்பதற்கரிய நிதிகள் அங்கே குவிந்திருந்தன. இந்திரனே மன்னனை வரவேற்ருன். அங்கே பாதி உலகத்துக்கு அரசன், மாந்தாதாதான். நிறைவேருத அவனுடைய வேட்கை இங்கே சிறிது மகிழ்ச்சியைப் பெற்றது.

இதனிடையில் முப்பது கோடியே அறுபதிஞயிரம் வருஷம் வாழ்ந்து இந்திரன் இறந்துபோஞன். பிறகு ஒவ்வொருவராக முப்பத்தாறு இந்திரர்கள் விண்ணுலகை ஆண்டார்கள். அதுவரைக்கும் மாந்தாதா, கொள்ளமாளா இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தான்.

ஒருநாள் அவனைக் கவலை பிடித்துக் கொண்டது; 'சொர்க்கத்தில் பாதியை மட்டும் ஆள்வதனுல் என்ன பயன்? இந்திரனையே கொன்றுவிட்டு நான் ஏன் விண்ணுலகம் முழுவதையுமே ஆளக்கூடாது?' என்று நினைக்கலாஞன்.

ஆஞல் இந்திரன் சாகா வரம் பெற்றவன். அவனைக் கொல்ல நினைப்பதே கொடிய பாவம். அதஞல் இப்படி நினைத்தவுடனே மாந்தாதாவின் புண்ணியங்கள் நசித்துப் போயின. அவன் நரையும் திரையும் சூழ்ந்த கிழவஞகி மண்ணுலகில் வந்து விழுந்தான். இங்கே எத்தனையோ ஆண்டுகள் அவன் கடுமையான துன்பங்களை அநுபவித்தான்.

வீரமன்னஞகிய மாந்தாதாவின் முன்பு ஒரு நாள் யமன் வந்து நின்ருன். அமைச்சர்களும் உறவினர்களும்

அவனுடைய படுக்கையைச் சூழ நின்றுகொண்டு கண்ணீர் வடியக் கதறினார்கள்; எங்களுக்கும் குடிமக்களுக்கும் ஆசி கூறுங்கள், அரசே! என்று வேண்டினார்கள்.

பீளை சாடிய தன் கண்களை மன்னன் மெதுவாகத் திறந்தான்; மூச்சு விடவும் சிரமப்பட்டுக்கொண்டு பேசினான்; "அன்பர்களே, நான் செத்ததும் மக்களுக்கு என் கதையைச் சொல்லுங்கள்: மாந்தாதா என்ற மன்னன் இந்தப் பூமண்டலத்தை நீண்டகாலம் ஆண்டான்; தேவருலகிலும் ஆட்சி செலுத்தினான்; முப்பத்தாறு இந்திரர்களின் வாழ்வுக்காலம் வரைக்கும் விண்ணுலக இன்பங்களை அநுபவித்தான், ஆயினும் அவனுடைய ஆசை தீரவில்லை; தீராத வேட்கையுடனே அவன் செத்தான்."

அரசனுக்குத் தன்னிடமே இருந்த வெறுப்பு இந்த வார்த்தைகளில் தொனித்தது. 'இன்ப வேட்கையினால் மனிதனுடைய கண் மங்கிவிடுகிறது' என்று சொல்வது போல் அவனுடைய கண்கள் மூடிக்கொண்டன.

—'மதுகரம்'

ஆஸ்திரேலிய பாம்பின் மீது அரபு அக்ஷரங்கள்!

●

அணிலின் முதுகிலுள்ள மூன்று கோடுகள் ஸ்ரீராமரின் கைபட்டதால் ஏற்பட்டவையென்ற நம்பிக்கை நம்நாட்டில் நிலவி வருகிறது. இவ்வாறு ராமாயணத்திற்கும் இந்தச் சிறிய பிராணிக்கும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதேபோல் வெளிநாடுகளிலும் சில பிராணிகளின் மீது இயற்கையாகவே தோன்றும். குறிகளுக்குப் பொதுமக்கள் ருசிகரமான வியாக்கியானம் சொல்வதுண்டு.

ஆஸ்திரேலியாவில் காட்டுப் பிரதேசங்களில் ஒரு கொடிய விஷப்பாம்பு ஜீவிக்கிறது. இந்தக் கொடிய விஷப்பாம்பின் வயிற்றில் வரிகளும், குறிகளும் ஏராளமாக இருக்கின்றன. ஆஸ்திரேலிய காட்டுப் பிரதேச வாசிகள் இந்தக் குறிகளை அரபுப்பாஷை அக்ஷரங்களாகக் கருதுகிறார்கள். இந்த அரபு வார்த்தைகளின் அர்த்தம் கீழ்க்கண்டவாறென நம்புகின்றனர். "என்னுடைய கண்களுக்குள்ள தீட்சண்யம் என் காதுகளுக்கிருந்தால் என் அருகில் வரும் மனிதர் எவரும் தப்பிக்க முடியாது." இந்தப் பாம்பு சிருஷ்டியிலேயே செவிடாயிருப்பது ஆஸ்திரேலியக் காட்டுப் பிரதேச வாசிகளின் அதிருஷ்டம் தான்.

காட்லீவர் ஆயில் என்ற பெயர்பெற்ற டானிக்கிற்கு காரணமான 'காட்' என்ற மீனின்மீது சில விநோதமான வரிகள் தென்படுகின்றன. இந்தவரிகளை, இந்த மீன், நதியில்எந்தஇடத்தில் பிறந்ததோ அந்த இடத்தின் புகைப்படமென்று கருதுகின்றனர்.

முயலின்தோல் உள்பாகத்தில் சில நீலநிறக் குறிகள் இருக்கின்றன. இவை முயல் உயிரை விடுவதற்கு முன் கடைசியாக எந்தெந்தப் பொருள்களைக் கண்டதோ அந்தந்தப் பொருள்களின் பிரதிபிம்பங்களாகும் என்றுசிலர் கருதுகிறார்கள். சாதாரணமாய், இக் குறிகள் விருக்ஷங்களின் அடிபாகங்கள், மரங்களின் கிளைகள், வெட்டித் தள்ளியமரங்கள் முதலியன போன்று தோன்றும்.

மேல் நாடுகளில் ஜான் டோரி என்ற ஒருவகை மீன் இருக்கிறதாம். இதன்தேகத்தில் அணில்மீதுள்ள கோடுகள் போன்று சிலகோடுகள் இருக்கின்றனவாம். இவை செயின்ட் பீட்டர் என்ற அப்போஸ்தலருடைய கைவிரல் அடையாளங்களென்று அந்நாட்டுப் பொதுமக்கள் கருதுகின்றனர்.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES
FIRST - CLASS CLOTHES
MADE OF SUPERIOR B. & C.
MATERIALS

Prices Moderate

''தேவதைகள் காலெடுத்து வைக்கக்கூட யோசிக்கும் இடத்தில் பேதைகள் பாய்கிருர்கள்'' என்ற ஆங்கில வசனத்திற்கு ஒரு உதாரணம்.

ஞாபகச்சின்னம்!

சொந்த நாட்டைவிட்டு ஏதாவது வெளி நாட்டுக்குச் செல்லவோ அந்த நாட்டில் சில காலம் தங்கவோ நேரிட்டால் அந்நாட்டுப் பொருள்களை அந்த நாட்டின் ஞாபகார்த்தமாக சொந்த நாட்டிற்கு எடுத்துக் கொண்டுபோவது மனிதர்களின் சுபாவம். இந்த விஷயத்தில் இந்தியா முதலிய ஆசிய நாடுகளுக்கு விஜயஞ்செய்யும் மேல் நாட்டார் வெகுகாலமாக பேர் பெற்றவர்கள்.

இருநூறு வருஷங்களாக இந்தியாவை ஆட்சிபுரிந்த இங்கிலாந்தின் மக்கள் இந்தியாவை பார்த்துவிட்டோ இந்தியாவில் தங்கிவிட்டோ இங்கிலாந்திற்குச் திரும்பச் செல்லும்போது அநேகவித இந்தியப் பொருள்களை எடுத்துப்போவது வழக்கம். காஷ்மீரத்துச் சால்வை, தந்தத்தினுல் செய்யப்பட்ட அழகான பொருள்கள், வெவ்வேறு மாகாணத்துப் பாத்திர வகைகள், இந்திய வனந்திரங்களில் வாழும் விலங்கினங்களின் மண்டையோடுகள், தோல்கள், மான் கொம்புகள் முதலியவை முக்கியமாக மேல் நாடுகளுக்கு இந்தியாவின் ஞாபகார்த்தமாகச் செல்லும் பொருள்கள்.

சிலர் குத்து விளக்குகள், ஆலயங்களில் உபயோகிக்கும் விதவிதமான விளக்குகள், மணிகள் தாம்பாளங்கள், தட்டுகள் முதலியவற்றை இந்தியாவில் தங்கும் போதே மேல் நாட்டினர் வாங்கி வைக்கும் வழக்கம் உண்டு. இம்மாதிரி சாமான்களெல்லாம் சிகரெட் புகை பிடித்த பிறகு அதன் சாம்பலைப் போடுவதற்குத்தான் இவர்கள் உபயோகித்தாலும், இந்நாட்டில் அவர்கள் சிலகாலம் தங்கியதன் ஞாபகார்த்தமாகவே இவற்றைக் கொண்டுபோகிருர்களென்பதில் ஐயமில்லை.

ஆசிய நாடுகளில் தங்கும் மேல் நாட்டினர் அனைவரும் இந்நாட்டுப் பாஷைகளைக் கற்றுக்கொள்வதில்லை. இதற்குக் காரணம் உண்டு. அவர்கள் இந்நாட்டுப்பாஷைகளைக்கற்றுக் கொள்வதை அகௌரவமாகக் கருதுகிருர்கள். மேலும் அவர்களோடு பழகும் ஆசிய நாட்டி

னர் அனைவரும் ஆங்கில பாஷையை அறிந்தவர்கள்.

சீன பாஷையைக் கற்றுக் கொள்ளாமலே ஒரு அமெரிக்க மாது சீனுவிலே சிலகாலம் தங்கினாள். அங்கு தங்கியிருக்கும் போது ஒரு தினம் தனக்கு மிகவும் விசேஷமான சீன தேசத்துப் பொருள் என்று தோன்றிய ஒரு நாணயத்தை அவள் வாங்கினாள். நாணயம் மிகவும் பெரிது; கனமானதும்கூட. மெடல்களில் உள்ளதுபோல் நாணயத்தில் துவாரமிருந்தது.

அமெரிக்காவிற்குத் திரும்பி வந்தபிறகு அந்த நாணயத்தைத் தன் வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மிக மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் காண்பிப்பது அவளுக்கு வழக்கமாயிருந்தது. சில தினங்கள் கழித்து அந்த நாணயத்தைத் தன் கழுத்திலேயே ஒரு ரக்ஷை போன்று அணிவித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

ஒரு தினம் ஐக்கிய நாட்டுத் தலை நகரத்தில் சர்க்கார் சார்பாக நடந்த ஒரு கூட்டத்திற்குச் சென்றாள். அவள் தேநீர் அருந்த உட்கார்ந்த மேஜையில் பிரபல ஐக்கிய நாட்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சீன தேசத்து தூதரும் உட்கார்ந்திருந்தனர். சீன தேசத்தைப் பற்றியும் சீன தேசத்திற்குச் சென்றிருந்த போது அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் சில அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சில் இந்த ஸ்திரீயும் கலந்துகொண்டாள். தன்னுடைய சீன தேசத்து அனுபவங்களைப் பற்றியும் இவள் பேசினாள். முடிவில்தான் கழுத்தில் அணிந்திருந்த மெடலை எல்லோருக்கும் காண்பித்தாள். அமெரிக்கர்கள் எல்லோரும் அது மிக அழகாயிருக்கிறதென்று கூறினார்கள்.

உடனே அந்த ஸ்திரீ சீன தூதரை நோக்கி "இந்த மெடலில் ஏதோ சீன பாஷையில் எழுதி யிருக்கின்றதே, அதைப் படித்து அதன் பொருளை எனக்குக் கூறுங்கள்" என்று கேட்டாள். தொடர்ந்து "இந்த வாசகம் தங்கள் தேசத்து கண்பியூஷியஸ் போன்ற ஏதாவது ஒரு வேதாந்தியின் அமுத மொழிகளாய்த்தா னிருக்குமென்றும் கூறினாள்.

சீன தேசத்து தூதர் மெடலை ஒருகணம் நோக்கித்திகைப்புடன் பேச்சை மாற்ற முயற்சித்தார்.

அமெரிக்க மாது அவரை விடவில்லை. திரும்பத் திரும்பத் தன் கழுத்திலுள்ள மெடலைப் பற்றியும் அதிலிருக்கும் சீன பாஷை எழுத்துக்களைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தாள். முடிவில் சீன தேசத்துத் தூதர் அந்த மெடலில் பொறிக்கப்பட்டிருந்த சீன வார்த்தையின் பொருளை விளக்கினார்.

சீனபாஷையில் எழுதியிருந்த வாசகம் இவ்வாறு. "அங்கீகாரம் பெற்ற விலைமகள், நெ. 250, ஷாங்காய் நகரம்."

மூக்கே ஜீவன்

மூக்கின் முக்கியத்துவத்தை நாட்டிலிருப்பவர்களை விடக்காட்டு வாசிகளே நன்கு அறிவார்கள். அநேக காட்டு மிருகங்களுக்கு கண்பார்வை மிகக்குறைவு; ஆனால் இவை மோப்பசக்தி அதிகம் வாய்ந்தவை. திக்குத்திசை அறிந்து சஞ்சாரஞ்செய்வது மோப்ப சக்தியினால்தான்.

தன்னுடைய சத்ரு சமீபத்திலிருக்கின்றதென்பதைத் தெரிந்துகொள்வதும், மோப்ப சக்தியினால்தான். ஆபத்து நேரிடக்கூடும் என்று ஒன்றுக்கொன்று எச்சரிக்கையாயிருப்பதும் மோப்ப சக்தியினால்தான்.

கரடிக்குப் பிடித்த ஆகாரத்தை பூமியினடியில் புதைத்துப் போட்டிருந்தாலும் அதனுடைய மோப்ப சக்தியினால் புதைக்கப்பட்டிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து ஆகாரத்தைத் தேடியெடுத்துச் சாப்பிட்டுவிடும்.

காட்டில் மான் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது திடீரென ஒரு இடத்தில் நின்றுவிடும். மோப்ப சக்தியினால், ஏதோ சமீபத்திலுள்ள ஆபத்தைப் பற்றின எச்சரிகையினால்தான் இவ்வாறு நின்றுவிடுகிறது. இரு காதுகளையும் நன்ருக விரித்து, நேரக்கூடிய ஆபத்தின் சின்னமான சப்தங்கள் ஏதாவது கேட்கிறதா என்று கவனிக்கும்.

விலங்குகள், மரங்கள், செடிகள், முதலிய அடர்த்தியாயில்லாத இடங்களில் சஞ்சரிக்கும்போது, காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகிறதோ அந்தத் திசையை நோக்கித்தான் செல்லும்.

நம் நாட்டில் யானைகள் "போக்கிரி"யாவது போல், மேல் நாட்டுக் காட்டுப் பிரதேசங்களில் கரடிகள் 'போக்கிரி'யாவதுண்டு. இந்தப் 'போக்கிரி'க் கரடிகள் மோப்ப சக்தியினால் தனியாக காட்டுக்குள் இருக்கும் வீடுகளில் எவருமில்லாத சமயத்தைத் தெரிந்துகொண்டு அவ்வீடுகளிலிருக்கும் உணவுப் பொருள்களை எவ்விடம் பத்திரமாய் வைத்திருந்தாலும் சமைத்ததாயிருந்தாலும், சமைக்காததாயிருந்தாலும் எல்லாவற்றையும் விழுங்கிச் சென்றுவிடும். இரவு தோறும் பத்துப் பதினைந்து மைல் தூரம் சஞ்சரித்து அடுத்த இரவிலும் இதேமாதிரி காட்டிலிருக்கும் வீடுகளிலுள்ள உணவுப் பண்டங்களைக் காலி செய்துவிட்டுப் போய்விடும்.

கரடி மிகவும் புத்தி கூர்மைவாய்ந்ததானாலும் மோப்ப சக்திதான் இதற்குப் பிரதானமாயிருக்கிறது. சாதாரணமாய் இம்மாதிரி 'போக்கிரி'க் கரடியை வயதாகி மோப்ப சக்தி குறைந்துவிடும் போதுதான் மனிதனால் கொல்ல முடியும்.

இரை தேடுதல், சத்ருக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளுதல் முதலியவற்றிற்கெல்லாம் பொதுவாக அநேக காட்டுமிருகங்களுக்கு அவற்றின் மோப்ப சக்தியே துணையாகிறது.

தங்கமாயிருப்பவர்களுக்குத் தங்கமெடல்

அபிஸீனியா ராஜ்ய சக்கரவர்த்தியின் கட்டளைப்படி 15 வருஷ காலத்திற்குச் சண்டை சச்சரவில்லாமல் அன்யோன்யமாக வாழ்க்கை நடத்தும் தம்பதிகளுக்கு வெண்கல மெடலும், 25 வருஷங்கள் அன்யோன்யமாய் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வெள்ளிமெடலும், 50 வருஷங்கள் இணைபிரியாமல் வாழ்க்கைநடத்தி வருபவர்களுக்கு தங்க மெடலும் பரிசாக அளித்துவருகின்றனர்.

பொதுமக்கள் பத்திரிகைகளில் படிக்கும் செய்திகள் பலரகங்கள். அவற்றில் ஒன்றைப் பற்றி.

மோசடிச் செய்திகள்

சாதாரணமாய் உலகத்தில் நடைபெறும் பற்பல நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காகவே ஆர்வத்துடன் செய்திப் பத்திரிகைகளை எல்லோரும் படிக்கின்றனர்.

பொதுவாகப் பத்திரிகைகளில் வெளிவரும் விஷயங்களை உண்மையென்றே அநேகர் நம்புகிறார்கள். மேல் நாடுகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கும் செய்திகள் என்ற பேரில் பொதுமக்களை ஏமாற்றும் பழக்கமும் உண்டு. இம்மாதிரி பொதுமக்களை ஏமாற்றும் செய்திகள் வெகு விநோதமானவை.

சமீபத்தில், இப்போது நடமாடிக்கொண்டிருக்கும் மனிதனுடைய உருவம் ஐந்து லட்ச வருஷங்களுக்கு முன்னால் எப்படியிருந்தது என்பதற்குத் தகுந்த அத்தாட்சிகள் கண்டுபிடித்திருக்கின்றனர் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது.

மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தை ஆராயும் சாஸ்திர நிபுணர்கள் இந்தச் செய்தியைப்பற்றியும் ஐந்து லட்ச வருஷங்களுக்கு முன்பு மனிதனின் உருவத்திற்கு அத்தாட்சிகளைக் கண்டுபிடித்தவர்களைப் பற்றியும் விமர்சனஞ் செய்து புகழ்ந்தார்கள்.

இந்த விமர்சனங்களும் புகழுரைகளும் தினசரிப் பத்திரிகைகளிலும், வாரப் பத்திரிகைகளிலும், மாதப் பத்திரிகைகளிலும் பக்கம் பக்கமாக வெளிவந்த பின்னர் இந்த செய்தியின் உண்மை தெளிவாயிற்று.

இந்தச் செய்தி அறவே பொய் யென்றும், பழைய வரலாறுகளைக் கண்டுபிடித்திருப்பதாக கூறியிருப்பது வெறும் புரட்டு என்றும் வெளியாயிற்று.

மனிதனின் பழைய வரலாற்றைக் கண்டுபிடித்ததாகக் கூறியதுபோல் மற்றொருவர் பறவை

களின் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்த பூர்வீக வரலாற்றைக் கண்டுபிடித்தாராம். அந்தப் பூர்வீகப் பறவையோ சாதாரணமானதல்ல. இரு யானைகளுக்குச் சமமான பருமன்; அதன் இறக்கைகளின் கீழ் அந்தப் பறவை ஒரு சிறிய வீட்டைக்கூடத் தாங்குமாம்! என்றெல்லாம் இந்த 'ஆராய்ச்சியாளர்' கூறினாராம்.

இந்த மாதிரிச் செய்திகளுக்கு அத்தாட்சியைக் கேட்கச்சென்ற நிபுணர்களிடம் இந்தஆராய்ச்சியாளர் உண்மையைக் கூறிவிட்டாராம். 'தான் கூறியதெல்லாம் அறவே பொய்யென்றும் இம்மாதிரி 'அண்டப் புளுகுகளை' பத்திரிகைகளில் பிரசுரித்தது தனக்கு ஒரு பொழுது போக்கும் நிமித்தமே தான் என்று ஒப்புக் கொண்டாராம்.

சிறிது காலத்திற்கு முன்பு அமெரிக்காவிலே நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கேளுங்கள்.

ஒருசிறிய நகரம். மனோரம்மியமான மாலை வேளை. வீதியில் குதூகலமாய் நடந்துசெல்வோரும் வீட்டு வாசலில் ஆனந்தமாய் வம்பு அளந்து கொண்டிருப்போரும், சந்தோஷமாய்ப் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர். திடீரென போலீஸ் பிரசார வண்டியிலிருந்து வெளி வரும் ஒலிபோல ஒரு அசரீரி வாக்கு :

'எல்லோரும் கவனியுங்கள்! நகரசபைத்தலைவர் பேசுகிறேன். ஜெர்மானியர்கள் ஆகாய விமானங்களில் ஏராளமான அணுக் குண்டுகளுடன் நம் நகரத்தைச் சமீபித்துவிட்டனர். இன்னும் சில நிமிஷ நேரத்தில் நம் நகரத்தில் அணுக்குண்டுகள் விழப் போகின்றன, ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'

அவ்வளவுதான், வீதியில் கூடியிருந்த ஜனங்களும் வீட்டுக்குள்ளிருந்த ஜனங்களும் வெளியே வந்துவிட்டனர். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தேடிச்சென்றார்கள். போலீஸ் படையினர் ஜனங்களை எச்சரிக்க வீதிகளில் திரண்டனர்.

போலீஸ் படைகளுக்கு ஊரெல்லாம் சுற்றிப் பார்த்த பின்பு, இந்தக் குழப்பத்திற்கும் பரபரப்புக்கும், காரணம் தெரிந்தது. ஒரு வீட்டில் மூன்றும் மெத்தையில் ஒரு அறையிலிருந்து 23 வயதுள்ள வாலிபன் ஒருவன் தானே நிருமித்த ஒரு ஒலிபெருக்கி மூலம் இந்த பொய் எச்சரிக்கை செய்தியைப் பரவச் செய்து கொண்டிருப்பதைக் கண்டனர்.

அவனைக்கேட்டவுடன் தனக்கு பொழுதுபோக்க வேறு ஒரு வழியும் தோன்றாததால் இந்தப் பொய் எச்சரிக்கையைச் செய்ததாகக் கூறினான். போலீஸார் இவ்வாலிபன் மீது வழக்கைப் பதிவுசெய்து காவலில் வைத்தனர்.

சென்ற மாத இதழில் "மதியுள்ள மார்க்கடம்" என்ற கட்டு

ரையைப் படித்த வாசகர்களுக்கு கீழ்வரும் கதை ருசிகரமாயிருக்கும் இதுவும் அமெரிக்காவில் நடந்த கதைதான். ஒரு ஸ்திரீக்கு ஒருநாள காலையில் பின்வருமாறு ஒரு கடிதம் கிடைத்தது.

"உனக்காகவே ஒரு மனிதக் குரங்கை வீட்டு வேலைகளில் பயிற்சி கொடுத்துத் தயாரித்து வைத்திருக்கிறேன். இந்தக் குரங்கு அடுப்பங்கரை வேலைகள் யாவும்செய்யும். உன் விருந்தினர்களுக்கு அருமையாக உணவை யூட்டும். துணிகளைத் துவைக்கும். இம்மாதிரிப்பயிற்சி பெற்ற மனிதக் குரங்குகள் எவ்வளவோ வீடுகளில் வேலை செய்து வருகின்றன. இவற்றின் விலையோ மிகவும் சொற்பம். உணவும் அதிகம் தேவையில்லை. ஆடை அவசியமேயில்லை. இம்மாதிரி 'வீட்டு வேலைக்காரர்களைப் பெறுவோரின் அதிருஷ்டத்தைக் கூறவாவேண்டும்? இன்று மாலையே இந்தக் குரங்கு உன் வீட்டிற்கு வந்து சேரும்".

இந்தக் கடிதத்தைக் கண்ட ஸ்திரீ திடுக்கிட்டுப் போலீஸாருக்குப் போன் செய்தாள்.

போலீஸாருக்குப் போன் செய்த சமயத்தில் ஒரு விந்தையான விஷயம் இவளுக்குத் தெரியவந்தது. போலீஸாருக்கு இதே தகவலை நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் போன் மூலம் அறிவித்திருந்தார்களாம். போலீஸார் நடத்தின விசாரணைமூலம் இம்மாதிரி ஸ்திரீகளைப் பீதிக்காளாகும்படி செய்த ஆள் யாரெனத் தெரிந்தது.

இவனைப் போலீஸார் விசாரித்தவுடன் வாலிபன் கூறியதாவது :—

"அமெரிக்காவில் எவ்வளவு மூடர்கள் இருக்கிறார்களென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். நூற்றுக்கு நூறு பேர்களும் மூடர்கள்தான் என்று இப்போது தெளிவாயிற்று" என்று பெருமிதத்துடன் கூறினான்.

ஒரு விவாகமான வாலிபன் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்ததால் தன் மனைவிக்காவது ஒரு வேலை கிடைக்க கீழ்க்கண்டவாறு சூழ்ச்சி செய்தான். திடீரென ஒருநாள் காலையில் தன் மாமனார் வீட்டு வாசலிலிருந்த ஒரு மரத்தின் மீதேறி ஒரு கிளையில் சங்கிலியால் தன்னைக் கட்டிக்கொண்டான்.

இந்த வாலிபன் அந்த வீட்டாரின் மாப்பிள்ளையென அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாது.

அந்த வீட்டுப் பெண், தன்னை மணந்துகொள்ளும் வரையிலும் தான் மரத்தைவிட்டு இறங்கப் போவதில்லை என்று சபதஞ் செய்தான். இந்தச் செய்தி வாய்ப் பேச்சுமூலமும் பத்திரிகைகள் மூலமும் ஊரெங்கும் பரவியது. இம்மாதிரி ஒரு

கோமாளியின் மனைவி என்று புகழ்பெற்றதன் மூலம் இந்த வாலிபனின் மனைவிக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்தது தம்பதிகளின் திட்டம் வெற்றி பெற்றது. ஊரார் எல்லோரும் ஏமாற்றமடைந்தனர்.

பத்திரிகைகளில் அடிக்கடி கழுதை வயிற்றில் நாய்குட்டிப் பிறந்ததென்றும் வானவில் வர்ணங்களில் கோழிமுட்டையிட்ட தென்றும்,வேப்பமரத்தில் பசும் பால் வழிந்ததென்றும், படம் எடுக்கும் பாம்புபோன்ற ஒரு பூ பூசணிச் செடியில் மலர்ந்ததென் றும் ஒரு பசு, பாலுக்குப் பதி லாக ஐஸ்கிரீமாகச் சுரந்ததென் றும் பல விநோதச் செய்திகளைப் படிக்கிறோம்.

இத்தகைய செய்திகளில் அநேகம் வெறும் பொய்தான். இப்போது நமது நாட்டுப் பத்தி ரிகைகளில் லக்ஷ்மணபுரி ஆஸ் பத்திரியிலிருக்கும் ராமு என்ற ஒரு சிறுவனைப் பற்றி அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக் கின்றன.

ராமுவின் வரலாறு என்ன வென்றால்: அவன் குழந்தையா யிருக்கும்போது ஓநாய் தூக் கிச் சென்றுவிட்டதாம். ஒன்பது வருஷகாலம் இந்த ராமுவை, ஓநாய்க் குட்டியைப்போலவே வளர்த்து வந்ததாம்.

சமீபத்தில் இந்தச் சிறுவனை லக்ஷ்மணபுரி ரயில்வே ஸ்டேஷ னில் யாரோ ஒருவர் கண்டெடுத் தாராம்.

நாலுகால் பிராணிகளைப் போலவே இவனும் காலையும் கையையும் உபயோகித்துத் தான் நடப்பானாம். மனிதர் களைப்போல் வாயால் பேச முடியாதாம். ஓநாயின் சத்தத் தைப்போலவே ஊளையிடுவா னாம். இதன் உண்மை இன்னும் தெரியவில்லை ஆனால் மேற்கூறி வந்த பொய்ச் செய்திகளைப் போல் இதுவும் ஒரு பொய்ச் செய்திதான் என்று மேல்நாடு களில் பிரசாரம் நடக்கிறது.

இம்மாதிரி மோசடிக் கதை கள் சில பரிதாபகரமாகவுமிருக் கின்றன. இரண்டாம் மகா யுத்த சமயத்தில் ஐக்கியநாட்டுத் தலைவரான ரூஸ்வெல்டிற்கு ஒரு சிறுமி கடிதமொன்று எழுதினாள்.

தலைவருக்கும் இந்தச் சிறுமிக் கும் பிறந்த நாள் ஒரே தின மானது தான் இந்தக் கடித மெழுதுவதற்கான காரண மாகும். தலைவர், சிறுமிக்கு அவளது கடிதத்திற்கு நன்றி கூறி ஒரு பதில் எழுதினார். இந்த பதில் இவளுடைய சகோ தரனை ஒரு குறும்புக்காரப் பையனிடம் கிடைத்தது. அவன் அக்கடிதத்தில் நாலு வரிகள் சொந்தமாக எழுதிவைத்தான். அந்த நான்கு வரிகளில், தலைவர் அந்தச் சிறுமியைத் தன் மாளி கைக்கு அழைப்பதாகக் கண்டி ருந்தது. கடிதத்தை திரும்பவும் மூடி தன் சகோதரியிடம் கொடுத்துவிட்டான் குறும்புக் காரச் சகோதரன். கடிதத்தைச்

சிறுமி படித்ததும், அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

போலி அழைப்பில் குறிப்பிட்டிருந்த தேதியன்று சிறுமி தலைவர் மாளிகையில் ஆஜரானாள்.

தலைவர் மாளிகையைக் காவல்புரிந்த போலீசார் இந்தச் சிறுமி கொடுத்த அழைப்புக் கடிதத்தில் சந்தேகங்கொண்டு அவளை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தனர். சிறுமியின் அதிருஷ்டவசத்தால் இந்தச் சம்பவம் தலைவருக்குத் தற்செயலாய்த் தெரிந்தது.

சிறுமியை மாளிகைக்கு அழைத்துவர உத்தரவிட்டார். அவளை ஒரு நாள் தன்னுடைய ஒரு கௌரவமான விருந்தினரைப் போன்று உபசரித்து பிறகு வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

வீட்டிற்குச் சென்றதும் தன் சகோதரனிடஞ் சென்று அவனைத் தலைவர் அவருடைய அடுத்த வருஷப்பிறந்தநாளன்று விருந்திற்கு அழைத்திருக்கிறாரென்று குறும்பாகக்கூறினாள்.

இம்மாதிரி மோசடிக் கதைகளை ஏராளமாக ஆராய்ச்சி செய்த ஒரு நிபுணர் இதுமாதிரி பொய்ச் செய்திகளையும், கதைகளையும் ஜோடிப்பவர்கள் தங்கள் சுயநலத்திற்காகவே இவற்றைச் செய்கின்றனர் என்று கூறுகிறார்.

இம்மாதிரி செய்பவர்களுடைய முக்கியநோக்கம் எப்படியாயினும் புகழ்பெறுவது அல்லது பணம் சம்பாதிப்பது, இது இரண்டுமில்லாவிடில் தங்கள் ஆணவத்தைக் காண்பிப்பது.

இந்த நோக்கங்கள் பொதுவாக மனித சமூகத்திற்கு எவ்வளவு தீங்கு விளைவிக்கிறதென்று இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள தகவல்களிலிருந்து நன்கு தெளிவாகிறது.

அலட்சியமாகக் கையாளப்படும் ஒரு பொருள்தான். ஆனால் இதற்கும் ஒரு தனி மகத்துவமும் முக்கியத்துவமும் உண்டு.

பூட்டும் சாவியும்

●

பூட்டைப் பற்றி எழுத நினைத்தேன். ஆனால் சாவியைப் பற்றி எழுதாமல் விடமுடியவில்லை. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது. விஷயத்திலே ஒன்றித்தான் விடுகின்றன. ஆனால் வழக்கத்திலே பூட்டு கதவிலும் சாவி கையிலும் தான் இருந்துவருகின்றன. யாரும் பூட்டோடு சாவியை விடுவதில்லை. விடுவதானால் வீட்டோடு சாமான் போய்விடும்.

பாதுகாப்புக்கு உலகம் ஐ. நா. வை நம்பாமல் போகலாம். தேசங்கள் தங்கள் பலத்தை நம்பாமல் வெளிநாட்டு ராணுவ உதவியை எதிர்ப் பார்க்கலாம். பொது ஜனம் தன் பாதுகாப்புக்கு போலீசையும் சட்டத்தையும் நம்பாமல் போகலாம். ஆனால் யாருமே தங்கள் பொருளின் பாதுகாப்புக்கு பூட்டையும் சாவியையும் நம்பாமல் போவதில்லை. அப்படி நம்பாதவர்கள் இருந்தால் அவர்கள் தங்கள் வீட்டு வாசற்படியிலேயே காத்துக்கிடக்கவேண்டியவர்களாவார்கள். கணவனை நம்பாத மனைவி இருக்கலாம். மனைவியை நம்பாத கணவன் இருக்கலாம். ஆனால் இருவருமே அவரவர் பூட்டுச்சாவியை நம்பாமல் இருப்பதில்லை. பூட்டை சரியாய் பூட்ட மறந்தாலும், சாவி பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். சிலபேர்கள் தாங்கள் அழுத்திப்பூட்டி பல தடவை இழுத்துப்பார்த்து கொஞ்ச தூரம் போனபிறகு மறுபடியும் ஓடோடியும் வந்து பூட்டை இழுத்துப் பார்ப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்களுக்குப் பூட்டின் மேல் நம்பிக்கை இல்லாமல் இல்லை; தங்கள் ஞாபக சக்தியின்மீது நம்பிக்கை பூஜ்யம்!

பணக்காரர்கள் தாங்கள் வைத்திருக்கும் பணத்தளவு

பெட்டிக்கு அதிகம் பணம் செல வழிப்பதும், பெட்டியளவு பூட் டுக்கு அதிகம் விலைகொடுப்பதும் பூட்டு இந்தப் பொருளாதார உலகில் எவ்வளவு மதிப்பைப் பெற்றிருக்கிறது என்பதற்கோர் அத்தாட்சி.

தனிக் குடித்தனம் செய்யும் புதுத்தம்பதிகள் புறப்படும் பொழுது இருவரும் சேர்ந்தே புறப்படுவார்கள். அநேகமாக சாவி மனைவியின் கையில்தான் இருக்கும். மனைவி அதை கண வனின் பிரேமையின் சின்ன மாக எடுத்துக்கொள்ளுவாள். கணவன் எல்லாப் பொறுப்பை யுமே ஒப்படைக்கும் சடங்கா னது சாவியைக் கொடுப்பதனால் நடைபெறுகிறது.

"உங்கம்மா சாவியை என் கையிலேயே கொடுப்பதில்லை" என்ற மனைவியின் புகாரைப் பொருட்படுத்தாத கணவர்கள் தாம்பத்திய அன்யோன்யத்தை இழக்க வேண்டிவரும் என்ற எச்சரிக்கைவிடத் தேவையில்லை இந்த ஒற்றைச்சாவி விவகாரங் களில் விளையும் தொல்லைகளை நிவர்த்திப்பதற்கு இரட்டைச் சாவி வைத்துக்கொள்ளும் தம் பதிகள் இருக்கிறார்கள். இதில் ஒரு வசதி என்னவென்றால் மனைவி வெளியே புறப்படும் பொழுது கணவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. கணவனும் அப்படியே எப் பொழுது வேண்டுமானாலும் வீடு திரும்பலாம். ஒருவருக்காக ஒரு வர் காத்துக்கிடக்க வேண்டிய தில்லை. இந்த இரட்டைச்சாவி முறையிலும் ஒரு குறைபாடு உண்டு. கணவன் மனைவி அவரவர் கையில் ஒருசாவி யிருப்பதனால் மற்றவர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவரிடம் சாவி யிருக்கிறது. மழை பெய்தால் என்ன, அவர் வந்திருந்தால் துணிகளை எடுத்து உள்ளே போட்டுவிடுவார் என்று சமா தானப்படுத்திக்கொள்ளும் பெண்கள் இல்லாமல் இல்லை. இதனால் என்ன ஆகிறது? பெண் கள் சுதந்திரம் காரணமாக வாசற்படி தாண்டுவதானா லும் சாவி காரணமாக வீட் டையோ, கணவனைப் பற்றியோ அக்கறை கொள்வதில்லை.

அப்பா, அம்மா, நாத்தி, மைத் துனன் மார்கள், பாட்டி இவ்வ ளவு பேரும் ரயில்வே மூட்டை முடிச்சுகள் மாதிரி குவிந்து கிடக்கும் குடும்பத்தில் இந்த இரட்டைச்சாவி முறை அடி யோடு பயன் படுவதில்லை. யாரி டம் சாவியைக் கொடுப்பது என்ற பிரச்னை ஏற்படலாம். யார் பெரியவர், தகுந்தவர் என்ற வாதமும் ஏற்படலாம். இம்மாதிரியான குடும்பங்களில் சாவிக்கொத்து என்று ஒன்று இருக்கும். அந்தச்சாவிகளுக்குப் பூட்டுக்கள் எங்கு கிடக்குமோ. சாவி மாத்திரம் ஓரிடத்தில் பத் திரமாக இருக்கும். எல்லோரும் எங்கேயாவது வெளியே போவ தானால் வீட்டுக்குக்காவல்என்று ஒருவரை வைப்பார்கள். அநேக மாக அந்தக் காவல் பெரும்பா

லும் பொழுதுவிழுந்தால் கண் தெரியாத கிழடுகள் தலையில் தான் விழும். "பாட்டி, வீடு பத்திரம்'', என்று சாவியை ஒப் படைத்துவிட்டுப் போவார்கள். பாட்டி சாவியைத் தலைக்கடியில் வைத்துத் தூங்க ஆரம்பிப்பாள். ஏதாவது கொல்லையில் சத்தங் கேட்டாலும் சமையலறையில் பூனை புகுந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு வந்து நன்றாகத் தூங்கிவிடுவதும் உண்டு. வெளி யில் போனவர்கள் வந்து கத வைத் தட்டிப் பாட்டியை எழுப் பும்பொழுது போகும்பொழுதே பூட்டிவிட்டு சாவியைக்கையோடு கொண்டுபோயிருக்கலாமே என்று எண்ணவேண்டிவரும்!

பூட்டும் சாவியும் வீட்டின் பாதுகாப்புக்காக வந்தவைக ளானாலும் அவைகள் கணவன், மனைவி, குடும்பர் இந்த இடங்க ளிலே எவ்வளவு முக்கியமாகி விட்டது. வீட்டுக்கு வீடு வாசற் படி இருந்தாலும சரி, இல்லாது போனாலும் சரி. பூட்டும் சாவி யும் இல்லாமல் இருக்குமா? குடித்தனம் உள்ள வீடாயிருந் தாலும் இல்லாவிட்டாலும் பூட் டும் சாவியும் இருக்கத்தான் இருக்கிறது. வீட்டைக் வாட கைக்கு விடுவதற்குச் சம்மதமாக சாவிதானே கைமாறுகிறது. வாடகையை வைத்துவிட்டு மறு வேலை பார், என்னும் கட்டத் தில் கூட சாவிக்குள்ள மதிப்பு குறைவதில்லை. வாடகையைக் கொடுக்காமல் மாதக் கணக் காய்த் தட்டிக்கழிக்கலாம். சாவி யைக் கொடுத்துவிட்டால் ஒரு நாள் கூடத் தட்டிக்கழிக்க முடியாது.

ஒரு காம்பவுண்டுக்குள் ஒன் றுக்கு மேற்பட்ட குடித்தனம் நடப்பதானல்! வெளிக் 'கேட்' சாவியை யாரிடம் கொடுப்பது என்று வீட்டுக்காரன் தயங்கு கிறன்- அப்படி யாரிடமாவது அவன் கொடுக்கப்போனல் அவர்கள் பாம்பைக்கண்டு அல றுவதுபோல் அலறுகிறார்கள். வேண்டாம் சாமி, அந்தத் தொல்லையெல்லாம் நமக்கு என்று விஸ்வாமித்திரர் குழந் தையை திரஸ்கரித்ததுபோல் மறுத்து விடுகிறார்கள். காரணம் பக்கத்து விட்டுக்காரரிடம் ஆகப் போகும் சண்டைகளில் இந்தக் 'கேட்'சாவி ஆரம்பசண்டைக்கு வித்தாகிவிடும் என்ற பயம் தான்!

நம் வாழ்விலே நம்பிக்கைக் கும் அவ நம்பிக்கைக்கும், சண் டைக்கும், அன்னியோன்யத் திற்கும் எல்லாவற்றிற்குமே காரணமாக அமைந்துவிட்ட பூட்டு சாவி எப்பொழுது வந் தன என்று சரித்திர ஆதார மிருக்கிறதா என்று ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. கதவு களுக்குத் தாழ்ப்பாள் இருந்தசா கத்தான் சம்பவங்கள் கதை யாக வருகின்றனவே யொழிய பூட்டும் சாவியும் இருந்ததாகத் தெரிகின்றனவா? பரவைநாச்சி யார் தாழ்ப்பாள் போட்டதும், ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்ட

தும், இன்னும் இது மாதிரியான தாழ்ப்பாள் விஷயங்களாகவே இருக்கின்றனவே யொழிய பூட்டுப் போட்டதும் திறந்ததும் பற்றிய பேச்சைக்காணோம். வேதாரண்யம் கதவைத் திறக்கப்பட்டதுங்கூட பதிகம் பாடித்தான் நடந்ததாம். ஆகவே சாவியில்லை என்று தெரிகிறது. சாவியில்லை என்றால் பூட்டுந்தானே இருந்திருக்காது. சாவியும் பூட்டும் எப்பொழுது வந்தன என்பதைவிட சாவியும் பூட்டும் இல்லாத காலத்தைப் பற்றிய ஆதாரம் இருக்கிறது. தமிழர்கள் பழம் பெருமையை விளக்கும் பொழுது எந்த வீட்டுக்கும் கதவில்லை, பூட்டில்லை என்ற பேச்சு வருகிறது. யானைகட்டிப் போரடிக்குமோர்வளம் கொழித்தால், இல்லை என்பது எங்கே யிருக்கப்போகிறது? திருட்டுத்தான் ஏன் ஏற்படுகிறது?

கதவு, தாழ்ப்பாள் ஏற்பட்டதெல்லாம் பஞ்சம் படையெடுப்புக் காலங்களாயிருக்கலாம். கள்ளர்களுக்காக ஏற்பட்ட தாழ்ப்பாளை காதலர்கள் தங்கள் உடலுக்கும் பயன்படுத்தியிருக்கலாம், பூட்டும் சாவியும் எப்பொழுது வந்ததோ இன்னும் சில கோயில்களில் கல் பூட்டுக்கள் இருக்கின்றன உண்மையாகவே அவைகள் கள்ளர்கள் இல்லாத காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். இல்லையேல் பூட்டை உடைக்கத்தெரியாத கள்ளர்களாக இருந்திருக்க வேண்டும் அவைதப்பி இன்னும் சில கோயில்களில் இருக்கின்றன. அந்தப் பூட்டுக்களை இந்தக் காலப்பூட்டுகளோடு ஒப்பிடமுடியாதுதான். எனினும் வேலைப்பாட்டைப் புகழலாமல்லவா?

இந்தக் காலத்தில் எல்லாம் பூட்டு மயம். உள்ளே யொரு பூட்டு, வெளியே ஒரு பூட்டு, கதவு உள்ள இடமெல்லாம் பூட்டு. பெட்டி, அலமாரி, பலகார டின், பழைய புத்தகப்பெட்டி, வீட்டுக்குள்ளேயிருக்கும் பணப் பெட்டி, தெருவில் இருக்கும் உண்டியல் பெட்டி எல்லாம் பூட்டுமயம். இத்தனை பூட்டுகளுக்கும் இவற்றைவிட அதிகமான சாவிகள். இவற்றைப் போன்ற போலிச் சாவிகள் வேறு. இவை கள்ளர்களிடம் இருக்கும்; அல்லது வீட்டுப் பிள்ளைகளிடமும் இருக்கும். எல்லாம் பெட்டியை உடைக்காமல் செய்யும் காரியங்களுக்காகத் தான்.

சம்மட்டி, கடப்பாரைகளினால் உடைக்கப்படாதது, திருட்டுச் சாவிகளினால் நீக்கப்படாதது இதுமாதிரியான பூட்டு விளம்பரங்களைப் பார்க்கிறோம். இவற்றை வாங்கிப் போட்டு சாவி காணாமல் போய்விட்டால் பெட்டியை உடைக்கவேண்டி வரும். இன்னும் ஒரு வேடிக்கை அமுக்கும் பூட்டினால் ஏற்படுவதுண்டு. பெட்டியை மூடும் பொழுது சாவியை உள்ளே வைத்து அழுத்திவிடுவார்கள். பிறகுதான் சாவி உள்ளே அகப்பட்டது தெரியவரும். இப்பொ

மூது எல்லோரும் கள்ளர்களுக்கே எமனுக இருக்கும் பூட்டுக்களைத்தேடி வாங்குகிருர்கள். பூட்டு தயாரிப்பாளர்களும் கூட அம்மாதிரிதான் தயாரிக்கிருர்கள். அவர்கள் தயாரிக்கும் பூட்டுக்கள் அனந்தம். ஆபினும் வாய்ப் பூட்டுபோன்றவைகளைத் தயாரித்ததாகத் தெரியவில்லை.

அழுது அடம்பிடித்துக் கண்ணீர் சிந்தி கணவன் மனத்தோடு பணத்தையும் கரைத்து வாங்கி வைத்த நகை, புடவைகளை சினிமாவுக்கோ லேடீஸ் கிளப்புக்கோ போன சமயத்தில் திருட்டுப்போய்விடும் என்ற நிலை எற்பட்டால் எந்தப் பெண்மணி எவ்வளவு நாகரிகம் கற்றுக் கொண்டவளாக இருந்தாலும் வாசற்படி விட்டுத் தாண்டமாட்டாள். இந்தப் பூட்டையும் சாவியையும் நம்பித்தான் சினிமாவென்ன, காசி, ராமேசுர யாத்திரைகூடப் போய்வருகிருேம்.

பூட்டும் சாவியும் சமூகத்திலே பெருகி வரும் கள்ளர்களின் சாமர்த்தியத்திலிருந்து நம் பொருளுக்குப் பாது காப்பு அளிக்கத் தோன்றியவைதான். மனிதன் களவை அறிந்த காலத்திலேயே பூட்டின் பிறப்பு ஆரம்பமாகிவிட்டதெனலாம். இன்றைய பூட்டின் திறமையும் வலிவும் கள்ளர்களின் சாமர்த்தியத்தோடு போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்றன. பூட்டின் வாழ்வு எப்படியெல்லாம் முன்னேறுமோ யார்கண்டது?

—'உதயன்'

ஒரே பதில்

பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கிடைக்கும் விண்ணப்பங்களில் சில விநோதமானவை. நம் நாட்டில் "அம்புலிமாமனைப் பிடித்துக் கொடு" என்பதைக் குழந்தைகளின் விளையாட்டுப் பேச்சாகக் கருதுகிருேம். ஆனால் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விண்ணப்பங்களை அனுப்பும் அநேகர் சந்திர மண்டலத்தில் குடியேறுவதற்கும், விவசாயத் தொழில் செய்வதற்கும், சுரங்கவேலை செய்வதற்கும் பூமியைக் கோருகிருர்கள்.

இவற்றிற்கெல்லாம் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரே பதில்தான் அளிக்கிருர்கள். தாங்கள் விரும்பும் ஸ்தலத்தை பார்வையிட்டிருக்கிருேமென்றும், அதன் சர்வே நம்பர், நான்கெல்லைகள் எவையென்றும் திட்டமாய்க் குறிப்பிடுபவர்களுடைய விண்ணப்பங்களையே ஆதரிக்க முடியுமென்பதுதான் இந்தப் பதிலாகும்.

நம் நாட்டில் கங்கையையும் காவிரியையும் மாதா என்று அழைக்கிறோம். இத்தாலி தேச 'போ' நதியை பிதாவென்று அழைக்கிறார்கள். இம்மாதிரி அருமைப் பெயர் பெறாத ஒரு நதி தென் அமெரிக்காவில் ஓடுகிறது.

ராக்ஷஸ நதி

●

நாலாயிரம் மைல் நீளமுள்ள ஒரு நதி தென் அமெரிக்காவில் ஓடுகிறது. இதில் சேரும் உபநதிகள் பாயும் தேசங்களையெல்லாம் சேர்த்துக் கணக்கிட்டால் இந்தியாவினுடைய மொத்த விஸ்தீரணத்தைபோல் நான்கு மடங்கு அதிகமான பிரதேசமாகும். சமுத்திரத்தில் சங்கமாகும் இடத்தில் இந்த நதியின் அகலம் 200 மைல்கள் இந்த நதியில் 1100 உபநதிகள் சேருகின்றன. இந்த உபநதிகளில் பத்து, பதினைந்து நதிகள் 1000 மைல்களுக்கு மேல் நீளமானவை. இந்தநதியின் நீர்ஒவ்வொரு மணி நேரத்திலும் 60 லட்சம் கோடி காலன் சமுத்திரத்தில் பாய்கிறது.

சமுத்திரத்தில் சங்கமமாகுமிடத்திலிருந்து நூறு மைல் தூரம் வரையிலும் இந்த நதி பாய்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்த நதிதான் அமேஜான் நதி சமுத்திரம் சங்கமமாகுமிடத்திலிருந்து நதிவழியாகப் 2400 மைல் தூரம்வரை உள்நாட்டிற்கும் கப்பல்கள் தாராளமாய் வரலாம்.

2400 மைல்களுக்கு கப்பல் வந்தாலும் நதியின் ஆழம் 120 அடிவரை உள்ளது.

மழைக்காலத்தில் இந்நதியில் செல்லும் கப்பலுக்கு எப்போதும் அபாயம் ஏற்படும்.

பிரம்மாண்ட விருக்ஷங்களை அடித்துக்கொண்டே இந்த நதி வரும், மழைக் காலத்தில் இந்த நதியில் ஏற்படும் வெள்ளப் பிரவாகத்தினால் இந்த நதியைச் சுற்றியுள்ள அநேக பிரதேசங்களும் ஒரே வெள்ளக்காடாகி விடும்.

இந்த நதியிலே ஆயிரக்கணக்கான 'மிதக்கும் தீவுகள்' உள்

ளன. வெள்ளத்தின்போது நதி
யில் ஏற்படும் பிரவாகத்தில்
மிதந்துவரும் விருக்ஷங்கள், குப்
பைகள், மண் இவையெல்லாம்
சேர்ந்தே இந்த 'மிதக்கும்' தீவுக
ளாகின்றன.

இந்த நதி தீரத்தில் வசிப்பவர்
கள் இத்தீவுகளில் கோடைக்
காலங்களிலே உல்லாசமாகக்
காலங்கழிப்பதுண்டு. ஆனால்
இந்தத் தீவுகளை உபயோகிப்
பது மிகவும் அபாயகரமானது.
நதியின் மிதக்கும் வேறு விரு
க்ஷங்களின் மீதோ மற்ற தீவு
களின் மீதோ இந்தத் தீவுகள்
மோதினால் இந்தத் தீவுகள்
தகர்ந்து உல்லாச வாசிகள்
அமேஜான் நதியில் முழுக
நேரிட்டால், இவர்களை ஆண்ட
வன்தான் காப்பாற்றவேண்டும்.
ஏனெனில் இந்நதியில் கூட்டங்
கூட்டமாக முதலைகளும் மனித
னைக்கூட அப்படியே விழுங்கி
விடும் ஒருவகை மீன்களும்
ஏராளமாய் உண்டு.

மாதா மாதம் இந்த நதியில்
ஒரு பொங்கும் அலை வீசுகிறது.
இந்த அலை அடிக்கும்போது
அமேஜான் நதியின் நீர் 15 அடி
வரை மேலே எழும்பி 1 மணி
நேரத்தில் 45 மைல் வேகத்தில்
மோதுகிறது. கர்ஜனையைப்
போன்ற இந்த அலையின் ஓசை
நதியின் இரு புறத்திலும் வெகு
தூரம் வரைக்கும் கேட்கலாம்.

இந்த அலை மோதுகிற சமயத்
தில், நதியில் மாட்டிக்கொள்ப
வரின் கதியைப் பற்றி சொல்
லவேவேண்டாம். சமுத்திரத்தில்
சஞ்சரிக்கும் பெரிய மீன்களெல்
லாம் இந்நதியில் இரண்டாயிரம்
மைல்கள் வரை உள்நாட்டிற்கு
வருகின்றன.

நதி வர்க்கத்தில் அமேஜானை
ஒரு ராக்ஷஸன் என்றே கூற
வேண்டும். ஆனால் இந்த நதிக்
கும் இந்த நதியைச்சேர்ந்த பிர
தேசத்திற்கும் இயற்கை
வனப்பு ஏராளமாயிருக்கிறது.
இந்த நதிக்கரையில் வளரும்
தாவரவர்க்கங்களுக்காக ஆயிரக்
கணக்கான தாவரசாஸ்திர நிபு
ணர்கள் இந்நதி ஓடும் பிரதேசங்
களுக்கு ஆராய்ச்சி செய்யப்
போவதுண்டு. ஆராய்ச்சியின்
உற்சாகத்தில் நூற்றுக்கணக்
கான நிபுணர்கள் நதியிலே
உயிரிழந்திருக்கின்றனர்.

இந்த நதிப் பிரதேசங்களில்
பூச்சி, பிராணிகளின் இனங்
கள் அமோகம். வண்ணாத்திப்
பூச்சிகளில் அநேகம் பறவை
களைப்போன்று மிகப் பெரியதா
யிருக்கும். நூற்றுக்கணக்கான
பறவை யினங்களையும் பாம்பி
னங்களையும் இந்த நதி தீரத்தில்
காணலாம்.

இந்த நதி ஓடும் பிரேஜில்
தேசம் வெப்பமண்டலத்தில்
இருந்தாலும் இத்தேசத்தின்
உஷ்ணம் அவ்வளவு கடுமை
யானதல்ல. எந்தப் பருவக்
காலத்திலேயும் மனிதனால்
தாங்கமுடியாத உஷ்ணம் இருப்
பதேயில்லை. இந்தப் பிரதேசத்து
சீதோஷ்ணநிலை மனிதனுக்கு

ஆரோக்கியத்தைத் தரவல்ல தாயிருக்கிறது.

இந்தியாவைப்போல் ஜனத் தொகை அதிகமானதால் கஷ்டப்படும் தேசங்களிலிருந்து ஜனங்கள் அமேஜான் நதிப் தீரப் பிரதேசங்களுக்குச் சென்று சௌகரியமாய் வாழலாம்.

இந்நதி தீரத்திலுள்ள வளப்பமான இடத்திலெல்லாம் பயிர்த் தொழில் செய்தால் உலகிலே உணவுப் பஞ்சத்தை அறவே ஒழித்துவிடலாம்.

தாய் வேண்டுவோருக்கு தாயை அளிக்கத் தயார்!

லண்டன் நகரத்திலுள்ள குழந்தைகளுக்கு லண்டன் நகர சபையார் ஒரு நல்ல ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஒரு குடும்பத்தில் தாயாரான ஸ்திரீ திடீரென இறந்துவிட்டால் அக் குடும்பத்தின் குழந்தைகளைப் பராமரிக்கத் தற்காலீகத் தாய்மார்கள் சிலரைத் தயாராக வைத்திருக்கின்றனர் நகரசபையார். 46 வயதிலிருந்து 58 வயதுவரையுள்ள மூன்று ஸ்திரீகளை இதற்கென்று நியமித்துள்ளனர்.

எந்த வீட்டில் திடீரென ஒரு தாயின் சகாயம் தேவையாயிருக்கிறதோ அந்த வீட்டிற்கு ஒரு நிமிஷங்கூட தாமதிக்காமல் இவர்கள் செல்லவேண்டும். இவர்களின் சேவை ஒரு மணி நேரத்திற்கோ அல்லது 10 தினங்களுக்கோ அல்லது 10 மாதங்களுக்கோ தேவையாயிருக்கலாம். தேவையான நாட்கள் இந்த வீட்டிலிருந்து குழந்தைகளுக்கு உணவு முதலியவற்றை அளிப்பதும் அன்பாக பராமரிப்பதும் சமையல், கடை சாமான் வாங்குவது போன்ற வீட்டு வேலைகளை அக்கறையுடன் கவனிப்பதும்தான் இவர்களுடைய வேலை.

இவர்களுக்கு வாரத்திற்கு 150 ரூபாயிலிருந்து 180 ரூபாய் வரை சம்பளம் கிடைக்கும். இந்தச் சம்பளத்தில் இவர்கள் வேலை செய்யும் குடும்பத்தாரால் எவ்வளவு கொடுக்கமுடியுமோ அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு மீதியை நகரசபையாரிடமிருந்து பெறவேண்டும்.

ஆயுள் பூராவும் மகத்தான சாதனைகளைச் செய்யும் பெரியோர்களின் ரகசியம்.

ஓய்வற்ற வாழ்வு நோயற்ற வாழ்வை அளிக்காது

புகழ்பெற்ற பிரெஞ்சு வீர நெப்போலியனைப் பற்றி ஒரு கதையுண்டு. போர்க்களத்தில் மிகப் பெரிய யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது கூட நினைத்த மாத்திரத்தில் தன் குதிரை மீது இருந்தவாறே சற்றுநேரம் இவர் நித்திரை செய்வாராம். மிகப்பெரிய காரியங்களை நிர்வகிக்கும் பொழுது அதனால் தேகம் களைப்படையும். இம்மாதிரிக் களைப்படையாமல் தேகத்தைப் பாதுகாப்பவர்கள் அடையும் நன்மைகள் இரண்டு ஒன்று காரியசித்தி, மற்றொன்று ஆயுள் விருத்தி. இதனால்தான் பெரிய மனிதர்கள் அவர்கள் ஈடுபட்டிருக்கும் காரியங்கள் எவ்வளவு முக்கியமாக இருந்தாலும் இடையில் அந்தக் காரியங்களை மறந்து ஏதாவது கேளிக்கைகளிலோ அல்லது அந்தக்காரியங்களுக்கு சற்றும் சம்மந்தமில்லாத வேறு ஏதேனும் காரியங்களிலோ ஈடுபடுகிறார்கள். இம்மாதிரி ஈடுபடுவதனால் அவர்களுக்கு ஓய்வு கிடைப்பது மன்னியில் களைப்படைந்த தேகம் உற்சாகத்துடன் விளங்குகிறது. காந்தியடிகளும் "120 வயது வரையிலும் இருப்பேன்" என்று அடிக்கடி தைரியமாகக் கூறிக்கொண்டிருந்ததின் அடிப்படை இது தான்.

இவர் ஈடுபட்டிருந்த வேலை இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுப்பதாகும். இதையொட்டிய கவலைகளுக்கு எவ்வளவு வலிமை வாய்ந்த மனிதனும் பலியாவான். இம்மாதிரி பலியாகாமலிருப்பதற்காக காந்தியடிகள் ஆகார சீர்திருத்தம், ஹரிஜனத் தொண்டு, மாதர் முன்னேற்ற சேவை கோசம்ரக்ஷணை சாக்காவில் நூல் நூற்

றல், பாஷைப் பிரச்னைகள் இம் மாதிரி அநேக வேலைகளிலே ஓய்வைக் கண்டார். வாழ்க்கையில் ஈடுபட்ட சாதாரணமனிதர்களுக்குச் சற்றுநேரங்கூட ஓய்வெடுததுக்கொள்ள மனம் வருவதில்லை. ஓய்வெடுக்க மனம் வராமலிருப்பதை அவர்கள் தங்கள் குடும்பத்திற்குச் செய்யும் கடமையாகக் கருதுகின்றனர். ஓய்வெடுக்காமல் இருப்பதால் அவர்கள் தேகம் சீக்கிரம் பலவீனமடைந்து இயற்கை அன்னை அளித்த பூரா ஆயுளைக் கூட அனுபவிக்க முடியாமல் போகிறது.

வாழ்கக்கையை ஒட்டின கடினமான கடமைகளிலிருந்து சற்று ஓய்வெடுத்துக் கொள்பவர்கள், இந்தக் கடமைகளை ஓய்வெடுத்துக் கொள்ளாதவர்கள் நிர்வகிப்பதைவிடச் சிறப்பாக நிர்வகிக்கலாமென்ற உண்மையை நம் நாட்டுமக்கள் இன்னும் உணரவில்லை. இந்த உணர்ச்சி பரவாததால் நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அநேகம்.

இரண்டாம் மகாயுத்தத்தில் ஹிட்லர் ஆக்ரமித்து ஆண்டுவந்த தேசங்களை பிரிட்டிஷார், அமெரிக்கர் முதலானவர்களின் ராணுவம் ஆக்ரமிக்கத்தொடங்கியது முக்கியமான கட்டம். யுத்தம் தொடங்கி ஒன்றிரண்டு வருஷத்தில் எவ்வளவு ராஜ்யங்களை அடக்கி ஆண்டான் என்பது நாம் எல்லோரும் நன்கு அறிந்ததே.

இந்த ராஜ்யங்களில் சற்றேனும் ஈவிரக்கமில்லாத கொடுங்கோல் ஆட்சியை எவ்வளவு தீவிரமாக நடத்திக்கொண்டிருந்தானென்பதும் நாம் நன்கு அறிந்ததே. இந்த தேசங்களில் எதிரியின் ராணுவம் ஆக்ரமிப்பதென்பது மிகப்பெரிய காரியம். இவ்வளவு மகத்தான காரியத்தை நிர்வகித்தது எவ்வளவு சிரமமென்று சொல்ல வேண்டியதேயில்லை. நிர்வாகியின் உயிரையே பலியாக்கும் மிகவும் அபாயமான காரியமாகும். ஆனல் இதை நிர்வகித்தவர் தற்போதைய பிரிட்டிஷ் பிரதம மந்திரியான சர்ச்சில்துரை ஆவார். இவ்வளவு அரிய பெரிய நிர்வாகத்தினல் உயிரைப் பலி கொடுக்காததன் ரகசியம் இந்தக் கட்டுரையில் கூறியிருக்கும் விஷயம்தான். பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவம் பிரான்ஸை ஆக்கிரமிக்கத் தொடங்கும் நாள் சமீபித்து விட்டது. பிரான்சில் ராணுவம் காலை வைப்பதற்குத் தீர்மானித்திருந்த வேளையும் நெருங்கியது. அந்த வேளை இன்றோ நாளைக்கோ என்றிருந்த ஒருதினம் மாலையில் சர்ச்சிலைச் சந்திப்பதற்கு ஒரு பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரி அவர் இருப்பிடத்திற்குச் சென்றார். இந்த மந்திரிக்கு, மகாநடுக்கம். சர்ச்சில், எத்தனை ராணுவத் தலைவரோடு என்னென்ன ரகசியங்கள் பேசிக்கொண்டிருப்பாரோ, எவ்வளவு நாளாக உண்டு உறக்கமின்றி இருக்கிறாரோ, என்றெல்லாம் நினைத்

துக்கொண்டு தயங்கித் தயங்கி சர்ச்சிலின் அறைக்குள் பிரவேசித்தார்.

இவர் அறையில் பிரவேசித்த உடன் இவர் கண்ட காட்சி இவரைத் திடுக்கிட வைத்தது.

அறையில் ராணுவத் தலைவர் யாரும் கிடையாது. மேஜைமீது மேப் முதலான யுத்த சம்பந்தமான சின்னங்கள் எவையும் கிடையாது. ஒரு சிறு குழந்தைக்கு நூதனமாக ஒரு பொம்மை கிடைத்தால், எப்படி களிப்போடு விளையாடிக் கொண்டிருக்குமோ அவ்வாறு ஒரு புதிய டைப்ரைட்டரை. மேஜை மீது வைத்துக்கொண்டு இரண்டு விரல்களால் அதில் டைப் அடித்துக்கொண்டிருந்தார்.

இந்த டைப்ரைட்டரின் கதை மிக விநோதமானது. சர்ச்சிலுக்கு ஒரு அமெரிக்க ராணுவத் தலைவரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்ததாம். அந்தக் கடிதத்தில் கண்ட அக்ஷரங்களின் அழகு அவருடைய மனத்தைக் கவர்ந்தது. அந்த அக்ஷரங்களை எந்த டைப்ரைட்டரில் அடித்திருந்ததோ அம்மாதிரி ஒரு டைப்ரைட்டர் தனக்கும் வேண்டுமென்று சர்ச்சில் ராணுவத் தலைவரிடம் கோரினாராம். ராணுவத் தலைவர் ஐக்கியநாட்டு ஜனதிபதிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பித்தார். ஐக்கிய நாட்டில் விசாரித்ததில் இம்மாதிரி டைப்ரைட்டர் இன்னும் வியாபாரத்திற்கு வந்தாகவில்லை யென்றும் ஒருவருக்குப் பிரத்தியேகமாக மின்சார சக்தியால் இயங்கும் ஒரே ஒரு டைப்ரைட்டர் தான் செய்திருப்பதாகத் தெரிந்தது.

அமெரிக்க ஜனதிபதி இன்னொரு டைப்ரைட்டரை சீக்கிரமாகத் தயாரித்து ஒரு ராணுவ இலாக்கா ஆகாய விமானத்தில் அனுப்ப ஏற்பாடு செய்தார்.

பிரான்சில் பிரிட்டிஷார்—அமெரிக்கர்கள்—இவர்கள் ஆக்கிரமிப்புக்கு இரு தினங்களுக்கு முன்பு ஒரு ஞாயிறன்று பகல் வேளையில் சர்ச்சிலுக்கு இந்த டைப்ரைட்டர் வந்து சேர்ந்தது.

சர்ச்சில் தன் கையாலேயே டைப்ரைட்டர் வந்த பெட்டியை உடைத்துக்கொண்டிருக்கும் போது ஒரு மின்சார வேலை செய்யும் தொழிலாளியை, சர்ச்சிலுடைய காரியதரிசி தேடிச் சென்றார். அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் மின்சாரத் தொழிலாளி எவரும் கிடைப்பது அரிதாயிருந்தது. முடிவில் ஒரு மின்சாரத் தொழிலாளி மின்சார இணைப்பை ஒழுங்குபடுத்தி சர்ச்சிலுக்கு நவீன டைப்ரைட்டரை ஒப்படைக்கும்போது மாலை வேளையாகிவிட்டது அந்தச் சமயத்தில்தான், மேற்கூறின பிரிட்டிஷ் சர்க்கார் மந்திரி ஒருவர் சர்ச்சிலைச் சந்தித்துப் பேசுவதற்கு அவர் அறையில் பிரவேசித்தார்.

இந்தச் சிறிய விஷயத்தில் மனித வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமான ஒரு கருத்து அடங்கியுள்ளது!

———

[ஒரு சிறுவர் கதை]

மந்திரியைத் தேர்ந்தெடுத்த நாய்க்குட்டி!

•

வீரத்திலே சிறந்து விளங்கிய மன்னன் ஒருவனுக்கு அறிவிலே சிறந்த மதியூகி மந்திரி ஒருவன் இருந்தான். அந்த மன்னனின் ஆட்சியில் மந்திரியின் அறிவுத் திறத்தினால் அமைதியும் ஆனந்தமும் நிரம்பி இருந்தன. கடல் கடந்த பலதேசங்களிலும் மன்னனைப் பற்றியும், மதியூகி மந்திரியாரைப் பற்றியும் புகழ்படப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால், துரதிருஷ்டவசமாக அந்த மதியூகி மந்திரியின் தொடர்ந்த சேவை அந்நாட்டுக்குக் கிடைக்கவில்லை. ஏனெனின் அம் மந்திரிக்குத் திடீரென்று தீராதநோய் ஒன்று வந்துவிட்டது. அரசன் மிகக் கவலைகொண்டு வெளிதேசங்களிலிருந்து வைத்தியர்களை அழைத்தான். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. மதியூகி மந்திரி இறந்து விட்டார்.

ஆனால் இறக்கும் தறுவாயில் மன்னனைக் கூப்பிட்டு, "அரசே, எனக்குப் பிறகும், நாட்டை ஆள்வதற்கு உங்களுக்கு உதவியாக என்னைப்போலவே ஒரு மந்திரி வேண்டும். பணத்தின் துணைகொண்டு எவ்வளவோ பேர்கள் அப்பதவிக்குப் போட்டியிடலாம். ஆனால் அவர்களில் யாரையம் நியமிக்கவேண்டாம். என் வீட்டில் மூன்றுநாய்க் குட்டிகள் உள்ளன. அவற்றில் எது மிகவும் அறிவுள்ளது? ஏன்? என்று நிரூபிப்பவனுக்கே மந்திரிப் பதவியை அளியுங்கள்" என்று கூறி இறந்தார் மந்திரியார்.

அதன்படியே, மறுநாளே இச்செய்தியை நாடெங்கும் அறிவிக்கும்படி செய்தான் அரசன். மந்திரியாரின் வீட்டிலிருந்த மூன்று நாய்க்குட்டிகளும் அரண்மனையில், அரசனது தனிக் கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டன.

எவ்வளவோ பேர் வந்தார்கள். வாய்க்கு வந்தபடி "அதுதான் அறிவில் சிறந்தது" எனறு கூறினார்கள். அரசன் "நிரூபிக்க முடியுமா?" என்றதும் ஆந்தைபோல விழித்தார்கள்.

நாட்கள், மாதங்கள் பறந்தன. வருடமும் ஒன்று இரண்டு என்று ஓடிப் போய்விட்டன. யாருமே நாய்க்குட்டிகளில் எது அறிவிற் சிறந்தது என்று நிரூபிக்க முடியாமல் திண்டாடினார்கள். அரசன் அலுத்துவிட்டான்; "மந்திரியின் யோசனை பயனற்றது......வீண் யோசனை" என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

இந்நிலையில் ஒரு நாள் அரச சபைக்கு மந்திரிப் பதவிக்குப் போட்டியிட ஒருவன் வந்தான். பெரிய பெரிய அறிவாளிகளால் சாதிக்கமுடியாத காரியத்தை இவன் முடிக்கிறானும் என்று எல்லோரும் ஏளனம் செய்தார்கள். ஆனால் அவன் எதையும் லக்ஷியம் செய்யவில்லை.

அரசன் அவன் விருப்பப்படி மூன்று நாய்க்குட்டிகளையும் வரவழைத்தான். நாய்க்குட்டிகளில் இரண்டு வெள்ளை ஒன்று மட்டும் கறுப்பு. அவன் மூன்றையும் சிறிதுநேரம் கவனித்துவிட்டு, அரசன் உத்தரவைப் பெற்றுக்கொண்டு சமையலறைக்குள் சென்றான். அங்கு அரசன் சாப்பிடுவதற்காக குங்குமப்பூ போட்டுக் காய்ச்சப்பட்ட பால் இருந்தது. அதையும் சாதத்தையும் ஒன்றாகக்கலந்து அவற்றை மூன்று சிறிய தட்டுகளில் நிரப்பிக்கொண்டு நாய்க்குட்டிகளிடம் வந்தான்.

பால்சாதத்தின் மணத்தால் கவரப்பட்ட மூன்று குட்டிகளும் அவனை நிமிர்ந்து நோக்கின. அவன் சிரித்துக்

கொண்டே ஒரு தட்டை எடுத்துக் கீழே வைத்தான். அவ்வளவுதான்... இரண்டு வெள்ளைக் குட்டிகளும் அதை நோக்கிப் பாய்ந்தன. இரண்டாவது தட்டை இறக்கினான். அவன் கறுப்புக் குட்டி அதைக் காலி செய்யத் தொடங்கி விரைவில் முடித்தும் விட்டது. ஆனால் இரண்டு வெள்ளைக்குட்டிகளும் முதல் தட்டுக்காக சச்சரவிட்டபடி இருந்தன.

மூன்றாவது தட்டும் இறக்கப்பட்டது. கறுப்புக்குட்டி அதையும் விரைவில் காலிசெய்துவிட்டது. பிறகு சாவதானமாக நாக்கைத் தொங்கவிட்டு அமர்ந்தபடி, சண்டையை வேடிக்கை பார்க்கத்தொடங்கியது. கறுப்புக் குட்டியைத் தூக்கிக்கொண்டு அரசனை அணுகிய அவன், "அரசே, கறுப்புக் குட்டியே அறிவில் சிறந்தது, என்கையிலிருந்த மூன்று தட்டுகளையும் கவனித்த கறுப்புக்குட்டி தனக்கு ஒன்று நிச்சயம் என்று முதல் தட்டுக்குப்போட்டி போடவில்லை. தன் தட்டையும், சாமர்த்தியமாக இன்னொரு தட்டையும் காலிசெய்துவிட்டது அது. ஆனால் மற்ற இரண்டுமோ போட்டி போட்டுக்கொண்டு ஒருதட்டை இழந்துவிட்டன" என்றான்.

அரசன் உள்பட எல்லோரும் இதை ஆமோதித்தார்கள். பிறகு அரசன், அவனை நோக்கி "நீ யார்...? உன் பெயர் என்ன?" என்று கேட்டதும் அவன்: "அரசே, நான் உங்கள் பகைவனான பக்கத்து நாட்டு அரசனின் மகன். என் மூலமாவது இரண்டு நாட்டுக்கும் ஒற்றுமை உண்டாக்க முயன்றேன்" என்றான். அரசன் ஆனந்தம் கொண்டு தன் மகளை அவனுக்குக் கலியாணம் செய்துவைத்து வாழ்த்தினான்.

அறிவுப் பரிக்ஷைமூலம் இரண்டு நாடுகளையும் ஒன்றாக்கத் திட்டம்போட்ட, இறந்த மதியூகி மந்திரியின் மதியை வியக்காதவர் இல்லை.

"ரேவதி"

ராவணனைக் கொன்றது ராம பாணமே அல்ல!

ஆணவத்தால் அழிந்தான் அரக்கன்

●

'எப்போது ஆணவம் உதிக்கிறதோ அப்போதே மனிதனுடைய வீழ்ச்சியும் அவமானமும் தோன்றிவிடுகின்றன' என்று ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. ஆணவம் என்பதை கர்வம் என்று சாதாரணப் பொருளில் நாம் வழங்குகிறோம். 'நான்' என எதை நாம் குறிக்கிறோமோ அதுதான் ஆணவம். நான் என்பதில் தோன்றும் முனைப்பு இருக்கிறதே அதுதான் ஆணவம். இதைத் தான் ஆணவ மலம் என்கின்றன சமய நூல்கள்.

வெகு நாட்களுக்குப் பிறகு எனது நண்பர் ஒருவரைச் சந்திக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். என்னைச் சுற்றிப் பலர் இருக்கிறார்கள். அத்தகைய சமயத்திலே நான் என்ற நினைவு நம் உடலில் செறிந்துநிற்பது இயல்பு. அப்போதுதான் நண்பரைச் சந்திக்கிறோம். நண்பரைக் கண்டதும் நமக்கு அவரிடமிருந்து எத்தகைய மரியாதை கிடைக்கும்? அது நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் எத்தகைய மனோநிலையைத் தோற்றுவிக்கும் என்றுதான் நான் எண்ணுகிறேன்.

நான் என்பது முனைந்து நிற்கும் அந்நிலையில் நண்பரைச் சந்தித்ததில் இயல்பாக ஏற்படக்கூடிய சந்தோஷம் கூட எனக்கு ஏற்படவில்லை.

'நான்' மறைந்துவிட்ட நிலையில் என்ன செய்திருப்பேன்? நண்பரைக் கண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் அடக்க முடிந்திராது. அவரிடம் விரைந்து சென்றிருப்பேன். அவர் தோள்மேல் கைபோட்டு அணைத்துக்கொண்டு அவரோடு அளவளாவுவேன். அந்த மகிழ்ச்சியில் என்னைச் சுற்றியிருப்பவைகளை நான் மறந்தே போய்விடுவேன்.

★

நல்லது. இந்தா "நான்" எங்கே இருக்கிறது? தாயுமானவர் கூறுகிறார்:

காரிட்ட ஆணவக்
கருவரையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவிபோல

ஆணவமாகிய கருப்ப இல்லில் இருந்தே மனிதன் பிறக்கிறான் என்கிறார். மனிதன் பிறப்பதே ஆணவம் ஆகிய கருப்பையிலிருந்துதான் என்பது அவருடைய கருத்து.

இங்ஙனம் பிறந்த மனிதனின் உள்ளும் புறமும் ஆணவம் வியாபித்து நிற்பதில் வியப்பென்ன? கம்பர் உரைப்பதுபோல ஆணவமும்,

ஊனும் உயிரும்
உணர்வும் போல்

உள்ளும் புறமும் பரவி நிற்கிறது.

★

ஆணவத்தை இல்லை என்று ஆக்குவது முடியாத காரியம். ஆனால், இந்த ஆணவத்தையே நம்முடைய உய்வுக்கு வழிகோலுவதாக மாற்றி விடுவதுதான் மனிதனால் செய்யக் கூடிய காரியம். திறமையுள்ள பயிற்சி பெற்றவன் மின்சாரத்தைத் தனக்கு அடிமையாக்கி, தனக்கு

வேண்டியதை எல்லாம் அதைக்கொண்டு செய்து கொள் கிருன். திமிர்பிடித்தவனே விஷயமறியாதவனே அதைத் தொட்டால் உயிரைப் போக்கிவிடுகிறது.

ஆணவமும் அங்ஙனம் தான். மனிதன் ஆணவத் தையே அடிமையாக்கிக்கொண்டு, மெய்யான இன்ப நிலையை அடைந்துவிடுகிருன்.

எனக்காவார் ஆரொருவரே
எம் பெருமான்
தனக்காவான் தானே
மற்றல்லால்—புனக்காயா
வண்ணனே உன்னைப்
பிறறியார் என்மதிக்கு
விண்ணெல் லாம்உண்டோ வாலை?

என்று இறைவனை அடைந்தமைக்காகத் திருமழிசை யர்ழ்வாரைத் தமக்குத் தாமே சபாஷ்போட்டுக் கொள்ள வைக்கிறது. "எனக்கு யார் நிகர்?" என்று ஆணவத் தின் சிகரமாக நின்றும்கூட ஆழ்வாருக்கு இறைவனருள் சித்திக்கிறது. இது எங்ஙனம்?

ஆழ்வாருடைய ஆணவம் 'இறைவனைப் பெற்றுவிட் டோம்' என்பதில்தான். அங்கே "நான்" என்ற பதத் தின் பொருள் தேய்ந்துபோய், அதன் முனைப்பும் மழுங்கி விட்டது. இறைவன்தான் ஆழ்வாருடைய "நான்" என்பதற்கு ஒளியும் பொருளும் தருகிருன். ஆகவே தான் ஆழ்வாருக்கு உய்வு கிடைத்தது.

★

மற்ருேர் வித ஆணவத்துக்கு உதாரணம் ராவ ணன் தான். ராமாயணம் அவனை ஆணவத்தின் சிக ரமாகத்தான் காட்டுகிறது.

ராவணன் எத்தனையோ தீமைகளைச் செய்தான். அவற்றுக்கெல்லாம் ஒரு கொடுமுடிபோல, தன்பால் நேயமிலாதவளும் மாற்றான் மனைவியுமான சீதையை வெளவினான்.

ராவணனுடைய தவறைப் பலபேர் எடுத்துக் காட்டுகிறார்கள். ஒன்றையும் அவன் தன் செவிகளில் கூட வாங்கிக்கொள்ளவில்லை.

விபீஷணன் தனக்குப் புத்தி சொன்னபோது, காது கொடுத்துக் கேளாதது மட்டுமல்ல; அவன் தன் செல்வத்தைக் கொள்ளைகொள்ளச் சூழ்ச்சி செய்கிறான் என்றும் குற்றம் சுமத்துகிறான்.

ஏழைநீ என்பெரும்
செல்வம் எய்திப்பின்
வாழவோ கருத்தது ?
வரவற் றாகுமோ ?

என்று கோபத்தோடு எள்ளி நகையாடுகிறான்.

விபீஷணன்தான் சிலர் கூறுவதுபோல 'சகோதரத் துரோகி ?' ஆனால், அவனுக்காகத் தன் உயிரையே இசைந்து பலி கொடுத்த தம்பி கும்பகருணன் கூறிய நல்லுரைகளையாவது கேட்டானா ?

வென்றிவண் வருவனென்று
உரைக்கி லேன்; விதி
நின்றது பிடர்பிடித்து
உந்த நின்றது
பொன்றுவன் பொன்றினால்
பொலன்கொள் தோளியை
நன்றென நாயக
விடுதி நன்றரோ

என தம்பி போர்க்களம் செல்ல விடைபெற்றபோது சொன்ன வார்த்தையை அத் தம்பி தன் உயிரைப் பலி கொடுத்தபோதாவது கருத்தில் கொண்டானா ?

அறவுரை கூறும் கும்பகருணன் ராவணனிடம் பட்ட பாடுகள்தான் எத்தனை?

"மனிதரையும் குரங்குகளையும் கும்பிடுவது உன்னுடைய தம்பிக்கும் (விபீஷணன்) உனக்கும்தான் தகும்;" என்றும் "நீ யார் அறிவுடைய அமைச்சனா?" என்றும் சொற்களால் தொளைக்கிறான்.

உறுவது தெரிய அன்று
உன்னைக் கூயது
சிறுதொழில் மனிசரைக்
கோறி சென்றெனற்கு
அறிவுடை அமைச்சு நீ
அல்லை, அஞ்சினை
வெறிவிதுன் வீரம்.

என்று கும்பகருணனின் ஆண்மையையே பழிக்கிறான். எல்லாம் ராவணனுடைய மனத்துக்கொத்த ஆலோசனையைச் சொல்லாத பாவத்துக்காகத்தான் கும்பகருணனுக்கு இத்தனை இகழ்ச்சி.

★

கடைசியாக ராவணனின் ஆசை மகனும், இந்திரனையே வென்றவனுமான மேகநாதன் கூட ராவணனுக்கு அறவுரை பகர்கிறான்.

மேகநாதன் ராவணனின் பட்டத்திளவரசன். மகா வீரன். இலங்கையை எரித்த அனுமனைக் கட்டிப்பிடித்து தந்தைமுன் நிறுத்தியவன். லட்சுமணனையும் ராமனையும் வானரங்களையும் நாகபாசத்திலே பிணித்தவன் லட்சுமணனை பிரம்மாஸ்திரத்திலே மூர்ச்சிக்க வைத்தவன். அத்தகைய தீரன் கூறுவதுகூட ராவணன் காதில் விழவில்லை,

இந்திரஜித் தன் முடிவுக்குக் காரணத்தையும் கூறுகிறான். மிக வலிமைமிக்க நாராயணாஸ்திரம்கூட ராமனை

ஒன்றும் செய்யவில்லை என்றால், அவனை வெல்வது என்பது முடியக்கூடிய காரியமா?

"நிலம்செய்து விசும்பும்
செய்து நெடியமால்
படைகின் றானே
வலம்செய்து போயிற்று
என்றால் மற்றினி
வலியது உண்டோ ?"

என்று கேட்கும் இந்திரஜித் தந்தையை

" குலம்செய்த பாவத்
தாலே கொடும் பகை
தேடிக் கொண்டாய் "

என நோகிறான்.

இதைச் சொல்லும்போதே இந்திரஜித்துக்கு ராவணனுடைய குணம் நினைவுக்கு வந்துவிடுகிறது. லட்சோப லட்சம் அரக்கர்களை, உயிரினும் இனிய தம்பியை–கும்பகருணனை காதல் புதல்வரை, எல்லாம் பலிகொடுத்தும் சீதையை விடாமல், ஆணவத்தின் பேருருவாய் நிற்பவனல்லவா அத்தந்தை? யமனுக்கும் யமனாய் நின்ற கும்பகருணனையே "வெறிவிதுன் வீரம்" என்று இகழ்ந்தவனல்லவா? தன்னை மட்டும் கொடிய சொற்களால் துன்புறுத்தாமல் விடுவானா?

இந்தச் சிந்தனையுடன் வெகு ஜாக்கிரதையாகவும் பக்குவமாகவும் தன் கருத்தைத் தந்தையிடம் வெளியிடுகிறான் மைந்தன்,

ஆதலால் அஞ்சி
னேனென்று அருளலை.

என்று பலமாகப் பீடிகை போட்டுக்கொண்டபின்

ஆசை தான் அச்
　　சீதைபால் விடுதி
யாயின் அனையவர்
　　சீற்றம் தீர்வர்
போதலும் புரிவர்
　　செய்த தீமையும்
பொறுப்பர்

என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வரும்போதே, ராவண னின் நெற்றி நெரிவதை இந்திரஜித் கவனித்து விடுகிறான். தன் பேச்சைத் தட்டென்று நிறுத்தி “நான் எனக்காகச் சொல்லவில்லை 'உன்மேல் காதலால் உரைத்தேன்' என்று முடித்துவிடுகிறான்.

இதற்கு ராவணன் கூறும் பதில் என்ன? “முன்னே போரிட்டு மாண்டவர்கள் வெல்வார்கள் என்று நான் எண்ணியிருக்கவில்லை. இல்லை, இன்னும் உயிரோடு இருக்கிறார்களே, அவர்கள் போரிட்டு, வெற்றி பெற்று விடுவார்கள் என்றும் நான் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. நீ அந்த மனிதர்களையும் குரங்குகளையும் வென்று சீதையை எனக்குத் தரப்போகிறாய் என்றும் நான் நம்பிக் கொண்டிருக்கவில்லை” என்று தீயன்ன சொற்களைக் கூறும் ராவணன்.

என்னையே நோக்கி
　　யானிந் நெடும்பகை
தேடிக் கொண்டேன்

என்று அவன் எப்படிப்பட்டவன்?

'கூற்றையும் ஆடல் கொண்டேன்' என்று தருக்குடன் அவனே தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்கிறான். மேலும் அவன் பகர்வன, அவனுடைய ஆணவத்தை அளந்து காட்டுகின்றன.

விட்டனன் சீதை
　　தன்னை என்றலும்
விண்ணோர் நண்ணி
　　கட்டுவ தல்லால்
என்னை யானெனக்
　　கருது வாரோ ?

ராவணனுடைய அகங்காரம் அறிவற்றவனுடைய கர்வம் அல்ல. மாற்றான் பலமும் தன் பலமும் உணர்ந்தவனே அவன். ராமனுடைய பலத்தை அவன் முதல் நாள் போரிலேயே அறிந்துகொண்டான்.

இதை ராவணனே மாலியவானிடம் வெளிப்படுத்துகிறான் :

தீயையும் தீய்க்கும்
　　செல்லும் ; திசையையும்
தீய்க்கும் ; செப்பும்
　　வாயையும் தீய்க்கும்;
உன்னின் மனத்தையும்
　　தீய்க்கும் மன்னோ

என ரகுவீரனுடைய வாளி நீலமேனி நிருதர்கோனை நடுநடுங்க வைத்திருக்கிறது.

தன்னுடைய பிரதாபத்தை அளந்துகொண்டே வரும்போது ராவணனுக்கு ராமன் வாளியின் ஞாபகம் வந்துவிடுகிறது. உடனே பொய் வேதாந்தமும் பிறக்கிறது. எப்படியும் நான் சாகத்தான் போகிறேன். சீதையைத் திருப்பி அனுப்பினாலும் அந்த அவமானத்தால் குன்றி சாகவே போகிறேன். ஆகவே சாவது முடிவு. ஏன் அவமானத்தால் சாகவேண்டும்?

பட்டனன் என்ற
　　போதும் எளிமையில்
　　படுகி லேன் யான்.

எட்டினோடு இரண்டு
மான திசைகளை
எறிந்து வென்றேன்.

பத்துத் திசைகளிலும் ஜெயக்கொடி நாட்டிய தச கண்ட ராவணன் கேவலம் மனிதருக்கும் குரங்குகளுக்கும் பணிவதா?

ராவணனுடைய ஆணவத்தின் அளவைக் கண்ட பேர்து அவனைக் கொன்றுவிட்டுத்தான் அது நீங்குமோ என்று நாம் திகைக்கிறோம்.

ராமனை யார் என்று உணர்ந்த பின்புங்கூட ராவண னுடைய களைப்பு நீங்கவில்லை என்றால் வேறெப்படி எண்ணுவது?

சிவனோ அல்லன்;
நான்முகன் அல்லன்;
திருநெடு மாலாம்
அவனோ அல்லன்
மெய்வரம் எல்லாம்
அடுகின்றான்!
தவனோ என்னில்,
செய்து முடிக்கும்
தரனல்லன்.
இவனோ தான் அவ்
வேதமுதற்கா ரணன்?

என்ற எண்ணம் எழும்போதே, 'யாராயிருந்தால் என்ன? நான் எட்டினோடிரண்டுமான திசைகளை எறிந்து வென்றவன்' என்ற முனைப்பும் தோன்றிவிடுகிறது.

யாரே னும்தான்
ஆருக. யான் என்
தனியாண்மை

பேரேன் நின்றே
வென்றி முடிப்பன்
பெயர்கில்லேன்

என்று வித்தகம் பேசி, ஆணவத்துக்கு தன் உயிரையே பலி கொடுக்கிறான்.

விபீஷணனைக் குற்றம் சுமத்தும்போது ராவணனின் ஆணவத்தின் முதல்படியைக் காட்டும் கவிஞர் பெருமான் படிப்படியாக அதன் வளர்ச்சியைக் காட்டுகிறார். வேத முதற் காரணனே ராமன் என்று தெரிந்த பின்பும் ராவணன் எண்ணத்தின் போக்கு, அவன் ஆணவத்தின் சிகரத்தை எட்டி விட்டதையே காட்டுகிறது. இங்ஙனம் படிப்படியாக ஆணவ வளர்ச்சியைச் சித்திரிக்கும் கம்பர், அதன் வீழ்ச்சியையும் காட்டுகிறார்.

ஷெல்லி என்ற கவிஞன் "மனிதனுடைய ஆணவம் இருக்கிறதே அது தன்னுடைய அறியாமையை மறைக்கப் பல சீரிய பெயர்களைச் சூட்டுகிறது" எனகிறான். ராவணனுடைய ஆணவமும் இங்ஙனந்தான் தன்னுடைய அஞ்ஞானத்தையும் மறைக்க வீரம் பேசுகிறான்; வேதாந்தம் பேசுகிறான்,

ஆனால் உண்மையில் அதிகாயன் இறந்தபோதே தானிய மாலை ராவணனை அவனுடைய ஆணவத்தைக் சொன்று விட்டாள்.

உம்பி உணர்வுடையான்
சொன்ன உரை கேளாய்.
நம்பி குலக் கிழவன்
கூறும் நலமோராய்.
கும்ப கருணனையும்
கொல்வித்து என் கோமானை
அம்புக்கு இரையாக்கி

விட்டாயே என்று மகனை—அதிகாயனைப் பறிகொடுத்த சோகத்தால் கதறும் அவளுக்கு எதிரே உட்கார்ந்திருக்கும் ராவணனைப் பார்க்கப் பார்க்கப் பற்றி எரிகிறது. சீறுகிருள் :

ஏதையா சிந்தித்து
இருக்கின்ருய் ?

மூவுலகையும் அரசாண்ட மன்னனை நோக்கி மனைவி கூறுகிருள், "என்ன சிந்திக்கிருய் ராவணு?"

எண்ணிறந்த
கோதையார் வேலரக்கர்
பட்டாரைக் கூவாயோ ?

சினத்தில் பரிகாசம் பிறக்கிறது. அப்பரிகாசம் சுடாமலிருக்குமா? "போரிலே இறந்துபட்ட அரக்கர்களை எப்படி உயிர்ப்பிப்பது என்பது குறித்து யோசிக்கிருயா?"

பரிகாசம் மீண்டும் கடுமையான கோபமாக உருவெடுக்கிறது. பயித்தியக்காரா! காமத்தால் பிடியுண்ட நீ பிழைக்கவா போகிருய்?" என்று மேலும் நையாண்டி செய்கிருள்.

பேதையாய்க் காமம்
பிடிப்பாய் பிழைப்பாயோ ?

தானிய மாலையின் தூஷணைகளை எல்லாம் மூவுலகும் அஞ்சும் ராவணன், எட்டிரேண்டிரண்டுமான திசைகளை எறிந்து வென்றவன் வாய்மூடி மௌனியாய்க் கேட்டுக் கொண்டுதானிருந்தான். தானிய மாலையின் வாயை அடக்கவோ அல்லது அவளது கேள்விகளுக்குப் பதில் சொல்லவோ இயலாமல் அவனது வாய் அடைத்துப் போய்விட்டது. கும்ப கருணனை "வெறிவிதுன் வீரம்" என்று பழித்த நா, இந்திரஜித்தினிடம் "என்னையே நோக்கி யான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்" என்று மார் தட்டிய அகங்காரம் தானிய மாலையின் எதிரில் செயலற்று மடிந்துபோய் விட்டது.

ஆம்...ராவணனை ராமன் கொல்லவில்லை அவனது ஆணவத்தைக் கொன்றதன் மூலம் அவனையே அவள் கொன்று விட்டாள்.

மின்சாரத்தைத் தவருக யார் உபயோகித்தாலும் அவரை அது கொன்றுவிடுகிறது. மின்சாரத்தைப் பற்றிய அறிவு தெரிந்தவனுயிருந்தாலும் சரி, தெரியாதவனுயிருந்தாலும் சரி; அதுபற்றி அது கவலைப்படுவதில்லை. சரியான வழியில் உபயோகித்தால் அது மனிதனுக்கு ஆட்பட்டுத் தொண்டு செய்கிறது, தவருகப் பிரயோகித்தால் மரணத்தைத் தருகிறது. ஆணவமும் அப்படித்தான்.

திருமழிசை யாழ்வாருடைய ஆணவம் அவருக்கு மோட்சத்தை அளித்தது. ஏனெனில் அது சரியான வழியில் சென்ற ஆணவம். ஆனல் ராவணனுடைய ஆணவம் அவனை உயிரோடு வைத்தே கொன்றுவிட்டது.

—க. சோமசுந்தரம்

பத்திரிகை உலக அதிசயம்

●

பிரிட்டனிலே பொதுமக்களுக்காக 146 தினசரிப் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. 16 வாரப் பத்திரிகைகள் லண்டனிலிருந்து வெளிவருகின்றன. 17 தினசரிப் பத்திரிகைகள், குதிரைப் பந்தயம், ஹோட்டல் வியாபாரிகள், பாங்கர்கள், முதலிய பிரத்தியேக தொழில்களிலீடுபட்டவர்களுக்காகப் பிரசுரமாகின்றன.

லண்டனிலிருந்து பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளைத் தவிர அநேக முக்கிய நகரங்களிலிருந்தும் வேறு வாரப் பத்திரிகைகள் பிரசுமாகின்றன. இவை பிரசுரமாகும் நகரங்களைச் சுற்றின ஜில்லாவில் மட்டும் தான் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. (லண்டன் வாரப் பத்திரிகைகள், பிரிட்டன் பூராவுமின்றி வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.) அம்மாதிரிப் பத்திரிகைகளில் எண்ணிக்கை 1,300. இதைத் தவிர அரசியல் விஷயம், பொருளாதாரம், கலை, சுகாதாரம், வியாபாரம், விளையாட்டு முதலிய விஷயங்களைப் பற்றிய பத்திரிகைகளின் எண்ணிக்கை 4,000. இவற்றில் வாரப் பத்திரிகைகள், மாதமிருமுறைப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் யாவும் சேர்ந்தவை.

பிரிட்டனிலுள்ள பொதுமக்கள் அரசியல் பொருளாதாரம் முதலிய விஷயங்களில் சிறந்த ஞானம் படைத்தவர்களாதலால் அநேக பத்திரிகைகள் ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன. "டெய்லி மிரர்" என்ற தினசரி தினந்தோறும் 45 லட்சம் பிரதிகள் விற்பனையாகிறது. "டெய்லி எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகை தினந்தோறும் 40 லட்சம் பிரதிகள் செலவாகின்றன.

B. I. S.

மேல் நாடுகளை நாம் தீவிரமாகப் பின்பற்ற வேண்டிய ஒரு துறை.

தேக தத்துவ சுதந்திரம் தேசத்தை அழிக்கும்

●

இருபதாம் நூற்றாண்டில் உலகிலுள்ள மக்கள் அநேக துறைகளில் சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். மற்றும் வேறு துறைகளிலும் சுதந்திரம் அடைய போரிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அநேக ராஜ்யங்களுக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்துவிட்டது. பொருளாதார சுதந்திரம் எவ்வளவோ ராஜ்யங்களில் இருந்து வருகிறது அநேக ராஜ்யங்களில் கிடையாது. அதற்காக அந்த ராஜ்யங்களின் பிரஜைகள் போராடி வருகின்றனர். இம்மாதிரி மற்றொரு சுதந்திரத்திற்கும் அநேக ராஜ்யங்களில் தீவிரமாக இன்றும் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தச் சுதந்திரம் மக்களுக்குப் பூரணமாக இருக்க வேண்டுமென போலி சாஸ்திர நிபுணர்கள் அநேகர் வற்புறுத்தி வருகின்றனர். குழந்தைப் பருவத்திலேயே கூட இந்தத் தத்துவங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் ஒரு வாதம் உண்டு.

இந்த சுதந்திரத்தில் மக்களுக்கு ஆசை ஊட்டுவதற்குப் பலர் பல வழிகளைக் கையாண்டு வருவது யாவருமறிந்த விஷயம். இன்பம் என்பதைப் பற்றிப் பல பத்திரிகைகள் பிரசுரங்கள், சித்திரங்கள் முதலியன வெளி வருவதுண்டு. மேடைப்பிரசாரங்களில் கூடச் சிலர் மக்களுக்கு இந்தச் சுதந்திரமில்லையே என்று ஓலமிடுவதைக் கேட்கலாம்.

மேல்நாடுகளில் நம் நாட்டில் இருப்பதைவிட மக்களுக்கு தேக தத்துவ சம்பந்தமான சுதந்திரம் வெகுகாலமாகவே நிலவி வருகிறது. இந்தச் சுதந்திரம் மக்களுக்கு நன்மை பயப்பதல்ல என்ற அபிப்பிராயமும் மேல்நாடுகளில் பரவிவருகிறது.

இந்த அபிப்பிராயம், இச் சுதந்திரத்தை வெகு காலம் அனுபவித்த பிறகு ஏற்பட்டதால் இதை நாம் கவனிக்கவேண்டிய விஷயமாகிறது.

உதாரணமாக அமெரிக்காவில் வாலிபப் பருவமடைந்தவர்களிடையே யெல்லாம் தேக தத்துவ சுதந்திரம் பூரணமாக இருக்கிறது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், ஆண்களும் பெண்களும் தங்களிஷ்டப்படி சந்தித்துக் கொள்ளலாம். மனம் போனபடி, கேளிக்கைகளில் ஈடுபடலாம். உல்லாசப் பிரயாணங்களும் தங்களிஷ்டப்படி செய்யலாம். இஷ்டப்படி மணந்துகொள்ளலாம். நினைத்த மாத்திரத்தில் விவாகரத்தும் செய்துகொள்ளலாம்.

ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ எவ்வளவு தடவைகள் தான் விவாகஞ் செய்து கொள்ளலா மென்பதற்குக் கட்டுப்பாடே கிடையாது. கலியாணம் ஆகாத பெண்கள் கர்ப்பம் தரித்தால், அதை நம் நாட்டில் ஆகாயமே இடிந்து விழுந்தது போன்ற துர்ப்பாக்கியமாகக் கருதுகிறார்கள். இம்மாதிரிப் பயமும் அமெரிக்கப் பெண்களுக்குக் கிடையாது. தேக தத்துவ சுதந்திரத்தில் இதற்கு மேல் என்ன இருக்கிறது "ஆனால் இவ்வளவு சுதந்திரததையும் வெகு சுலபமாய் அனுபவித்ததனல் நாம் கண்ட பயன் என்ன ?" என்று அநேக அமெரிக்கர்கள் தீவிரமாக இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். சரித்திரப் பிரகாரம் நாகரிகமடைந்த நாடுகளுக்கெல்லாம் அழிவு நேரிட்டது. அந்த நாடுகளில் தேக தத்துவ சுதந்திரம் உச்ச நிலையில் இருந்த பொழுதுதான் என்று தெரிய வருகிறது.

கி. மு. மூன்றும் நூற்றுண்டிலும் இரண்டாம் நூற்றுண்டிலும் கிரேக்க ராஜ்யத்தில் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் எல்லோருமாக இன்பமடைந்து கொண்டிருந்தனர். தகப்பன், பெண், தாயார், பிள்ளை, சகோதரன், சகோதரி என்ற வித்தியாசங்களைப் பாராட்டாமல் ஆண்களும் பெண்களும் இன்ப வாழ்க்கை நடத்தி வந்தார்களாம். இதுவுமல்லாமல் நாட்டிலுள்ள ஸ்திரீகள் எல்லோரும் விலைமாதர்களாயிருந்தார்களாம். இம்மாதிரி மனோபாவமுள்ள நாட்டின் மீது வேறெந்த தேசமாவது படையெடுத்தால் இந்த நாட்டினர் எதிரிகளை விரட்டுவதற்கு போதிய தேசபக்தி எப்படி வரும்? கிரேக்க ராஜ்யமும் அதன் நாகரிகமும் சீர்குலைந்து போனதுபற்றி ஆச்சரியப்பட வேண்டியதேயில்லை. ரோமாபுரிக்கும் அதன் நாகரிகத்திற்கும் இவ்வாறே தான் அழிவேற்பட்டது.

ஒரு காலத்தில் தேசபக்தியும் சன்மார்க்கத்தில் திடசித்தமும் கொண்டிருந்த ஒரு ஜனசமுதாயம் இன்பவாழ்க்கையில் ஏற்

பட்ட மோகத்தால் அழிவுற்றது. ஆகவே எதிரிகளுக்கு ரோமாபுரி பணிய நேர்ந்தது.

எகிப்து, பாபிலோன், சீனு, இந்தியா ஆகிய இந்நாடுகளின் கதைகளெல்லாம் இதேதான். தேகதத்துவ சுதந்திரத்தில் மோகங் கொண்ட தேசங்களெல்லாம் இந்தப் படிப்பினையை நன்கு ஞாபகத்தில் வைக்க வேண்டும். பெற்றோர்களிடம் மரியாதை, கபடமற்ற சகோதர வாஞ்சை இன்ப வாழ்க்கையில் தகுதியான கட்டுப்பாடுகள்—இவையாவும் நிறைந்த குடும்பங்களுக்குத்தான் நாட்டையும் பாதுகாக்க பொறுப்பும் சக்தியும் உண்டு.

ஆண், பெண் வித்தியாசம் மட்டும் பாராட்டும் மனித சமூகத்திற்கு நாட்டிற்கு நன்மைபுரியும் சக்தியே கிடையாது.

விவாக விஷயத்தில் கட்டுப்பாடே கூடாதென்று வாதிப்பவர்களும் குழந்தைகளின் பிற்கால க்ஷேமத்தைப் பற்றி அக்கறையேயில்லாதவர்களும் நல்லது, தீது, என்ற வித்தியாசங்களைப் பாராட்டுவதை அநாகரிகம் என்று கருதுபவர்களும் உலகத்திற்கே நாசம் விளைவிப்பவர்களாவார்கள்.

ருஷ்யாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் இந்த உண்மையை தங்கள் அனுபவத்தில் நன்கு கண்டறிந்திருக்கிறார்கள். ருஷ்யாவில் கம்யூனிஸ்டு கட்சி முதன் முதலாக ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களுக்கு ஒரே நோக்கம்தானிருந்தது. அது என்னவென்றால் புராதன பழக்க வழக்கங்களை அறவே ஒழிப்பது தான். கலியாண கட்டுப்பாடு குடும்பக் கட்டுப்பாடு முதலியவற்றால் கம்யூனிஸம் முன்னேற்ற மடையாதென்று அபிப்பிராயங் கொண்டனர். குடும்பக் கட்டுப்பாடுகளும் கலியாண கட்டுப்பாடுகளும் ஒழிந்தேவிட்டன. கலியாணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் வரன் நினைத்தபோது ஆரம்பித்து முடிவு செய்து கொள்ளத் தகுதியான ஒரு ஒப்பந்தமாகிவிட்டது! சிலர் நான்கு நாட்களே தம்பதிகளாய் வாழ்வார்கள். இன்னும் சிலர் நான்கு மாதங்களோ அல்லது நான்கு வருஷங்களோ தம்பதிகளாய் வாழ்வார்கள். ஒரு கணவனுக்கு ஒரு மனைவி, ஒரு மனைவிக்கு—ஒரு கணவன் என்ற கட்டுப்பாடு மறைந்தது. விவாகரத்து நினைத்த வினாடியில் கிடைத்துக்கொண்டிருந்தது.

இந்த ஏற்பாடுகளின் பலன்கள் வெகுசீக்கிரத்தில் தெரிய வந்தது. லட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கை பாழாயிற்று. லட்சக்கணக்கான குழந்தைகள் பெற்றோர் பாதுகாப்பில்லாமல் நாடெங்கும் தவிக்கநேரிட்டது.

கம்யூனிஸ்டுக் கட்சி தாங்கள் அனுஷ்டித்து வந்த கொள்கைகளின் தவறை நன்கு உணர

ஆரம்பித்தது. இப்போது விவாக ரத்து என்பது ருஷ்யாவில் கிடையவே கிடையாதென்றுகூடக் கூறலாம். விவாகமாகாதவர்கள் பிரம்மசரியம் அனுஷ்டிக்க வேண்டுமென்று ருஷ்ய சர்க்கார் மக்களை வற்புறுத்துகின்றனர்.

கலியாண கட்டுப்பாடுகளில் அணுக்கூடத் தவருமல் நடப்பது சமூகத்திற்கு எவ்வளவோ நலம் தரும் என்பதையும் ருஷ்ய சர்க்கார் தீவிரமாய்ப். பிரசாரஞ் செய்து வருகின்றனர். ஆண்களும், பெண்களும் சேர்ந்து கல்வி பயிலும் பள்ளிகளும் கல்லூரிகளும் கூட ருஷ்யாவில் இப்போது கிடையாது. ருஷ்யக் குடும்பம் ருஷ்யா சமூகத்திற்கும் ருஷ்யா தேசத்திற்கும், எவ்வளவு பக்கபலம் அளித்ததென்பது சென்ற இரண்டாம் மகாயுத்தத்தில் நன்கு தெளிவாயிற்று.

ருஷ்யாவைப் போலவே சர்வாதிகாரம் நிலவாத மற்ற தேசங்களில் சமூகப் பழக்க வழக்கங்களில் இம்மாதிரி மாற்றங்கள் கொண்டுவருவது எளிதல்ல ஆனல் இன்றைக்குத் தேகதத்துவ சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் வழிகளைக் கவனிக்கும் போது எவருக்கும் நம் நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் என்ன நேரிடுமோ வென்று பயமாய்த்தானிருக்கிறது. ரகசியமா யிருப்பதை யெல்லாம் பகிரங்கமாக்குவதுதான் எழுத்தாளர்களின் கடமையென்றும் அப்படிச் செய்தால்தான் மக்கள் நலன் பெறலா மென்றும் ஒரு தப்பபிப்பிராயம் நாடெங்கும் பரவியுள்ளது.

புராதன காலங்களிலிருந்தே இந்நாட்டில் சில விஷயங்களைப் பகிரங்கமாக விவாதிப்பதை நாம் அநாகரிகமாகக் கருதி வந்திருக்கிரேம் இந்த விஷயங்களை மக்களின் கவனத்திற்கு அநேக வழிகளில் கொண்டு வருவதற்குச் சில சுயநல எழுத்தாளர்கள் தீவிரமாக முயற்சிக்கிருர்கள். மேல்நாடுகளில் இம்மாதிரி புத்தகங்களிலும் வேறு பிரசுரங்களிலுல் காணக்கூடிய தகவல்களை அந்நாட்டு சிந்தனையாளர்கள் மிகவும் தீவிரமாகக் கண்டிக்கிருர்கள். தேகதத்துவ விஷயங்களை விவாதிக்கும் அரிய ஆராய்ச்சி நூல்கள் அநேகமிருக்கின்றன. இந்தத் துறையில் மேல்நாட்டில் ஒரு புதிய ரகம் தோன்றியுள்ளது. இந்தப் புதிய ரகத்தில் தேகதத்துவ விஷயங்களை பொதுவாக விவாதிப்பதில்லை. அநேக ஆயிரம் ஆண்களையும் பெண்களையும் ரகசியமாய்ச் சந்தித்து அவரவர்கள் இன்பவாழ்க்கையை எப்படி நடத்திவந்திருக்கிருர்கள் என்ற ஒரு ஆராய்ச்சி நடத்தி இந்த ஆபிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் கொடுத்த தகவல்களை புத்தகங்களாகப் பிரசுரித்துவருகின்றனர். இந்தத் தகவல்களை அளிப்பவர்கள் சாதாரண மனிதர்கள்தான். அதனல் அவர்

களின் ரகசிய சுயகதைகளைப் படித்துப் பூரிப்படைவதற்கு சாஸ்திரீயமான ஞானம் தேவையில்லை. இம்மாதிரி புத்தகங்களைப் பிரசுரிப்பவர்கள் இதற்குக் கூறும் காரணமென்னவென்றால், ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் தவறுகள் செய்து அதனால் துன்பங்களையடைந்தால் அந்தத் தகவல் இன்னொருவருக்குத் தவறுசெய்யாமல் நேர்வழியில் செல்லுவதற்கு ஒரு தூண்டுகோலாயிருக்குமென்பதே. உதாரணமாக ஒரு ஸ்திரீ மணம்புரிவதற்கு முன் இன்பவாழ்க்கையில் தன்னிஷ்டப்படி ஈடுபட்டிருந்தால் மணம் புரிந்தபிறகு அவள் இல்லற வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானதாய்த்தானிருக்கும், ஒரு வேளை அவளுக்கு மணம்புரிந்துகொள்வதற்கு சந்தர்ப்பமே கிடைக்காமல் கூட போகலாம். இம்மாதிரி சுமார் 2,000 துர்பாக்கியவதிகளின் கதைகளைத் தொகுத்து ஒரு யுவதியிடம் கொடுத்தால் அவள் இதனால் நலம்பெறுவாளா அல்லது அவளுக்குத் தீங்குநேரிடுமா?

மேல் நாட்டார் அனுபவப்பிரகாரம் இம்மாதிரிக் கதைகளை பொதுமக்கள் படித்தால் அவர்கள் இல்லற வாழ்க்கையில் ஆசை கொள்ளாமல் இன்ப வாழ்க்கையையே லட்சியமாகக் கொண்டு நாட்டையே பாழாக்கி விடுவார்கள்.

இதுவும் நம் நாட்டுப் புராதன பழக்கவழக்கங்கள் சரியானவை என்பதற்கு ஆதாரமாகும். பத்தாயிரம் பேர்கள் தன்னிஷ்டப்படி இன்பவாழ்க்கையில் ஈடுபட்டு என்னென்ன இன்ப துன்பங்கள் அனுபவித்திருக்கின்றனரென்று ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ தெரிந்து கொண்டால் அவர்கள் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ள முடியாது. இந்நூற்றாண்டில்தான் ஜனத்தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்க எந்த வழியைக் கையாளுவது என்று நிபுணர்களும் தலைவர்களும் தத்தளிக்கிறார்கள். புராதனக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தாமல் பொதுமக்கள் இருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு உணவுப் பஞ்சம் முதலிய கஷ்டங்களும் ஏற்பட்டிருக்காது.

கட்டுப்பாடுகள் இந்தப் பலன்களை அளிப்பதோடு மனிதனின் மனத்தையும் பண்படுத்துகிறது. தேக தத்துவ சுதந்திரம் என்ற ஒரு பிரச்னை மனிதன் கனவில்கூட காண்பதற்கு முன்னால் கற்பு என்பது உத்தம ஸ்திரீகளின் தர்மமாகக் கருதப்பட்டு வந்தது. மாத மும்மாரியில் கற்புடைய மங்கைகளுக்காகவும் ஒரு மாரி பொழிந்ததென்பது பெரியோர்கள் சித்தாந்தம். மாதத்தில் பொழியும் மும்மாரியும் அதனால் ஏற்படும் பயிர்களின் செழிப்பும், பொதுமக்கள் சுபிட்சமும் மறைந்து விட்ட

தற்குக் காரணம் தர்மம் தவருத அரசர்களும் வேதம் ஓதும் அந்தணர்களும் வாழ்க்கையில் கற்பே சிறந்ததென்று திடச்சித்தங்கொண்ட மங்கையர்களும் மறைந்துவிட்டது அல்ல என்று யாரால் கூறமுடியும்? இதிலிருந்தே தேச அபிவிருத்திக்கும், மக்கள் சுபிட்சத்திற்கும் மங்கையர்களில் கற்பு எவ்வளவு முக்கியமானதென்பது நன்கு தெளிவாகிறது.

நல்வாழ்க்கைக்கு ஆதாரமாயிருப்பது (1)தெய்வ நம்பிக்கை, பெற்ரோரை மதித்தல், நல்லொழுக்கம், சத்தியம், தர்மம் முதலியன இவை யெல்லாம் தவிர இன்ப வாழ்க்கைக்கு புராதன காலத்திலிருந்தே விதித்திருக்கும் கட்டுப்பாடுகளைத் துளி கூடத் தவருமல் அனுஷ்டிப்பதுதான்.

இந்தக் கட்டுப்பாடுகள் பொதுமக்களுக்கு நலம்புரியத் தக்கன வென்பதைப் பற்றி ஐயமேயில்லை. இன்பத்திற்கும் வாழ்க்கையில் ஓரளவு ஸ்தானமுண்டென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே இந்த ஸ்தானத்திற்குத் தகுந்த கட்டுப்பாடுகள் இருந்தபோதெல்லாம் ஜனத்தொகை அளவற்ற பெருக்கம் அடையவில்லை என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயம்.

பாரதநாட்டுப் பண்பாடும் நம்பிக்கையும் இப்படியிருக்க இன்ப வாழ்க்கையில் சுதந்திரத்தை விரும்புபவர்களும் அனுஷ்டிப்பவர்களும் தங்கள் வாழ்விற்கு மட்டும் சத்துருக்கள் அல்ல! தங்கள் நாட்டிற்கும் பொதுவாக உலகத்திற்கே சத்ருக்கள் ஆவார்கள் என்று தானே கூறவேண்டும்.

நம்நாட்டுப் ப்ரச்னைகளைச் சமாளிப்பதற்கு திடசித்தம், தேசபக்தி கண்டிப்பான வாழ்க்கை இவை யாவும் மிகவும் தேவை. இவையில்லாவிடில் நம் நாடு ஒரு அணுப்பிரமாணம் கூட முன்னேற்றமடையாதென்பதில் ஐயமில்லை.

இன்ப வாழ்க்கையில் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் வெற்றிபெற்ருல் அநேக நூற்ருண்டுகளுக்கு முன் கிரேக்க நாகரிகமும் ரோம நாகரிகமும் அடைந்த கதிதான் நம் நாட்டு ஆரிய நாகரிகத்திற்கும் 'திராவிட' நாகரிகத்திற்கும் ஏற்படும்.

பட்டம் போயும் பணம் போகவில்லை

ஐரோப்பாவில் முடிசூடிய அரசர்களைவிட முடியையும் ராஜ்யத்தையும் இழந்த அரசர்களின் எண்ணிக்கையே அதிகம்.

அவரவர்கள் ராஜ்யங்களிலிருந்து விரட்டப்பட்டு இத்தாலி பிரான்சு, போர்ச்சுகல், இங்கிலாந்து முதலிய ராஜ்யங்களில் இவர்கள் வசித்து வருகின்றனர்.

முடிசூடியிருந்தபோது அனுபவித்து வந்த ஆடம்பரங்களும் படாடோபங்களுமில்லாவிட்டாலும் இவர்கள் கொழுத்த செல்வந்தர்கள்தான். இவர்களில் பெரும்பாலோரின் முக்கிய நோக்கம் இழந்த ராஜ்யங்களைத் திரும்பப் பெறுவதற்குள்ள முயற்சிதான். அரசை இழந்தாலும் இவர்கள் செல்வந்தர்களாயிருப்பதற்குக் காரணம் இவர்களோ, இவர்கள் தந்தையர்களோ ராஜ்யங்களை ஆண்டு கொண்டிருக்கும்போது, தங்கள் சொந்த சொத்துக்களை வெளி ராஜ்யங்களில் வியாபாரஞ் செய்வதற்கு மூலதனமாக உபயோகித்து வந்ததேயாகும்.

ஸ்பெயின் ராஜ்யத்தை ஆண்டுவந்த அல்பான்ஸோ என்ற அரசனை 1931-ஆம் ஆண்டில் ஸ்பெயினில் இப்போது சர்வாதிகார ஆட்சி புரியும் பிரான்கோ என்பவர் ராஜ்யத்தைவிட்டுத் துரத்தி விட்டார். இவர் சுமார் ஒரு கோடி ருபாய் விலை மதிப்புள்ள தன் சொத்துக்களை எண்ணெய் வியாபாரத்தில் முடக்கியிருந்தார். அதனால் அவருடைய புதல்வர் இப்போது வ்சதிகளோடு போர்ச்சுகல் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

யுகோஸ்லேவியாவில் அரசாண்ட பீட்டர் அரசன் தனது ராஜ்யத்தில் உள்ள திராக்ஷைத் தோட்டங்களிலும் உயர்ந்த சாராய வகை வியாபாரத்திற்காகவும் தன்னுடைய சொத்துக்களை உபயோகித்துக்கொண்டிருந்தார். ராஜ பக்திகொண்ட அநேக சாராய வியாபாரிகளும் அநேக ஹோட்டல் முதலாளிகளும் இந்த வியாபாரத்தில்

துணைபுரிந்தனர். தற்செயலாக அந்நிய ராஜ்யங்களிலுள்ள சிமெண்டு யந்திரங்களை உற்பத்தி செய்யும் வியாபாரங்களிலேயும் தன் சொத்துக்களை முடக்கியிருந்தார். இதனால் இவர் புதல்வன் யூகோஸ்லேவியாவின் மகுடத்தை இழந்தபோதும் இவனுக்கு வாழ்க்கை வசதிகள் ஏராளமாயிருக்கின்றன. இவன் தன் ராஜ்யத்தை விட்டு இங்கிலாந்திற்குச் சென்று சிலகாலமாக வசித்துவருகிறான்.

ருமேனியா ராஜ்யத்தின் அரசனுக்கும் 1947-ஆம் ஆண்டில் தன் ராஜ்யத்தைவிட்டு வெளியேற நேர்ந்தது. இவரும் இப்போது இங்கிலாந்தில்தான் வசித்து வருகிறார். இவர் தந்தை அநேக நாடுகளில் கோடிக் கணக்கான ரூபாய்களை முடக்கியிருந்தார்.

பல்கேரியா ராஜ்யத்தின் அரசனாயிருந்த போரிஸ் என்பவர், தான் உயிரோடிருக்கும்போதே 'தரித்திர ராஜா' என்ற புகழ் பெற்றவர். இவர் ராஜ்யத்தின் வருமானமே மிகவும் குறைவானது. ஆனால் இவர் மணந்து கொண்ட பெண் ஏராளமான சொத்துக்களை ஸ்திரீதனமாய்க் கொண்டுவந்தார். இந்த சொத்துக்களை தன் ராஜ்யத்தில் அநேக வழிகளில் உபயோகித்து ஏராளமானப் பொருளைத் திரட்டினார். அந்த சம்பாதியத்தையெல்லாம் பிரிட்டிஷ் சர்க்கார் பாங்கில் சேமித்து வைத்திருந்தார். இதனால் இப்போது இவர் வாரிசுகள் சௌகரியமாய் வாழ்ந்து வருகின்றனர்.

சமீபத்தில் ராஜ்யத்தை இழந்த எகிப்து மன்னனை பரூக் 22 கோடி ரூபாய் வெளிநாடு பாங்கிகளில் சேமித்து வைத்திருக்கிறாராம். இப்போது இத்தாலியில் ஒரு பிரபுபோன்று வாழ்க்கை நடத்தி வருகிறார்.

ஒரு உண்மை சம்பவம்.

மாய மகாராஜா!

1926-ஆம் ஆண்டில் நடந்த கீழ்வரும் சம்பவம் வைலி என்ற ஒரு ஆங்கில நாடோடியைப் பற்றியதாகும். இவனுக்கு ஒரு தினம் அடுத்த நாள் சாப்பாட்டிற்கு வழி இல்லாமற் போயிற்று. அவன் தன்னிடமிருந்த ஒரு உடுப்பு செட்டுகளை ஒரு அடகுக் கடைக்காரனிடம் வைத்து அதற்குக் கிடைத்த தொகையை பெற்றுக் கொண்டு கடையை விட்டு இறங்கியவுடன் ஒரு டாக்ஸியை கூப்பிட்டு அதிலேறி ஒரு பெரிய நகைக் கடைக்குச் சென்றான். நகைக் கடைக்குள் ஒரு பிரபு நுழையும் தோரணையில் நுழைந்தான். கடையிலிருந்த சில நகைகளைப் பார்வையிட்டு அந்த நகைகளை விட மிக உயர்ந்த ரகமானதும் அதிக விலை மதிப்புள்ளதுமான நகைகளை தன்னுடைய எஜமானரான ஒரு மகாராஜாவிற்குக் காண்பிப்பதற்கு அடுத்த நாள் காலை அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குக் கொண்டு வரும்படிக் கூறினான்.

இவ்வளவு பெரிய வியாபாரத்தைச் செய்யப் போகும் வைலியிடம் நகை வியாபாரியும் அவனுடைய ஸேல்ஸ்மேனும் மிகவும் வணக்கமாகப் பேசி அவனை வழியனுப்பினர். அவன் ஏறி வந்த டாக்ஸியைப் பார்த்ததும் நகைக் கடை முதலாளிக்கும் ஸேல்ஸ்மேனுக்கு அவன் கூறியவற்றிலெல்லாம் பூரண நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் வைலி அந்த டாக்ஸியில் இவர்கள் கண்கள் மறையும் வரைதான் பிரயாணஞ் செய்தான்.

நகைக் கடையிலிருந்து சற்று தூரம் வந்து மற்றொரு ரஸ்தாவிற்கு டாக்ஸியைத் திருப்பச் சொல்லி அந்த இடத்தில் டாக்ஸிகாரனுக்கு அடகுக் கடைக்காரனிடமிருந்து பெற்ற பணத்தை வயிற்றெரிச்சலோடு டாக்ஸி கூலியைக் கொடுத்துவிட்டு எங்கேயோ மறைந்தான்.

அடுத்தநாள் காலையில் மகாராஜாவிற்கு உயர்தர நகைகளைக் காண்பிப்பதற்கு வைலியைச் சந்திக்க நகைக் கடை

ஸேல்ஸ்மேன் ஒருவர் வந்தார். ஹோட்டலில்தான் குறிப்பிட்ட இடத்தில் நகைக் கடை 'ஸேல்ஸ் மேன்' வந்ததும் வைலி மிகப் பரபரப்புடன் ஸேல்ஸ்மேனிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதற்கு முந்திய நாள் உடுத்தியிருந்த ஆடையிலேயே அன்று காலை அவன் தோன்றக்காரணம் வாசகர்களுக்குத் தெரியலாம். ஆனால் அவன் ஸேல்ஸ்மேனிடம் கூறிய கதை வேறு! ஆடைகூட மாற்றிக்கொள்வதற்கு அவனுக்கு நேரமில்லாத அளவுக்கு அவன் மகாராஜாவுடன் ஊர்சுற்றிக்கொண்டிருந்ததாகவும் அதற்கு முந்திய இரவு சற்றுகூட நித்திரையில்லையென்றும் கூறினான். மகாராஜா அப்போதுதான் ஸ்நானத்திற்குச் சென்றிருப்பதாவும் அதனால் ஸேல்ஸ்மேன் சிறிதுநேரம் காத்திருக்க வேண்டுமென்றும் அறிவித்தான். ஸேல்ஸ்மேனே சந்தோஷத்துடன் அவ்வாறே காத்திருக்கச் சம்மதித்தான்.

மகாராஜா ஸ்நானம் செய்து கொண்டிருக்கும்போது ஸேல்ஸ் மேன் கொண்டுவந்திருந்த நகைகளைச் சற்று பார்வையிடுவதாகக் கூறி நகைகளை வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தான் வைலி. பிறகு மகாராஜா ஸ்நானம் செய்துகொண்டிருக்கும் இடத்திலே நகைகளை எடுத்துச்சென்று காண்பித்து அவரது அபிப்பிராயத்தை தெரிவிப்பதாகக்கூறி அந்த நகைகளை ஒரு அறைக்கு எடுத்துச் சென்றான்.

நகைக் கடை 'ஸேல்ஸ்மேன்' சற்று பயமடைந்தான். ஆனால் நகைகளை எடுத்துச் செல்வதைத் தடுக்கவில்லை. வைலி ஒரு நிமிஷத்தில் வெளியே திரும்பி ஸேல்ஸ்மேனிடம் நகைகளைக் கொடுத்துவிட்டு மூவாயிரம் ரூபாய் விலையுள்ள 'ப்ரோச்'சைவிட மூன்று லட்ச ரூபாய்க்கு ஒரு பவழ மாலை இருக்குமானால் அதை மகாராஜா மிக மகிழ்ச்சியுடன் அவருக்குப் பிடித்த ஒரு சிநேகிதிக்குச் சன்மானமளிக்க விரும்புவதாய் மகாராஜா தெரிவித்ததாகக் கூறினான். உடனே ஸேல்ஸ்மேன் தன் பெட்டியிலிருந்து சுமார் இரண்டுலட்ச ரூபாய் மதிப்புள்ள ஒரு பவழ மாலையை வைலியிடம் கொடுத்தான். அதை அவன் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில், வைலிக்குப் 'போன்' வந்திருப்பதாக ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் வந்து கூறினான்.

பவழமாலையை ஸேல்ஸ்மேனிடம் கொடுத்துவிட்டு வைலி டெலிபோனில் பேசப்போனான். சற்று நேரத்தில் திரும்பிவந்து மகாராஜாவின் சிநேகிதி வந்துவிட்டாளென்றும் பவழமாலையை உடனே அவர் அறைக்கு எடுத்துச் செல்வது நலம் என்றும் கூறி, பவழ மாலையை பரபரப்பாக மகா

ராஜாவின் அறைக்கு எடுத்துச் சென்றுவிட்டான்.

ஸேல்ஸ்மேனுக்குச் சற்று பயம்தான். ஆனாலும் மகாராஜா, ஸ்நானம்செய்துகொண்டிருக்கிறார்; அவர் நேசிக்கும் பெண்மணியும் ஹோட்டலுக்கு வந்துவிட்டாள், இனிமேல் வியாபாரம் நடந்ததுபோலத்தானே, என்றெல்லாம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தான். இவ்வாருகச் சந்தோஷமாக ஒரு மணி நேரம் காததிருந்தான் ஸேல்ஸ்மேன்.

ஆனால் சுமார் மூன்று மணி நேரமானதும் அவன் வியப்படைந்தான். இனிக்காத்திருப்பதில் பயனில்லையென்ற முடிவிற்கு வந்து ஒரு ஹோட்டல் சிப்பந்தியை அழைத்து அவனுக்கு இனம் கொடுத்து வைவி அறைக்குச் சென்று விசாரித்துவரச் சொன்னான். சிப்பந்தி, திரும்பிவந்து வைவி என்பவர் அந்த ஹோட்டலிலிருந்து வெளியேபோய் மூன்றுமணிநேரத்திற்கு மேலாயிற்று என்று தெரிவித்தான். அப்போதும் நகைக் கடை ஸேல்ஸ்மேனுக்குச் சந்தேகம் தோன்றவில்லை. தன் கடை நகையை வேறு கடைக்கு விலை மதிப்புப்பற்றி விசாரிப்பதற்காகக் கொண்டுபோயிருக்கலாமென்று நினைத்தார். இந்தக் கருத்தில் இன்னும் சிறிதுநேரம் காத்திருந்தார். மணி ஆறும் ஆயிற்று: ஆனால் வைவியைக் காணோம். மறுதினம் வைவியைச் சந்திப்பதாக ஹோட்டலில் மானேஜரிடம் அறிவித்துவிட்டு ஸேல்ஸ்மேன், வீட்டிற்குச் சென்றார்.

அடுத்த நாள் காலையில் ஸேல்ஸ்மேன் ஹோட்டலில் ஆஜரானர். முதல்நாள் பகலில் வெளியே சென்ற வைவி இன்னும் ஹோட்டலுக்குத் திரும்பவில்லையென்ற தகவல் அவரைத் திடுக்கிடச் செய்தது. ஹோட்டல் மானேஜரிடம் வைவியின் அறையைச் சற்று பரிசோதனை செய்வதற்கு அனுமதிபெற்று வைவி தங்கியிருந்த அறையை அவரும் ஹோட்டல் சிப்பந்திகளுமாகச் சோதனைசெய்தனர். வைவியின் அறையில் ஒரு காலி டிரங்குப்பெட்டி கிடந்தது. டிரங்கு அறவே காலியாயில்லை. அதில் சில அடகுக்கடை ரசீதுகள் இருந்தன.

வைவிக்குத்தான் இரண்டாவது மாற்றுஉடைகள் கிடையாதென்பது வாசகர்களுக்கு நன்கு தெரியுமே! உடனே மகாராஜா தங்கியிருந்த அறையையும் சோதனை செய்யவேண்டுமென நகைக்கடை ஸேல்ஸ்மேன் கேட்டார். "மகாராஜா ஒருவரும் இந்த ஹோட்டலுக்கு வரவில்லையே" என்று ஹோட்டல் மானேஜர் கூறியதும் வைவியின் சூழ்ச்சிகளின் உண்மை நகைக்கடை ஸேல்ஸ்மேனுக்குத் தெரியாலாயிற்று. உடனே நகைக்கடை ஸேல்ஸ்மேன் போலீஸுக்குத் தகவல் கொடுத்தார். போலீஸார்

விரைவில் வைவி சவாரிசெய்த டாக்ஸியைக் கண்டு பிடித்தனர். டாக்ஸி டிரைவர்கூறிய தகவல்களிலிருந்து வைவி முதல் நாள் ஒரு விமான நிலையத்திற்குச் சென்றதாகவும் அவ்விடம் இரண்டு பேர்கள் பிரயாணஞ் செய்யும் ஒரு சிறிய விமானத்தில் ஏறிக்கொண்டானென்றும் அந்த ஆகாயவிமானத்திலிருந்தவரிடம் தன்னை உடனே பிரான்சுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தால் அவருக்கு ஆயிரம் ரூபாய் இனும் கொடுப்பதாகச் சொன்னதாகவும் கூறினன்.

உடனே விமானம் புறப்பட்டு விட்டதாம். சற்றும் தாமதமில்லாமல் போலீஸார் ரேடியோ மூலம் பாரிஸ் போலீசுக்கும் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த விமானங்களுக்கும் தெரியும்படி இந்த நகைத் திருட்டுத் தகவல்களைக் கொடுத்தார்கள்.

திருடர்களுக்கும் திடசித்தம் வேண்டும். இது இல்லாதவர்கள் போலீஸாரிடம் சிக்கிக் கொள்கிருர்கள். லட்சக்கணக்கான ரூபாய் விலைமதிப்புள்ள நகையை இவ்வளவு சிரமமில்லாமல் மோசடி செய்த வைவிக்கு சற்று சபலமேற்பட்டது அவன் தலைவிதிதானே!

அவன் விமானத்தில் ஏறிய வுடனேயே நேரடியாகப் பிரான்சுக்குச் சென்று நகைகளை விற்றிருந்தால் அந்த நகைகள் நகைக்கடை முதலாளிக்குத் திரும்பக் கிடைத்திராது, நகைகளை மோசடி செய்ததை ஜெயபேரிகை கொட்டவேண்டுமென்று வைவிக்குத் தோன்றியது. அதற்காக அவன் பாரிஸுக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள ஒரு நகரத்தில்தங்கி அன்றிரவு முழுவதும் சூதாடினன். மறுநாள் காலையில் அவன் பிரயாணஞ் செய்த விமானம் பாரிஸுக்குக் கிளம்பியபொழுது போலீஸார் ரேடியோ மூலம் அனுப்பிய தகவல்கள் அந்த விமானத்தை ஓட்டிய விமானிக்குக் கிடைத்தது. வைவி விமானத்தில் முதல் நாளிரவு நித்திரையில்லாத காரணத்தால் ஆசனத்தில் அயர்ந்து நித்திரை புரிந்துகொண்டிருந்தான். அவனிடம் கூருமலேயே விமானி லண்டனை நோக்கி விமானத்தைச் செலுத்தினர். லண்டன் விமான நிலையத்தில் விமானம் வந்திறங்கும்போது கண் விழித்தான் வைவி. விமானம் பூமியில் இறங்கி நின்றதும் அங்கு தயாராயிருந்த போலீஸார் விமானத்தில் பிரவேசித்து வைவியைக் கைது செய்தனர்.

பாரிஸுக்குச் சென்று விற்பதற்காகப் பத்திரமாய்த் தன் பையில் வைத்திருந்த நகைகள் அப்படியே போலீஸாருக்குக் கிடைத்தன.

வைவிக்கு இதற்குப் பிறகு நேரிட்டதை வாசகர்களே யூகித்துக்கொள்ளலாம்.

இக் கட்டுரையின் தலைப்பு சகஜம் தான். ஆனால் இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் அவ்வளவு சகஜமல்ல.

ஜோதிடம் பலித்தது!

●

மனித வாழ்க்கை நவக்கிரகங்களின் ஆதிக்கத்திற்கும் பூரணமாக உட்பட்டதென்ற நம்பிக்கை நம் நாட்டில் எங்கும் நிலவியுள்ளது.

ஒரு காலத்தில் சாதிக்க முடியாதெனக் கருதி வந்ததையெல்லாம் சாதிக்கும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக்காலத்திலும்கூட இந்த நம்பிக்கை கொண்டவர்கள் அநேகரிருக்கின்றனர். ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்தே இந்த நம்பிக்கை வளர்ந்திருக்கிறது.

முன்னோர்கள் நவக்கிரகங்களுக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் உள்ளதெனத் தீர்மானித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. சூரியனும் சந்திரனும் ஆகாயத்தில் சஞ்சாரஞ் செய்வது சில திட்டங்களை யொட்டியே தான். இந்தக் கணக்குகளையும் திட்டங்களையும் வேறு கிரகங்களும் அனுஷ்டிப்பதுண்டு.

பயிரிட்டால் அறுவடையாகி விவசாயிடம் மகசூல் கிடைக்கும் வரையில் சூரியபகவானுடைய அனுக்கிரகம் தேவையாயிருப்பதிலிருந்து பழங்கால ஞானிகள் வாழ்க்கையில் சூரியனுக்கு முக்கியத்துவமுண்டு என்று தீர்மானித்துள்ளனர். இதிலிருந்துதான் மற்ற கிரகங்களுக்கும் வாழ்க்கையில் முக்கியத்துவமுண்டு யென்று கருது

வதற்குக் காரணம். வானசாஸ்திரத்தில் இன்றுள்ள பிரபல நிபுணர்களின் அபிப்பிராயமென்ன வென்ருல் பிர பஞ்சத்திலுள்ள ஒவ்வொரு கிரகத்திற்கும் மற்ற கிரகங் களின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் சக்தியுண்டு என்பது தான்.

இதிலிருந்து பழங்கால ஞானிகளின் கருத்து தவ றல்ல வென்பது நன்கு புலனுகிறது. ஆகாய முழுவதும் ஜலவாயு வியாபித்திருக்கிறது. ஒளி விடும் கிரணங்கள் மற்ற கிரணங்களிலிருந்து பூமிக்கு வருகின்றன. இந்தக் கிரணங்கள் இப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளையெல் லாம் ஆட்டிவைக்கும் சக்தி படைத்தவையென வான சாஸ்திர நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். இதுவும் ஜோதிஷ சாஸ்திரத்திற்குப் பொருத்தம்தானே! வான சாஸ்திர நிபுணர்கள் மற்ருெரு தகவலையும் வெளியிடு கிருர்கள்.

சூரியனின் கறுத்த புள்ளிகள் ஏறக்குறைய பதினறு வருஷங்களுக் கொருமுறை தோன்றுகின்றன. இவை தோன்றும் சமயத்திலெல்லாம் உலகத்தில ஏதாவது குழப்பங்கள் ஏற்படுவது சகஜம். இந்தக் குழப்பங்கள் யுத்தங்கள் உள்நாட்டு கலகங்கள் மக்களிடையே கொடிய தொத்து வியாதிகள் முதலான ரூபங்களில் தோன்று கின்றன. இம்மாதிரிக் குழப்பங்கள் ராஜ்யங்களிலுள்ள ஜன சமூகம் முழுவதையுமே பாதிக்கின்றன. இக்குழப்பங்களை ஒரு தனிப்பட்ட நபரின் துர்ப்பாக்கியமாகக் கருதக் கூடாது. ஜோசியத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் கேட்கும் கேள்வி இதுதான். நவக்கிரகங்களுக்கு ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் ஒவ்வொரு விதத்தில் பாதிப்பதற்குச் சக்தி யுண்டா? இந்தக் கெள்விக்குச் சரியான பதில் கிடைக்க வேண்டுமானல் ஒவ்வொரு ஜோதிடரும் ஒவ்வொருவ ருடைய வருங்கால வாழ்க்கையைப் பற்றிக் கூறும் ஆரூ டத்தை சோதிக்கவேண்டும்.

நம் நாட்டில் இத் துறையில் அனுபவமுள்ளவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். நவக்கிரகங்களை யொட்டிக் கூறும் ஆரூடங்கள் சரியென்று சொல்வதற்கும் சரியல்ல வென்று சொல்வதற்கும் தகுதியான அனுபவமுள்ளவர் கள் எவ்வளவோ பேர்களிருக்கின்றனர். லண்டன் நகரத் தைச் சேர்ந்த ஒரு டாக்டர் தனக்குச் சமீபத்தில் ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

"இவருக்கு ஜோதிடத்தைப் பற்றி ஒன்றுமே தெரி யாது. ஒரு நாள் இவரிடம் ஒரு பணக்காரர் தன் வியாதியைப் பற்றிக் கேட்பதற்கு வந்தார். டாக்டர் இந்த நோயாளியைப் பரிசோதித்துப் பார்த்தார். கூடிய சீக்கிரம் ஒரு ஆபரேஷன் அவசியமென்று டாக்டர் கூறி னார். சற்று சிரமமான ஆபரேஷன் ஆனதால் அதற்குத் தேவையான டாக்டர்கள், நர்ஸ்கள் மற்ற ஆபரேஷன் சம் பந்தமான கருவிகள் மருந்துகள் முதலியவை சேகரிக்க சில நாட்கள் பிடிக்கும் என்றும் கூறினார். அவசியமானதெல் லாம் ஏற்பாடு செய்துகொள்ளலாமென்று நோயாளி கூறி னார். அதன்படி டாக்டர் ஆபரேஷனுக்கு வேண்டிய ஏற் பாடுகளெல்லாம் முடிந்தவுடன் நோயாளிக்குத் தெரிவித் தார். நோயாளி டாக்டரிடம் "ஆபரேஷன் இந்த மாதத்தில் வேண்டாம், ஜூன் மாதத்தில் வைத்துக் கொள்ளலாம்" என்று கூறினார். இச் சம்பவம் நடந்தது மே மாதக் கடை சியில். இந்த வேண்டுகோளைக் கேட்ட டாக்டர் "எதற்காக ஜூன் மாதத்தில் வைத்துக்கொள்ள வேண்டு" மென்று சற்று ஆத்திரமாகக் கேட்டார். அப்போது குட்டு வெளி யாயிற்று! ஒரு ஜோதிடர் இந்த நோயாளியிடம் ஜூன் மாதத்தில் இவர் ஒரு ஆபரேஷனுக்கு ஆளாக நேரிடுமென் றும் அதன்மூலம் அவன் சற்று குணமடையலாமென்றும் கூறியிருப்பதாக நோயாளி கூறினார்.

டாக்டர் மிக அதிசயத்துடன் "ஜோதிடர் கூறிய தன் கருத்து நீ நினைத்தபடியல்ல, மே மாதக் கடைசி

யில் ஆபரேஷன் நடைபெறுமென்றும் ஜூன் மாதம் அதன் மூலம் குணம் அடைவாய் என்பதே" என்று கூறினர்.

நோயாளி இதை ஒப்புக்கொண்டு ஆபரேஷன் செய்து கொள்ள சம்மதித்தார். ஆபரேஷன் நடந்து ஜூன் மாத முதல் வாரத்தில் பூரண குணமடைந்தார். ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறும் முன்பு டாக்டரைக் கூப்பிட்டு "எனக்கு அடுத்த ஆபரேஷன் எப்போது என்று கேட்டார்; டாக்டர் வியப்புக்கு அளவேயில்லை !...... இரண்டாவது ஆபரேஷன் தேவையே இல்லை என்று அழுத்தமாகக் கூறினர். குணமடைந்த மனிதரோ ஜோதிடர் கூறியபடி இரண்டாவது ஆபரேஷன் நிச்சயமாக உண்டு என்று டாக்டரைப்போல அழுத்தமாகக் கூறினர்.

இந்த டாக்டர் தனக்குள்ள வைத்திய அனுபவப் பிரகாரம் இனி இரண்டாம் ஆபரேஷன் கண்டிப்பாய்த் தேவையில்லை. உனக்கு பூரணமாய்க் குணமாகிவிட்டதென்பது உறுதிதான் என்று கூறி அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பத்து தினங்களுக்குப் பிறகு டாக்டருக்கு இந்த மனிதரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "அதில் தான் வீட்டிற்கு வந்த இரண்டு மூன்று நாட்களில் பழையபடி நோய் பாதித்ததென்றும் மற்றொரு டாக்டரைக் கூப்பிட்டு இரண்டாம் முறை ஆபரேஷன் செய்ய நேர்ந்ததென்றும் எழுதியிருந்தார். ஜோதிடர் கூறியபடி இரண்டு ஆபரேஷன் நடந்து விட்டது, தன்னை இனி இந்த வியாதி பாதிக்காது என்பது தன்னுடைய நம்பிக்கையென்றும், இக்கடிதத்தில் அந்த மனிதர் கூறியிருந்தார். இந்த டாக்டருக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை வராமல் எப்படி யிருக்கமுடியும் ? சில சமயம் நம்பிக்கை யில்லாதவர்கள் மனத்தில்கூட ஜோதிடம் நம்பிக்கையூட்டுகிறதல்லவா ?

படையையும் நடுங்க வைக்கும் பாம்புகளைக் கையாளும் வழிகளைப் பற்றி ஒரு ருசிகரமான வரலாறு.

விஷப் பாம்புகளோடும் விளையாடலாம்

●

வீடு வீடாகச்சென்று பிச்சையெடுத்துப் பிழைப்பு நடத்தும் கூட்டத்தைச் சேர்ந்தவன் தான் பாம்பாட்டியும். அவன் பாம்புகளைச் சிறிய கூடைகளில் அடைத்துக் கொண்டு வருவான். குழந்தைகளையும், பெரியவர்களையும் பயமுறுத்துவதற்காகப் பாம்புகளை படமெடுத்து ஆடச் சொல்வான். தன் கழுத்திலும் சிவபெருமான்போல பாம்பு களை மாலையாக அணிந்து கொள்வான்.

அநேகருக்கு இந்தப் பாம்பாட்டிகள் பாம்புகளின் பற் களிலிருந்து விஷத்தை யெடுத்து விட்டிருப்பது தெரி யாது. ஆனல் மேல் நாடுகளில் பாம்புகளை வளர்ப்பவர்கள் விஷப் பற்களை யெடுக்காமலேயே பாம்புகளோடு விளையாடு வதுண்டு.

பாம்புகளின் சுபாவங்களை நன்கு ஆராய்ச்சி செய்த நிபுணர் ஒருவர் அமெரிக்காவில் இருக்கிறர். இவருக்கு நம்நாட்டுப் பாம்பாட்டிகள் வேடிக்கை காட்டுவதுபோல் கொடிய விஷம் பொருந்திய பாம்புகளோடு வேடிக்கை காட்டத்தெரியும். வருஷக்கணக்காகச் சிரமப்பட்டு எந்தப் பாம்பாயிருந்தாலும் சரி, அதை தன் விளையாட்டுக் கருவி யாக்கும் வழிகளை நன்கு அறிந்திருக்கிறர்.

இவரைச் சந்திக்கச் சென்ற ஒருவர் அவரிடம் கண்ட வரலாறுகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

"இந்த நிபுணர் ஒரு கொடிய விஷப்பாம்பை நாய்க் குட்டியையும், பூனைக் குட்டியையும் நாம் தூக்குவதுபோல் தன் கையில் எடுத்தார். அந்தப் பாம்பை மேல்புறமாகப் பேர்ட்டார். ஒரு தீக்குச்சியால் அதன் வாயைத் திறந் தார். அதன் விஷப்பைகளை நன்ருகத் தூக்கிக் காண்பித் தார். இந்த நிபுணர் வளர்க்கும் அநேக பாம்புகளில் எது வுமே இவரை எப்போதும் கடித்ததேயில்லையாம். இவர் வீட்டுக்குச் செல்வோர்களும் இவருடைய பாம்புகளோடு விளையாடலாம்.

நல்லபாம்பு, மலைப்பர்ம்பு, கட்டுவிரியன், கண்ணுடி விரியன், கொம்பேறி மூக்கன், கண் குத்திப் பாம்பு, இரு தலைப்பாம்பு முதலிய எல்லாப் பாம்பு வகைகளையும் இவர் கையாளுகிருர். பாம்புகளை இப்படி வசியஞ்செய்யும் சக்தி பிறவியிலேயே தான் பெறலாமே தவிர கற்றுக்கொள்வ தென்பது சற்று சிரமமான காரியம்.

பாம்புகளுக்குத் தெய்வீகத் தன்மை கற்பித்து அவற்றை வணங்கும் வழக்கம் நம் நாட்டில்மட்டுமல்ல. தென் அமெரிக்கா போன்ற சில நாடுகளிலும் நிலவி வரு கிறது. தென் அமெரிக்காவில் பாம்புகளை வணங்குவோர் இருசாரார் உண்டு. இந்த இரு கூட்டத்தாரும் ஆண்டு தோறும் நடத்தும் மகா குருபூஜையின்போது ஏராள மான பாம்புக் கூட்டங்களும் பங்கெடுத்துக் கொள்ளும்.

இவர்களின் பிரார்த்தனை, ஆண்டவனுக்கு பாம்புகள் மூலமாய்ச் செல்லவேண்டும் என்பது இவர்களுடைய நம் பிக்கை. இதற்காக இவர்கள் பிரார்த்தனையைப் பாம்பு களிடம் ஒப்படைக்க ஒவ்வொரு பூஜாரியும் ஒவ்வொரு கொடிய விஷப்பாம்பை கையில் பிடித்துக்கொண்டிருப் பார். ஆனல் பாம்புகளை பூஜை நடைபெறும் இடத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்பு பாம்புகளின் விஷத்தை

அகற்றிவிடுவார்களென்று இந்த பூஜையில் நம்பிக்கையில்லாதவர்களும், எதிரிகளும் கூறுவார்கள்.

மேல் நாடுகளில் சர்க்கஸ்களிலும், கண் காட்சிகளிலும் பாம்பு வேடிக்கைகள் ஒரு 'அயிட்டமா'க விளங்கும். சர்க்கஸ்களில் கூட்டம் சேர்ந்ததும், ஒருவர் ஒரு பெரிய விஷப்பாம்பை கையிலெடுத்துக்கொண்டு கூட்டத்தை நோக்கி சர்க்கஸ்களிலும் நாடகததிலும் வழக்கமாக நடைபெறுவதுபோல் ஏதாவது பிரசங்கம் செய்வார். அவர் நிற்குமிடம் ஒரு குழியாயிருக்கும். அங்கு வெளிச்சம் அதிகமிராது. பாம்பை கீழே விட்டுவிட்டு கைக்குட்டையால் நாக்கைத் துடைத்துக்கொள்வார். திடீரென பாம்பின் கழுத்தைப்பிடித்து அதன் வாயைத் திறந்து தன் நாக்கில் கடிக்கவிடுவார்.

சர்க்கஸ் காட்சியைப் பார்க்கக் கூடியிருப்போர் யாவரும் நடுங்குமாறு பாம்பின் விஷப்பற்கள் இரண்டும் சர்க்கஸ் நடிகரின் நாவைக் குத்திக் கிழிக்கும். இரு துளி இரத்தம் வருவதைக்கண்டு யாவரும் திடுக்கிடுவார்கள்.

இதன் இரகசியம் என்னவென்றால், சர்க்கஸ் நடிகர் கைக்குட்டையால் நாக்கைத் துடைக்கும்போது மனிதன் நாக்கு போன்றே தோற்றமளிக்கும் அரக்கினால் ஆன ஒரு போலி நாக்கை உண்மையான நாக்கின்மீது பொருத்திக் கொள்வார். இந்த போலி நாக்கின் மேல் பாகத்தில் இரத்தத்தைப் போன்றிருக்கும் ஒரு கிழங்கின் சாற்றை போலி நாக்கின் மேல் பாகத்தில் நிறைத்து வைத்திருப்பார். விஷத்தை அகற்றின பாம்பினுடைய பற்கள் எல்லோர் கண்ணெதிரே போலி நாக்கின் மேல்பாகத்தைப் பாம்பு கடித்து ரத்தத் துளிகள் விழுவதுபோன்று தோன்றும்.

மேல் நாடுகளிலுள்ள சர்க்கஸ்கள், கண் காட்சிகள் முதலியவற்றிற்குப் பாம்புகளை அனுப்புவது ஒரு வியாபாரமாகும். எந்தக் கண் காட்சி சாலைக்கு நல்லபாம்பு

வேண்டுமென்ருலும் இந்தியாவிலுள்ள வியாபாரிகளுக்கு எழுதுவார்கள். வியாபாரிகள் பாம்பைப் பிடித்து விற்கும் வகுப்பாரிடம் இவற்றை வாங்கி அனுப்புவார்கள். சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மானியர்களின் குண்டுகள் லண்டன் கண் காட்சிசாலையில் விழுந்து அதனுல் பாம்புகள் வெளி யேறினுல் சுற்றுப்புற பிரதேசங்களில் பேராபத்து நேரிடு மென்று பயந்து லண்டன் கண்காட்சி சாலை நிர்வாகி கள் பாம்புகளையெல்லாம் கொன்றுவிட்டார்கள்.

மகா யுத்தத்திற்குப் பிறகு லண்டன் கண் காட்சி சாலையில் மறுபடியும் வைப்பதற்கு இந்தியா முதலிய தேசங்களுக்கு விண்ணப்பித்துப் பாம்புகளை வரவழைத் தார்கள். பாம்புகளை அவற்றின் கூண்டுகளில் வைத்து விட்டு அவற்றிற்கு ஆகாரம் கொடுத்தபோது, அவை ஆகாரத்தை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. கூண்டில் அடைத்துவிட்டதால் தான் ஆகாரத்தை விரும்ப வில்லையோ என்று முதலில் சந்தேகித்தார்கள். பிறகு பாம்புகளைச் சோதித்ததில் பாம்புகள் உணவு அருந்தாத தற்குக் காரணம் வெளியாயிற்று. ஒவ்வொரு பாம்பின் வாயும் லேசான கயிற்ருல் கட்டப்பட்டிருந்ததென்று தெரியவந்தது.

இந்தியா முதலான தேசங்களில் பாம்புகளைப் பிடிக் கும் தொழிலில் ஈடுபடுபவர்கள் கையாளுகின்ற ஒரு வழி இதுவாகும்.

பாம்பின் விஷப்பற்களைப் பிடுங்குவதென்பதின் அர்த் தம் விஷப்பையிலிருந்து விஷம், விஷப்பற்களுக்கு போய்ச் சேரும் குழாயை அறுத்து விடுவதுதான். இம்மாதிரி இந்தக் குழாயை அறுத்துவிட்டால் பாம்பின் விஷப்பற் கள் தாகைவே விழுந்துவிடுகின்றன. ஆனுல் இம்மாதிரி செய்வதால் பாம்புகளும் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் உயிரோடிருப்பதில்லை.

உணவை மகிழ்ச்சியோடு உண்பதற்கும் வெறுப்போடு விழுங்குவதற்கும் வித்தியாசம் உண்டா ?

அவசரச் சாப்பாடு அசௌக்கியம் விளைவிக்கும்

●

ஆரோக்கியத்தைப் பூரணமாகப் பெற்றவர்கள் போல் தோற்றமளிப்பவர்கள்கூட தங்களுக்கு ஏதாவது நோய்களிருப்பதாகக் கூறிக்கொண்டிருப்பது சகஜம். இவ்வளவு ஆரோக்கியம் பெற்றவர்களுக்குக்கூட வயிற்றுவலியோ, தலைவலியோ அல்லது மற்ற சிறு உபாதைகளோ ஏன் ஏற்படுகின்றனவென்பது கவனிக்க வேண்டிய விஷயம். ஒருவர் தன்னை வேதனைப்படுத்திக் கொண்டிருந்த வயிற்றுவலியைப் பற்றி டாக்டரிடம் கேட்கச் சென்றார். டாக்டர் அவரிடம் "சென்ற வாரம் பூராவும், எந்தெந்தவேளைகளில் என்னென்ன ஆகாரம் உட்கொண்டாய்? உணவு உட்கொள்ளும்போது உன்னுடன் யார் யாரிருந்தனர், அவர்களுடன் என்னென்ன விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தாய் என்பதற்கெல்லாம் ஒரு விரிவான ஜாபிதா கொடு" என்று கூறினார்.

இந்த ஜாபிதாவை நோயாளி தயார் செய்ததும் டாக்டர் அவருடன் கலந்துகொண்டு வயிற்று வலி எப்பொழுதெல்லாம் அவருக்கு ஏற்பட்டதென்பதை ஆராய்ச்சி செய்தார். இந்த ஆராய்ச்சியிலிருந்து போஜன வேளை

யில் குடும்பத்தினரோடு தகராறு செய்து கொண்டிருந்த தினங்களிலெல்லாம் இவர் வயிற்றுவலியால் பாதிக்கப் பட்டார் என்று தெரியவந்தது.

போஜனவேளையில் மனசு நிம்மதியாயிருக்க வேண்டுமென்பது நம் நாட்டில் அநேகருக்குத் தெரிந்த விஷயம். ஆகாரத்தைப்பற்றிக் கட்டுப்பாடுகள் எதையும் அனுஷ்டிக்காதவர்கள் நம் நாட்டில் அனந்தம். அவசர அவசரமாக இரண்டு மூன்று கவளங்களை அள்ளிப் போட்டுக்கொண்டு பரபரப்புடன் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளும் தொழிற்சாலைகளுக்குச் செல்லும் தொழிலாளிகளும் மற்றும் காரியாலயங்களுக்குச் செல்லும் உத்தியோகஸ்தர்களுக்கும் கணக்கே கிடையாது.

ஆகாரம் உட்கொள்ளுவதும் ஜீரணமாவதும் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றால் தினசரி அலுவல்களைக் கட்டுப்பாடுடன் அனுஷ்டிக்கவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருப்பது, காலைக்கடன்களை தவறாமல் முடித்துக் கொள்வது, இவை தவறாமல் நடந்தால்தான் குறிப்பிட்ட நேரத்தில் ஆகாரத்தை உட்கொள்ள முடியும் குறிப்பிட்ட நேரத்தில் உட்கொள்ள யோக்கியதை உணவிற்கு இருக்கவேண்டுமென்றால் அதற்குச் சற்றுமுன்பே உணவு தயாராக இருக்கவேண்டும். இதற்கேற்ப வீட்டை நிர்வகிக்கும் எஜமானிகளின் காரியங்களும் சீராக நடைபெறவேண்டும். இம்மாதிரி எல்லோரும் அவரவர்கள் அன்றாட அலுவல்களைக் கவனித்து வந்தால் ஆரோக்கியத்துடன் வாழ்க்கை நடத்துவதில் என்ன சந்தேகம்! போஜன வேளையில் பரபரப்பு, மனச் சஞ்சலம், சச்சரவு முதலியவை இருக்கவேகூடாது, வெறுப்பும் கோபமும் வியாபித்த இடத்தில், ஒரு ஸமாராதனையில் சாப்பிடுவதைவிட அன்பும கனிவும் நிறைந்த இடத்தில் புல்லைத் தின்பதே ஆரோக்கியத்திற்கேற்றதென்று ஒரு மஹான் கூறியுள்ளார்.

இதிலிருந்து ஆகாரம் உட்கொள்ளுவதற்கு முன்பு ஓய்வும், சிரமபரிகாரமும், மன மகிழ்ச்சியும் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதென்று நன்கு தெளிவாகிறது. வயிற்றுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் மேற்கூறியுள்ள விஷயங்களை எளிதில் கிரகித்துக் கொள்வார்கள். பயம், கோபம், வெறுப்பு, படபடப்பு முதலியவற்றால் நாம் பாதிக்கப்படும் சமயங்களில் வயிற்றுக்குள் சதா ஊறிக் கொண்டிருக்கும் ரசங்களின் சுரப்பு தடைப்பட்டுப் போகிறது. இம்மாதிரி தடைபட்ட சமயங்களில் உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணமாகாது. நெஞ்சரிச்சல், ஏப்பம், பித்தம், வயிற்றுவலி முதலியவை தான் இம்மாதிரி போஜனம் செய்வதனால் ஏற்படும் பலன்கள்.

குழந்தைகள் காலையில் சாதாரணமாக எழுந்திருக்கும் நேரத்தில் எழுந்திருக்காவிட்டால், அவர்களுக்கு இரவில் நித்திரை சரியாயில்லை என்று அர்த்தம். நித்திரை பங்கத்தினால் ஜீரணக் கோளாறு ஏற்படுகிறது. ஜீரணக் கோளாறு ஏற்படுவதால் கோபம். பயம், வெறுப்பு படபடப்பு முதலியவை நம்மை பாதிக்கிறது. எல்லோரும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நித்திரைக்குச் செல்வதும் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருப்பதும் மிகவும் அற்பமான காரியங்களென்று நாம் நினைக்கலாம்.

ஆனால் இந்த அற்ப காரியங்கள வாழ்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன வென்று மேற்கூறியவற்றிலிருந்து நன்கு அறியலாம். குடும்பத் தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து போஜனம் செய்யும் சமயங்களில் தமாஷாக விஷயங்களைப் பேசிக்கொண்டு மன மகிழ்ச்சியோடு ஆகாரத்தை உட்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது. மேல் நாடுகளில் சில குடும்பங்களில்

போஜன வேளையில் படிப்பதற்கென்றே சில புத்தகங்களை வைத்திருக்கிருர்கள்.

நம்நாட்டில் அரச குடும்பங்களில் போஜன வேளையில் சங்கீதக் கச்சேரிகள் நடைபெறுவதைப் பற்றி அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம். போஜனவேளையில் போஜனத்தைப் பற்றி மட்டும்தான் சிந்திக்கவேண்டும். இந்தக் கருத்தையொட்டி மனிதன் எதைச் செய்தாலும் தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றதாயிருக்கும்.

நாம் உட்கொள்ளும் ஒவ்வொரு பிடி ஆகாரத்தின் ருசியையும் பூரணமாக அனுபவிப்பதனுல் ஜீரணம் சுலபமாகிறது. அதாவது மிகச் சூடாக உட்கொள்ளும் பொருள்களை வர்யில் சிறிதுநேரம் சுவைத்து சூட்டைத் தணித்து பிறகு விழுங்கவேண்டும். இதேபோல ஐஸ் கிரீம்போன்ற குளிர்ந்த பொருள்களைச் சற்றுநேரம் வாயில் வைத்துக்கொண்டிருந்து இப்பொருள்களைச் சற்று சூடாக்கி பிறகு விழுங்கவேண்டும். பசிக்கும் சமயத்தில் நம் வயிறு ஒரு சுருங்கிய பையைப்போன்றிருக்கும், அதற்குள் சிறிது சிறிதாக ஆகாரத்தைச் செலுத்தி பையை மெள்ள மெள்ள நிரப்பவேண்டும். இம்மாதிரி செய்யாமல் பரபரப்பாக சூடான பொருள்களையும் சுவைத்தும் சுவைக்காமலும் விழுங்கிவிட்டோமானுல் வயிறு, நமக்கு கன்னத்தில் அடிப்பதுபோல் ஒரு தண்டனையை அளிக்கிறது. வயிற்றுவலி, நெஞ்செரிச்சல், விக்கல், ஏப்பம், வாயு முதலிய எல்லாவற்றிற்கும் காரணம் நிம்மதியின்றி ஆகாரத்தை உட்கொள்ளுவதேதான். ஐக்கிய நாட்டில் வயிற்றுப் புண் இல்லாதவர்கள் மிகக் குறைவென்று கூறுகிருர்கள். இதற்குக் காரணங்கள் மதுபானமும் அவசரமாய் ஆகாரங்களை உட்கொள்ளுவதுமே என்றும் கூறுகின்றனர். மதுபானத்தையாவது சர்க்கார் சட்டப்படி தடைசெய்யலாம். இந்தியாவில் சில மாகாணங்

களில் தடைசெய்யப்பட்டுமிருக்கின்றன. ஆனால் அவசரமாய் ஆகாரம் உட்கொள்வதென்பதை எந்த சர்க்கார் சட்டங்களும் பாதிக்கமுடியாது. பிரபுவானாலும், சாதாரண மனிதனாயிருந்தாலும், எல்லோரும் போஜன விதிகளை அனுசரித்து அவரவர் வசதிக்குத் தகுந்த ஆகாராதிகளை நிம்மதியுடனும் மனமகிழ்ச்சியுடனும் உட்கொண்டு ஆரோக்கியத்தைப் பெறுவது மகத்தான தேசத் தொண்டாகும்.

அல்லி ராஜ்யம்

பார்மோஸா தீவுக்கருகே மற்றொரு சிறிய தீவிருக்கிறது. இதை ஒரு அல்லி ராஜ்யம் என்று கூறலாம். இத்தீவின் ஜனத் தொகை 1400 பேர்கள். இதில் பாதிக்குமேல் ஸ்திரீகள். இந்த ஸ்திரீகள் அரையில் இலைகளால்ஆன ஆடைகளை மட்டுந்தான் தரிக்கிறார்கள். கலியாணமான சில காலத்திற்குள் குழந்தை பிறக்காவிடில் மனைவி கணவனை ரத்து செய்துவிடுவாள். விவாக ரத்து செய்வதற்கு கணவன் மனைவியின் கழுத்தில் கட்டிய தாலியாகிய பவழமாலையை மனைவி திருப்பிக் கணவனிடத்தில் கொடுத்தால் போதும். தனக்கு மூன்று குழந்தைகளுக்குமேல் பிறந்துவிட்டாலும் மனைவி கணவனை ரத்து செய்துவிடுவாள்.

இந்தத் தீவிற்குச் சமீபத்தில் மிகவும் ருசியான ஒருவகை மீன் அகப்படுகிறது. ஆனால் இதைப் பிடிப்பது வெகு சிரமம். தான் விரும்பிய அளவிற்கு இந்த மீனைக் கணவன் மனைவிக்குப் பிடித்துத் தராவிட்டாலும் கணவனுக்குச் சீட்டுக்கொடுத்துவிடுவாள் மனைவி.

வீட்டு வேலைகளைக் கணவன்தான் செய்யவேண்டும். மனைவி பயிர் வேலைகளைக் கவனித்துக்கொள்வாள். இந்தத் தீவை "மரணத் தீவு" என்று அழைக்கிறார்கள். இந்தத்தீவில் வரியே கிடையாது. தீவு பூராவிற்கும் மூன்றே போலீஸ்காரர்கள்தான் உண்டு.

கோவளம்
[கோமளவல்லிபுரம்]

●

காலப்போக்கினாலும், அன்னியர்கள் கூட்டுறவாலும், நமது பழமையான ஊர்கள் பலவற்றின் அழகான பெயர்கள் அலங்கோலமாக மாறியிருக்கின்றன. அடையாற்றுக்குத் தெற்கே கடலோரமாகக் கோவளம் என்று ஓர் ஊர் இருக்கிறது. இதன் ஆதிப் பெயர், அழகான பெயர், கோமளவல்லிபுரம்.

இந்தக் கோவளம் என்ற கோமளவல்லிபுரத்திற்குத் தெற்கே இரண்டுமைல் தூரத்தில் திருவிடவெந்தை என்ற திருமால் திருப்பதியிருக்கிறது. இது தென்னாட்டிலுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்று; திருவிடவெந்தைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆதிவராகப் பெருமாளின் தேவியார் தோன்றிய ஊரானதால் அதற்குக் கோமளவல்லிபுரம் என்ற அழகிய பெயர் ஏற்பட்டது. அதனை அந்தக் காலத்தில் இந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய போர்ச்சுகீசியர்கள் கோவலாங் Covelong என்று வழங்கிவந்தார்கள். கோவலாங் என்பதைக் கோவளம் என்று நம்மவர்கள் வழங்கத் தொடங்கினார்கள். அந்தப் பெயரே இன்னும் வழங்கி வருகிறது. ஆனால் உண்மைப் பெயர் கோமளவல்லிபுரமேயாகும்.

கோவளத்தை அடுத்த திருவிடவெந்தைக் கோயில் விஜயராஜேந்திர சோழமன்னனால் கி. பி. 1052-ல் கட்டப்பட்டதென்று தெரிகிறது. சென்னைக்குத் தென்மேற்கே

பதினைந்துமைல் தொலைவிலுள்ள திருநீர்மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்வரை, கிழக்கே பத்துமைல் தொலைவிலுள்ள திருவிடவெந்தைக்கு ஆண்டுக்கு ஒருமுறை கடலாடச் சென்று கொண்டிருந்தார். அடியார்களின் ஊக்கக் குறைவால் அந்த வழக்கம் பிற்காலத்தில் நின்றுபோய் விட்டது.

பழைமையானதும் பாடல்பெற்றதுமான திருவிடவெந்தைக்கோயில் இன்று சீர்கேடாயிருக்கிறது. சென்னையிலும் பக்கத்திலுமுள்ள அடியார்கள் சிந்தை செலுத்தி இந்தக் கோயிலைப் பழுதுபார்த்துச் சீர்பெறச் செய்ய வேண்டும்.

பரலி. சு. நெல்லையப்பர்.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

- ★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்
- ★ 50-க்கு மேலான அரசியல் சமூக, விஞ்ஞான க்கட்டுரைகள், உண்மைக் கதைகள் !
- ★ பலதரப்பட்ட விஷயங்கள் !
- ★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.
- ★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

இயற்கையின் விளைவுகளைத்தடுக்க முடியாவிடினும் அவற்றின் உண்மைகளை அறிவது நலம்.

பேதையின் குழந்தை மேதை!
மேதையின் குழந்தை மண்டு!

●

கர்ப்பத்திலிருக்கும் சிசு ஆணு பெண்ணு என்றும் தாயைப்போலிருக்குமா அல்லது தந்தையைப்போலிருக்குமா என்பதைப் பற்றியும் யாரும் அறிய ஆவல் கொள்வது சகஜம்.

விஞ்ஞானம் முன்னேற்றமடைந்திருக்கும் இக்காலத்திலும்கூட கர்ப்பத்திலிருக்கும் சிசு ஆணு பெண்ணு என்று திட்டமாய்ச் சொல்வது சாத்தியமாகவில்லை. பிரசுவம் ஆவதற்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்பு கர்ப்பவதியின் உமிழ் நீரைச் சோதித்தால் குழந்தை ஆணு பெண்ணு என்று திட்டமாய்க் கூறமுடியும் என சமீபத்தில் சில நிபுணர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

இந்த ஒரு பிரச்னையைப் பற்றித் திட்டமாக அபிப்பிராயம் கூறமுடியாவிட்டாலும் குழந்தையைப் பற்றிய வேறு அநேக விஷயங்களைத் திட்டமாய்க் கூறுவதற்கு நிபுணர்களால் முடியும். உதாரணமாக பிறக்கப்போகும் குழந்தையின் கண் எப்படியிருக்கும், மூக்கு எப்படியிருக்கும் பெற்றோரின் நல்ல குணங்கள் குழந்தைக்கு இருக்குமா இருக்காதா என்பன போன்ற பிரச்னைகளுக்குத் திட்டமாய்ப் பதில் கூறுவதற்கும் வழி கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வழிதான் பரம்பரைக் குண விசேஷங்களின் ஆராய்ச்சியாகும். ஆண் குழந்தை தந்தையைப் போலவும் பெண் குழந்தை தாயைப் போலவும் இருக்கும் என்று சொல்வது எளிதானலும் இக்கருத்து எப்போதும் சரியாகாது!

கர்ப்பத்திலுள்ள குழந்தையின் தோற்றம், சுபாவம் முதலியவற்றிற்குக் காரணம் பரம்பரைக் குண விசேஷங்களுக்கும் பொறுப்புள்ள அம்சங்களேயாகும். இந்த அம்சங்கள் தாயின் சரீரத்திலும் தந்தையின் சரீரத்திலும் இருக்கின்றன. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிச் சர்க்கரையைக் கலந்து அருந்தினல் இந்தப் பானம் இனிப்பாயிருக்கிறது. உப்பைக்கலந்து அருந்தினல் உப்புக்கரிக்கிறது. உப்பும், சர்க்கரையும் சரி சமனய்க் கலந்திருந்தால் அந்தப் பானத்தின் ருசி வேறுவிதமாயிருக்கும். உப்பு அதிகமாகவும், சர்க்கரை குறைவாகவும் சேர்த்தால் பானத்தில் இனிக்கும் பொருள் கலந்திருப்பினும் உப்பின் ருசிதான் மேல்நோக்கி இருக்கிறது. இதுபோலவே உப்பு குறைவாகவும் சர்க்கரை அதிகமாயிருந்தால் பானத்தின் ருசி அறவே இனிப்புத்தான் என்று கூறமுடியாமலிருக்கும்.

இதுபோலவேதான் குழந்தையின் குணதிசயங்களைச் சிருஷ்டிப்பதில் பரம்பரையான குணங்களுக்குப் பொறுப்புள்ள அம்சங்கள் தாயிடத்திலுமிருந்தும் தந்தையிடத்திலிருந்தும் சேருகின்றன.

தந்தையின் முக்கியமான அம்சங்களை குழந்தையிடம் கண்டிப்பாய்க்காணலாம். ஆனல் தந்தையிடம் அவ்வளவு தெளிவாகக் காணுமலிருந்த அம்சங்களையும் குழந்தையிடத்தில் காணலாம். இந்த அம்சங்கள் தந்தையின் தேகத்திலேயே குடிகொண்டிருந்தாலும் தெளிவாய்த் தெரிந்திருக்காது.

பொதுவாக குழந்தைகள் அவர்கள் பெற்ருேர்களின் தோற்றம், தேகக்கட்டு, கண்பார்வை, முகஜாடை, தலை ரோமங்களின் ஒற்றுமை, முதலியவற்றைப் பெறுவது இயற்கையே. ஆனல் பெற்ருேரைத் துளிக்கூடத் தோற்றத்தில் ஒத்திராத குழந்தைகளும் உண்டு.

அழகுவாய்ந்தவர் என்று சொல்லமுடியாத பெற்ருேர்களுக்கு அழகான குழந்தைகளும் உண்மையில் அழகுபடைத்த பெற்ருேர்களுக்கு அழகில்லாத குழந்தைகளும் பிறப்பது அபூர்வமல்ல. இதற்கெல்லாம்தான் காரணம் நாம் மேற்கூறியுள்ள பரம்பரைக் குணதிசயங்களுக்குப் பொறுப்புள்ள அம்சங்களாகும்.

பெற்ருேர்கள் அழகில்லாதவர்களாயிருந்தாலும் அவர்களின பூர்வீகர் யாராவது அழகாயிருந்தால் அந்த அழகை குழந்தை பெறலாம். இதேபோன்று அழகான பெற்ருேர்களுக்கு அழகில்லாத பாட்டனரோ, பாட்டியோ இருந்தால் அந்த அழகில்லாத தோற்றம் இவர்களுடைய குழந்தையிடம் காணலாம்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்னவென்ருல், ஒரு குழந்தையின் தோற்றத்திற்கும் சுபாவ குணத்திற்கும் காரணம் குழந்தையின் பெற்ருேர் மட்டுமல்ல. அவர்கள் பூர்வீகர்கள் எல்லோருக்கும் இந்தக் குழந்தையின் குணதிசயங்களையும், தோற்றத்தையும் உயர்விக்கவோ, தாழ்விக்கவோ பொறுப்பு உள்ளது என்பதே. நம் நாட்டில் கலியாணத்திற்காக தம்பதிகளைத் தேடித்தேர்ந்தெடுக்கும்போது இருதரப்பிலும் ஏழு தலைமுறைகளின் குணவிசேஷங்களைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்பது பெரியோர்களின் சித்தாந்தம். இந்தச் சித்தாந்தத்தை இன்றைய நிபுணர்கள் சோதனைமூலம் கண்டுபிடித்துள்ள கருத்தும் ஆதரிக்கிறது.

குழந்தை பிறந்தால் அதனுடைய புத்தி சாதாரண மனிதரைப்போலிருக்குமா அல்லது விபரீதமாயிருக்குமா என்று கவலைப்படுவோருமுண்டு.

பயித்தியக்காரரின் குழந்தை பயித்தியமாய்தானிருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. குழந்தைகளுக்குப் பயித்தியம் பிடிப்பதற்கும் வேறுவிதமான விபரீதபுத்தி ஏற்படுவதற்கும் காரணம் பரம்பரைச் சுபாவக் குணமேயல்ல. இந்த மாதிரி விளைவுகளுக்குக் காரணம் கர்ப்பவதியாயிருக்கும் போது ஒரு ஸ்திரீக்கு மனசில் பயமோ, வெறுப்போ ஏதாவ்து ஏற்படுவதேயாகும். இதனாலேயே கர்ப்பஸ்திரீகளை மிக ஜாக்கிரதையாயும், அன்புடனும் பாதுகாக்க வேண்டுமென்று பழையகாலத்து மனிதர்களும் இப்போதுள்ள நிபுணர்களும் ஒரு முகமாக அபிப்பிராயப்படுகின்றனர். தந்தை தாய் இருவருக்கும் ஒன்றுபோலவே ஏதாவது புத்திக் கோளாறு ஏற்பட்டிருந்தால், இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் இந்தக் கோளாறு வந்தாலும் வரலாம். ஆனால் இதெல்லாம் சாதாரணமானதல்ல.

சாதாரணமாய்ப் பிறந்த குழந்தையின் அறிவு எப்படியிருக்கும்? பெற்றோரின் அறிவு இந்தக் கேள்விக்கு விடைதராது. சாதாரணமாகத் தாய்க்கும் தகப்பனுக்கும் உள்ள சராசரி அறிவைக் குழந்தை பெறலாம். தாயோ தகப்பனோ அசாதாரண புத்தி படைத்தவர்களாயிருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் அறிவு அவர்களுடைய புத்தியைவிடக் குறைவாகத்தானிருக்கும்.

மிகச் சாதாரண அறிவு படைத்த பெற்றோர்கள் அசாதாரணக் குழந்தைகளைப் பெறுவார்கள். சங்கீதம், கலைகள் முதலிய துறைகளின் தேர்ச்சி பெற்றோர்கள் யாருக்காவது இருந்தால் குழந்தைக்கும் இந்தத் துறையில் ஞானம் வரலாம். இல்லாவிடில் பெற்றோர்கள் ஞானமடைந்த

வேறு ஏதாவது ஒரு துறையில் குழந்தை ஞான மடையலாம்.

இதனுல் சங்கீதத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு தாயின் பெண் சங்கீதத்தில் சற்றும் ஞானம் பெற வில்லையே என்று ஏங்குவது அறிவீனம் என்பது தெளிவு. சங்கித விதுஷியின் மகளுக்குச் சித்திரக் கலேயில் ஞான மிருந்தால் அதற்குக் காரணம் தாய் சங்கீதத்தில் பெற்ற தேர்ச்சியே. ஒழுக்கத்தோடு வளர்வதும் ஒழுக்கமற்றுப் போவதும் பாரம்பரிய குணுதிசயங்களே யொட்டியதால். பெற்ருேர்கள் குழந்தைகளே வளர்ப்பதில் அடைந்த நற் பயிற்சி தான், குழந்தைகள் ஒழுக்கத்தோடு வளர்வதற்கும் ஒழுக்கமற்றுப் போவதற்கும் காரணம். குழந்தைகள் ஒழுக்கமற்றுப்போவது பரம்பரைக் குணுதிசயங்களினுல் தான். அதனுல் அதைப் பற்றிக் கவலேப்படுவதில் பய னில்லே என்று விடுவது தவறு.

குடிகாரன் மகன் குடிகாரனுக வேண்டிய நியாயமே யில்லே. அவன் நல்லொழுக்கமுள்ளவனுகவும் வாழலாம். இதெல்லாம் பெற்ருேர்களின் குழந்தைகளே வளர்ப்பதி லுள்ள கவனிப்பையும் அக்கறையையும் பொறுத்தது. தீயவழிகளில் போகாமலிருப்பதற்குக் குழந்தைப் பருவத் திலேயே பயிற்சியளித்தால் எந்தக் குழந்தையும் தீய காரி யங்களில் ஈடுபடாது. ஏழை மக்களுக்குக் குழந்தைகள் ஒழுக்கத்துடன் வளரும் சூழ்நிலேயைச் சிருஷ்டிக்க முடி யாததால் துர்க்குணங்களேப் பரம்பரையாகக் குழந்தை பெற்றுவிடுகிறது.

தனக்கு எம்மாதிரிக் குழந்தை பிறக்குமோ என்ற கவலே பயனற்றது. பிறக்கும் குழந்தை எம்மாதிரி இருந் தாலும் அதை நல்லவழியில் திருப்புவதற்குச் சரியான முயற்சி எடுத்தால் முடியும். எல்லோருக்குமிருக்கவேண் டிய கவலே என்னவென்ருல், பிறக்கும் குழந்தைக்கு ஒழுக்

கத்துடனும் அழகாக வளருவதற்குத் தகுந்த சூழ்நிலையைத் தன்னல் அளிக்கமுடியுமாவெனபதுதான். சூழ்நிலை நன்முக இருந்தால் அதில் வளரும் குழந்தைகள் ஒழுக்கமுள்ளவர்களாய் விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. இம்மாதிரி சூழ்நிலையை அளிக்கச் சக்தியுள்ளவர்களுக்கு மட்டுமே குழந்தைகள் பிறக்குமானல் ஜனப் பெருக்கம் என்ற தலை வலியைத் தவிர்ப்பதில் சிரமமேது ?

அவதூதர்கள்-ஆனல் சந்நியாசிகள் அல்ல

கனடா தேசத்தில் விநோத பழக்கவழக்கங்களுள்ள ஒரு சிறு ஜனத்தொகை இருக்கிறது. எல்லா மனித சரீரத்திலும் கடவுளின் அம்சம் குடிகொண்டிருக்கிறதென்றும், ஒருவரும் ஒரு பொருளையும் தன் சொந்தமாக வைத்துக்கொள்ளக்கூடாதென்பதும் இவர்களுடைய மதக்கொள்கைகள். இதன் பிரகாரம் இந்த இனத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஆடைகளையே அணிவது இல்லை. ஐம்பது வருஷங்களுக்குமுன்பு கனடாவிற்குக் குடியேறியதிலிருந்து இன்றுவரை, இவர்களுக்கும் கனடா போலீசாருக்கும் தகராறுதான். இந்த இனத்தைச் சேர்ந்தவர்களின் ஜனத்தொகையின் எண்ணிக்கை பத்தாயிரம் பேர்கள். சென்ற மகாயுத்தத்தில் ராணுவத்தில் சேரமுடியாதென்று சத்தியாக்கிரகம் செய்தார்கள். இதனல் இவர்களுக்கு அநேக தகராறுகள் அந்தச் சமயத்தில் ஏற்பட்டன.

விசித்திர விமானப் பிரயாணிகள்

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பிரயாணக் கட்டணமாக வசூல் செய்யும் ஆகாய விமானங்களில் மனிதர்கள் மட்டும் பிரயாணம் செய்கிறார்களென்று கருதுவது தவறு.

விமானங்களில் யாத்திரை செய்யும் பிராணிகளின் உண்மை நமக்குத் தெரிந்தால் மிகவும் விந்தையாயிருக்கும். சமீபத்தில் ஒரு விமானம் தாய்லாந்திலிருந்து நியூயார்க்குக்குச் சென்றது. நியூயார்க்கில் விமான நிலையத்தை அடைந்ததும் விமானத்திலிருந்து வெளிவந்த பிரயாணிப் பிராணிகள் வருமாறு:—

ஆறு யானைக் குட்டிகள், 23 அடி நீளமுள்ள மலைப் பாம்பு, 116 குரங்குகள், இரண்டு சிறுத்தைகள் - இரு சிறுத்தைக் குட்டிகள். விமானம் தாய்லாந்திலிருந்து கிளம்பியவுடன் மலைப்பாம்பு எட்டுக் கோழிகளை விழுங்கி விட்டு 12,000 மைல்கள் பிரயாணம் முடியும் வரை நித்திரை செய்ததாம்.

யானைகளை விமானங்கள் மூலமாக இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய ராஜ்யங்களுக்குக் கொண்டுபோவது சகஜம். மிருகங்களை விமானம் மூலம் அனுப்புவது, கப்பல் மூலம் அனுப்புவதைவிடச் சிறந்த வழியாகும். ஏனென்றால் கப்பல்மூலம் போகும் பிராணிகள் சீதோஷ்ண மாறுபாடுகளால் சீக்கிரம் பாதிக்கப்படுகின்றன. வயிற்றுக் கோளாறு வெகு சீக்கிரத்தில் கப்பல் பிரயாணிகளைப் பீடிக்கிறது. விமானப் பிரயாணத்திலோ இந்த உபத்திரவமெல்லாம் கிடையாது. குதிரைப் பந்தயத்தில் ஓடும் குதிரைகளை ஒரு ராஜ்யத்தில பந்தயம் முடிந்த பிறகு வேறு ராஜ்யங்களுக்கு அனுப்புவதற்கு ஆகாய விமானம்தான் ஏற்றதாயிருக்கிறது.

அமெரிக்காவில் கண் காட்சி சாலைகளுக்குத் தேவையான பிராணிகளை யெல்லாம் வாடிக்கையாய் ஆகாயவிமானங்களில் அனுப்புவது வழக்கம். மெக்ஸிகோ, தென் அமெரிக்கா முதலிய ராஜ்யங்களிலிருந்து அந்த தேசங்களின் விசேஷப் பிராணிகளை வட அமெரிக்காவிற்கும் அனுப்புவதுண்டு. இம் மாதிரி அபூர்வப் பிராணிகள் விமானத்தில் பிரயாணஞ் செய்யும் பொழுது இவற்றைக் கவனித்துக் கொள்வதற்கும் உணவு அளிப்பதற்கும் விமானக் கம்பெனியாரின் ஆள்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகாய விமானப் பிரயாண வசதிகள் அமெரிக்காவில் ஏராளமாய் இருப்பதால், அமெரிக்காவின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு அன்றாடம் தயாராகும் ஆகாராதிகள் கூட கெடாமல் சுத்தமாய்ப் போய்ச் சேருகின்றன.

இந்தியாவிலிருந்து பல தடவைகள், யானைகள், புலிகள், சிங்கங்கள் முதலியவற்றை ஆகாயவிமானங்கள் மூலம் வேறு நாடுகளுக்கு அனுப்பியுள்ளனர். ஏராளமான சாமான்களையும் விசேஷப் பிராணிகளையும் சௌகரியமாய்க் கொண்டுபோவதற்கு அமெரிக்க ஆகாய விமானங்களில் தனி வசதிகள் உண்டு.

ஆகாயவிமானங்களில் பிரயாணஞ் செய்யும் பிராணிகளைத் தவிர வியாபாரத்திற்குத் தேவையான சரக்குகளும் விமானம் மூலம் தினந் தோறும் ராஜ்யத்திற்கு ராஜ்யம் போகின்றன. சமீபத்தில் ஒரு எண்ணெய்க் கம்பெனியின் கப்பல் ஏராளமான எண்ணெய் 'டிரம்'களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவிற்குக் கிளம்பியது. அமெரிக்காவிற்குப் போகும் வழியில் இத்தாலி ராஜ்யத்தின் துறைமுகத்தின் அருகே வந்ததும் கப்பலில் ஏதோ யந்திரக் கோளாறினால் கப்பல் தங்க நேரிட்டது. அமெரிக்காவிலிருந்து கப்பலில் பழுது பார்க்கவேண்டிய கருவிகளை ஒரு விமானம் மூலமாகவே வரவழைத்தனர். இப்படிச் செய்ததால் கப்பல் பிரயாணம் ஒரு வாரத்திற்குத்தான் தடங்கல் ஏற்பட்டது.

பழுது பார்க்கும் கருவிகள் அமெரிக்காவிலிருந்து கப்பல் மூலமாகவே வந்

திருந்தால் அவை வந்து சேருவதற்கு ஒன்றரை மாதம் பிடித்திருக்கும். இதனால் எண்ணெய்க் கம்பெனிக்கு நேர்ந்திருக்கக் கூடிய அபரிமிதமான இடையூறுகளும் வியாபார நஷ்டங்களும் ஆகாய விமானத்தில் கருவிகள் வந்து சேர்ந்ததால் தவிர்க்கப்பட்டன.

மாவாக்கிவிடும் மண் புழு

மண்ணுணிப் பாம்பு மிகவும் வலிமை வாய்ந்த புழு என்று தான் கூறவேண்டும். ஒரு வருஷத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் 18டன் மண்ணை வெளியே கொண்டுவருகிறது. மண், கல், பாறை இவை எல்லாவற்றையும் இது விழுங்கிவிடுகிறது. இதனுடைய ஜீரண சக்தியின் வலிமையினுல் எவ்வளவு கடினமான பொருளையும் மாவுக்குச் சமானமாய்க் கரைத்து விடுகிறது.

இதன் சரீரத்தினுள் சென்று வெளியே வரும் பொருள்கள் காய்கறிப் பயிர்களுக்கு மிகவும் ஏற்ற உரமாகிறதாம்.

★

சரீரம் படும் பாடு!

24 மணி நேரத்தில் உங்கள் சரீரத்தில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடக்கின்றனவென்று தெரியுமா? உங்கள் ஹிருதயம் 1,03,680 தடவைகள் அடித்துக் கொள்கிறது. 2,30,40 தடவைகள் நீங்கள் மூச்சு விடுகிறீர்கள். 2 படி தண்ணீர் அருந்துகிறீர்கள். 3 பவுண்டு உணவு உட்கொள்ளுகிறீர்கள். 4800 வார்த்தைகள் பேசுகிறீர்கள். உங்கள் தலை ரோமம் ஒரு அங்குலத்தில் 5 பங்கு வளருகிறது. தூக்கத்தில் 30 தடவை நீங்கள் புரளுகிறீர்கள்.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR

ALL YOUR DRESS

REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

குட்டி ராஜ்யங்களில் மக்களுக்குத் துன்பமில்லை

●

இன்று உலகில் பலவிதமான கூக்குரல்கள் முழங்குகின்றன. உண்ண உணவில்லாமல் பட்டினியால் வாடுகிறார்கள் சில ராஜ்யங்களில். வேலையில்லாத்திண்டாட்டத்தால் வேதனை அடைகின்றனர் வேறு சில ராஜ்யங்களில். அணுகுண்டு, ஜலவாயுக் குண்டு முதலியவற்றால் அபாயங்கள் நேரிடுமென்ற பயத்தால் தவிக்கின்றனர் சில ராஜ்யங்களில். அன்னிய ஆட்சியின் கொடுமைகளால் அவதியுறுகின்றனர். இன்னுஞ் சில ராஜ்ய மக்கள்.

இம்மாதிரித் தொல்லைகளும், துன்பங்களும் ஒன்றுமே யில்லாத ராஜ்யங்களும் இந்த நூற்றாண்டில் இருக்கின்றன வென்பது அநேக வாசகர்களுக்கு நம்பமுடியாத விஷயமாய்த் தோன்றலாம்.

மால்தீவ் என்ற ஒரு குடியரசு சமீபத்தில் தோன்றியது. இது பன்னிரண்டு தீவுகள் சேர்ந்த ஒரு கூட்டம். இலங்கைக்கு 450 மைல்கள் மேற்கேயுள்ளது. இந்தக் குடியரசின் தலைவரான அமீன் டிடி என்பவர்தான் இந்த ராஜ்யத்தின் பிரதமர், கல்வி மந்திரியும், பொருளாதார மந்திரியும் இவரேதான். 500 படை வீரரைக்கொண்ட சைன்யத்திற்கும் தலைவர் இவர்தான். மால்தீவ் குடியரசின் ஜனத்தொகையின் எண்ணிக்கை 93,000

மால்தீவ் ராஜ்யத்தில் வீசுங் காற்று, பரமானந்தம் நிறைந்தது. என்றும் சந்திரனின் குளிர் கிரணங்கள் இங்குள்ளவர்களின் இரத்தத்திற்குப் புத்துயிர் அளிக்கிறதென பிரதமர் டிடி கூறுகிறாராம்.

ருஷ்யா, சீனா, ஆப்கானிஸ்தானம் இந்த மூன்று தேசங்களும் ஒரு இடத்தில் சந்திக்கின்றன. அந்த இடத்தில் 26,000 பேர்கள்ஜனத்தொகைகொண்ட ஹன்ஸா என்ற ஒரு குட்டி ராஜ்யம் இருக்கிறது. இதன் தலைவர் சமீபத்தில் இங்கிலாந்திற்குச் சென்றபோது, தன் ராஜ்யத்தைப் பற்றிச் சில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

1. ஹன்ஸா ராஜ்யத்தில் எங்களுக்குப் பணம் கிடையாது.

2. சிறைச்சாலைகள் கிடையாது

3. நீதி ஸ்தலங்கள் கிடையாது.

4. ஸினிமா இல்லை

5. குற்றம் மருந்துக்குக் கூட கிடையாது.

6. சாலைகளும் கிடையாது. அவற்றின்மேல் ஓடுவதற்கு வண்டிகளும் கிடையாது.

7. ஜனங்களுக்கு நோய்களும் கிடையாது, 8. என் சிப்பந்திகளுக்கு நான் சம்பளமே கொடுக்கும் பழக்கமேயில்லை, நான் அருந்தும் உணவைத்தான் அவர்கள் உட்கொள்ளுகிறார்கள், நான் அணியும் ஆடைகளைத்தான் அவர்களும் அணிகிறார்கள், அவரவர்களுக்குத் தேவையானபடி அவரவர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டு வசிக்கிறார்கள்.

அவரவர்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை அவரவர்கள் பயிர்செய்து கொள்கிறார்கள். எங்கள் ராஜ்யம் சிறிதாயிருக்கலாம், நாங்கள் நாகரிகமற்றவர்களாயுமிருக்கலாம். ஆனால் அபாரமான நாகரிகமடைந்த பெரிய ராஜ்யங்களில் இப்பொழுதுள்ள துன்பங்கள் எங்கள் ராஜ்யத்தில் இல்லவே இல்லையே!

ஹன்ஸா ராஜ்யத் தலைவர் இவ்வாறு மார்த் தட்டிக்கொள்வது நியாயம்தானே!

அரேபியா ராஜ்யத்திலுள்ள குவைட்டின் ஜனத்தொகை ஒன்றரை லட்சம். இதைப் பாலைவனப் பிரதேசம் என்று சொல்லத் தேவையில்லை.

தினந்தோறும் அறுநூறு கோடி காலன் எண்ணெய் வெளிநாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. இதனால் இந்த ராஜ்யத்தின் அரசனுக்கு வாரத்தில் 15 கோடி ரூபாய் வருமானம் உண்டு. இந்த ராஜ்யத்தில் வரி என்பதே கிடையாது. பார்க்குமிடமெல்லாம் பாலைவனமானதால் எங்கும் சாலைகளே கிடையாது அவற்றிற்குத் தேவையுமில்லை.

இம்மாதிரி சில குட்டி ராஜ்யங்கள் ஐரோப்பாவிலும் உண்டு. மொனக்கோ என்ற ராஜ்யத்தில் உலகப் பிரதித்தி பெற்ற சூதாட்ட நிலையமான 'மாண்டி கார்லோ' என்ற ஒரு இடம் இருக்கிறது. இந்த இடத்தில் இந்த சூதாட்ட நிலையம் மூலம் இந்த ராஜ்யத்திற்கு அமோக வருமானம் கிடைக்கிறது. தொழில்களோ, வியாபாரங்களோ ஒன்றும் இங்கே கிடையாது.

அண்டோரா என்பது மற்றொரு ராஜ்யம். இந்த ராஜ்யத்தில் ஒரே ஒரு தொழில்தான் பிரசித்தம். கள்ளக் கடத்தல் தான் அது. இந்த ராஜ்யத்திறகுத் தனியாக ஒரு சைனியம் கூடக் கிடையாது.

லிக்டென்ஸ்டெயின் என்ற ராஜ்யத்திற்குத் தபால் தலைகளை அச்சடித்து அவற்றை வெளி ராஜ்யங்களுக்கு விற்பதால் கிடைக்கும் வருமானத்தைத் தவிர வேறு வருமானம் ஒன்றும் கிடையாது.

சந்திரமண்டலத்திற்குச் சென்றல்

இந்த நூற்றாண்டு முடிவதற்கு முன் சந்திர மண்டலத்திற்குப் பிரயாணஞ் செய்வதற்கு வசதிகள் யாவும் பூர்த்தியாகிவிடு மென்று மேல்நாட்டு வான சாஸ்திர நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். பூமியிலிருந்து சந்திரமண்டலத்திற்குச் செல்வதற்கு இப்போதுள்ள தடங்கல்களைச் சமாளிக்கலாம். ஆனல் சந்திரமண்டலத்திற்குள்ளே பிரவேசித்த பிறகு என்ன செய்வது, எப்படி சமாளிப்பது என்பது பற்றி வான சாஸ்திர நிபுணர்களுக்கு இன்னும் புதிராகவே இருக்கிறது.

முதன் முதலாக பூமியிலிருப்பதுபோல் சந்திரமண்டலத்தில் காற்றுக்கு அழுத்தம் கிடையாது. ஆதலால் அங்கு வசிப்பதற்காகப் போகும்போது நாம் சுவாசிப்பதற்காகக் காற்றையும் எடுத்துச் செல்ல வேண்டியதாகிறது. நாம் பூமியில் உபயோகிக்கும் அநேக ஆடைகள் சந்திர மண்டலத்தில் சற்றும் பயன்படாது.

சந்திர மண்டலத்தில் சூரிய வெளிச்சத்தில் நிற்கும்போது நம்மை எரியச் செய்வது போன்ற வெப்பமிருக்கிறது. நிழலோ அதி சீதளமாக இருக்கிறது. இந்த இரண்டு சீதோஷ்ண நிலைக்கும் ஏற்றவாறு இருக்கவேண்டும் மனிதர் அணியும் ஆடைகள், சந்திர மண்டலத்தில் பிரயாணஞ் செய்வது மிகவும் சிரமமான காரியம். பூமியில் பிரயாணத்திற்காக உபயோகிக்கும் வாகனங்கள் இங்கே உபயோகப்படாது. காற்றே இல்லாததால் விமானங்களே பறக்காது.

பூமியிலிருந்து சந்திரமண்டலத்திற்கு செய்திகள் ஒலிபரப்பும் கருவிகள் மூலம் அனுப்பமுடியும். ஆனல் சந்திரமண்டலத்திற்குள்ளே ஒலிபரப்பும் கருவிகள் வேலை செய்யமுடியாது.

சந்திரமண்டலத்தில் திக்குத் திசைகளை அறிவது சிரமம். பூமியிலிருப்பது போல் காந்த சக்தியையளிக்கும் துருவதிசை சந்திரமண்டலத்தில் கிடையாது, கண்பார்வைக் கெட்டாத சில கிரணங்கள் சந்திர மண்டலத்தில் எங்கும் நிறைந்திருக்கும். இவை மனிதனுக்குத் தீங்கு பயப்பவை.

பூமியில் உலோகங்களிருப்பதுபோல் சந்திரமண்டலத்தினடியிலும் உலோகங்களிருப்பதாக வான சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனல் உணவுப் பயிர்கள் பயிர்செய்வது தான் முடியாத காரியம். இங்கு இப்போதுள்ள பயிர்பச்சைகள் உணவுக்கு ஏற்றதல்ல. அதனல் சந்திரமண்டலத்தில் வாழத் தொடங்கிவிட்டால் உணவுப் பொருள்களைப் பூமியிலிருந்துதான் கொண்டு போக நேரிடும்.

இம்மாதிரி ஒரு கிரகத்திலிருந்து மற்ருெரு கிரகத்திற்குச் செல்லும் எண்ணங்களினுலும் முயற்சிகளினுலும் என்ன பயன் பெறப் போகிருேம் என்றும் ஒரு வாதம் உண்டு. மனிதர்களில் முற்போக்காளர்களைக் கவிழ்ப்பதற்குப் பிற்போக்காளர்கள் எப்போதுந்தான் இருந்திருக்கிருர்கள். வான சாஸ்திர நிபுணர்களுக்குத் தான் சந்திர மண்டலத்தை அடைவதனல் மனிதகுலம் பெறும் நன்மைகளைப் பற்றித் தெரியும். எந்தவிதமான ஆராய்ச்சி சாலைகளுக்கும் வானிலை ஆராய்ச்சி நிலையங்களுக்கும் மிகவும் தகுதியான இடம்சந்திரமண்டலம் ஆகும். சந்திரமண்டலத்திலிருந்து ஆராய்ச்சி செய்தால் வானசாஸ்திரம் எவ்வளவோ முன்னேற்றமடையும். பூமியில் காற்றிலுள்ள அழுத்தத்தினல் சில நோய்கள் குணமாவதேயில்லை. இம்மாதிரி நோய்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து இவற்றை அறவே ஒழித்து மனித சமூகத்திற்கு க்ஷேமம் உண்டாக்குவதற்கும் சந்திரமண்டலம் ஏற்றதாயுள்ளது.

[இரு உண்மை சம்பவங்கள்]

அதிருஷ்டக் கோழிமுட்டை

★

1925-ம் ஆண்டில் சிப்பாய் ஒருவன் ராணுவக் கான்டீனுக்குச் சென்று ஒரு பாக்கெட் பிஸ்கோத்துகளை வாங்கினான். பாக்கெட்டைத்திறந்து பிஸ்கோத்துகளைத் தின்று கொண்டிருக்கும்போது, பிஸ்கோத்துகளிடையே வைத்திருந்த ஒரு சீட்டு அகப்பட்டது. அந்தச் சீட்டைப் படித்ததும் சிப்பாய் வியப்படைந்தான். அந்தச் சீட்டில் 20 வயதுள்ள ஒரு பெண்மணி "இந்தச் சீட்டு எவரிடம் கிடைக்கிறதோ அவரை நான் மணம்புரியத் தயார்" என்றிருந்தது. தவிர அந்தப் பெண்ணின் பெயரும், பூரா விலாசமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சிப்பாய்க்கு அடுத்த தடவை ரஜா கிடைத்தபோது அந்தச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த கிராமத்திற்குச் சென்றான். அந்தப் பெண்ணின் விலாசத்தைத் தேடி அவள் வீட்டைக் கண்டு பிடித்தான். வீட்டிற்குள் சென்றதும் சீட்டில் குறிப்பிட்டிருந்தபடி பெயருள்ள பெண்ணைச் சந்திக்கவேண்டுமென்று கோரினான். உடனே வயது முதிர்ந்து தலையெல்லாம் நரைத்த ஒரு கிழவி அவனை வீட்டுக்குள்ளே அழைத்தாள். "நீ எதற்காக அந்தப் பெண்ணைத் தேடுகிறாய்" என்று கேட்டாள்.

உடனே அவன் பிஸ்கோத்துப் பாக்கெட்டிலிருந்த சீட்டைக் காண்பித்து அந்தச் சீட்டு கிடைத்த விவரத்தையும் கூறினான்.

உடனே அந்தக் கிழவி குதூகலத்துடன் சிரித்துக்கொண்டு அவள்தான் அந்தச் சீட்டை எழுதினதாக ஒப்புக்கொண்டாள். ஆனால் அவள் பிஸ்கெட் கம்பெனியில் 40 வருஷங்களுக்கு முன்பு வேலையாயிருந்தபோதுதான் அந்தச் சீட்டை எழுதினதாகவும் கூறினாள்.

இந்தக் கிழவியைப் பார்ப்பதற்காக இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டோம் என்று சிப்பாய் மனம் நொந்து கொண்டான்.

இவனுடைய கருத்து என்னவென்று அறிந்த கிழவி தன்

நண்பர்கள் சிலர் வீட்டிற்கு இவனை ஒரு விருந்துக்காக அழைத்துச் சென்றாள். ஒரு நண்பர் வீட்டில் அவர் பெண்ணைக்கண்டு காதலித்து அந்தப் பெண்ணை மணந்து கொண்டு இந்த சிப்பாய் சௌக்கியமாய் வாழ்ந்தான்.

பிஸ்கோத்து பாக்கெட்டில் எழுதிவைக்கப்பட்ட சீட்டுமூலம் நிகழ்ந்த சம்பவங்கள் இவ்வளவு விநோதமாயிருந்ததென்றால் இதைவிட பன்மடங்கு விநோதமான சம்பவங்கள் ஒரு கோழி முட்டையின்மீது எழுதிவைத்திருந்த செய்திகளிலிருந்து ஆரம்பமாயிற்று.

நாட்டுப்புறத்திலுள்ள ஒரு கோழிப் பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்த ஒருபெண் பொழுதுபோக்காக "தனக்கு இந்த நாட்டுபுறத்தில் இருப்பது மிகவும் வெறுப்பாயிருக்கிறதென்றும் யாராவது ஒரு ஆண் தன்னை மணந்துகொண்டு ஒரு நகரத்திற்கு அழைத்துச் செல்ல மாட்டானா" என்ற ஏக்கத்தைத் தெரிவித்து ஒரு கோழி முட்டை மீது எழுதிவைத்தாள்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இதே கோழிமுட்டை நியூயார்க் வாசி ஒருவரிடம் கிடைத்தது. அந்தக் கோழிமுட்டையில் எழுதியிருந்த அந்தப் பெண்ணின் பெயர், விலாசம், எழுதின தேதி முதலியவற்றை நன்கு கிரகித்துக்கொண்டார். இரண்டு வருஷங்களாய்விட்ட மிகப் பழைய முட்டையைத் தனக்கு விற்றுத் தன் ஆரோக்கியத்தைக் கெடுக்க முயற்சித்த முட்டை வியாபாரியின்மீது தாவா செய்தார்.

தாவாசெய்வதற்கு முன்பு கோழிமுட்டைமீது கண்ட விலாசத்திற்குக் கடிதமெழுதி அவளை இந்த வழக்கில் சாட்சிகூறுமாறு அழைத்தார். "சாட்சி கூறத்தயார்" என்ற பதில் பெண்ணீடமிருந்து கிடைத்த பிறகு வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கிற்கு இந்தப் பெண் சாட்சி கூற வந்தவுடன் அவள் எவ்வளவு ரூபவதி என்பதைக்கண்டார். ஆனால் அவள் கலியாணமான ஸ்திரீ. சற்று நேரங் கழித்து அந்தப் பெண்ணின் தாயாரும் வந்து சேர்ந்தாள்.

பெண்ணின் தாயாரான விதவைக்கும் பெண்ணுக்கும் முகஜாடைகள் ஒருவரையொருவர் உரித்துவைத்தாற்போலிருந்தன.

பெண்ணின் தாயார்மீது இவர் காதல் கொண்டார். வழக்கில் தன் சாட்சி கூறியதன் மூலம் முட்டை வியாபாரி இவருக்கு ஒரு பெருந்தொகை நஷ்டஈடுகொடுக்கநேரிட்டது. வழக்கு முடிந்தபிறகு விதவை நியூயார்க் வாசியை மணந்துகொள்ள சம்மதித்தாள். அதிருஷ்டம் வரும் வேளையில், அது இரண்டு வருஷங்களான பழைய முட்டை மூலமாகவும் வரலாமன்றோ!

தலைகீழ்ப் பிராணி

●

வௌவாலை ஒரு அபசகுனமாய்த்தான் நாம் கருதுகிறோம். அதைப் பற்றிப் பொதுவாக எல்லோருக்கும் வெறுப்பும் பயமும் உண்டு. ஆனால் வௌவாலைப் போன்ற பரம சாதுவானதும் மனித சமூகத்திற்கு நன்மை புரியக் கூடியதுமான வேறெந்த பிராணியாவது இருப்பது சந்தேகம்தான்.

பயிரை அழிக்கும் பூச்சி வர்க்கங்கள் யாவற்றிற்கும் வௌவால் ஒரு பெரும் சத்துரு. வௌவால்களில் இரத்தத்தை உறிஞ்சும் ஒரு இனமும்உண்டு. இதிலிருந்துதான் வௌவால் இனத்திற்கே ஒரு கெட்ட பெயர் வந்துள்ளது. புறுவைப்போல் வௌவாலும் தனக்கிருப்பிடமாக ஒரு மரத்தையோ அல்லது கட்டிடத்தையோ பிடித்து விட்டால்அவற்றிலிருந்து சாகும் வரை வேறெங்கும் போகாது. இவற்றை இவ்விடங்களிலிருந்து அகற்றவேண்டுமென்றால் துப்பாக்கியை எடுத்துச் சுட்டால் தான் முடியும்.

இவை இருக்குமிடங்களில் ஒரு பெரிய ஜனத்திரள் கூடி உரத்த சப்தத்தில் கானங்களை எழுப்பினால் இவை ஓடிவிடும் என்று சமீபத்தில் கண்டுபிடித்துள்ளார்களாம்.

வௌவாலைக் கையில் பிடித்துப் பார்த்தீர்களேயானல் அதன் ஒவ்வொரு அங்கமும் நடுங்குவதைக் காணலாம். இவற்றின் கண்களுக்குத் தீட்சண்யமே கிடையாது.

கண் பார்வை அரை அங்குலம் தூரம்வரைதான் உண்டு. ரேடியோவின் ஒலி அலைகள் போன்று இவற்றின் தேகத்திலிருந்தும் ஒலி அலைகள் கிளம்பி இவை இருளில் பறக்கும்போது ஆபத்து நேரிடாமல் பாதுகாக்கின்றன. கண்கள் முக்கால் பங்கு குருடானாலும் காதுகள் மிகவும் தீட்சண்யமானவை.

பறவை இனங்களெல்லாம் பொதுவாக குளிர் காலத்தில் உஷ்ணப்பிரதேசங்களுக்குச் செல்வதுபோல் வௌவால்களும்போவதில்லை. ஆனால் இந்த குளிர் காலத்தில் வௌவால்கள் இரண்டு மூன்று மாதங்கள் சேர்ந்தாற்போல் நித்திரையில் ஆழ்ந்து விடுகின்றன. ஒன்றோடொன்றுநெருங்கிஅநேகலட்சம் வௌவால்கள் கூட்டங் கூட்ட

மாய் குளிர் காலததில் நித்திரை செய்யும்.

நித்திரையில் இருக்கும் வௌவால்கள் உயிரிழுந்த வௌவால்கள் போன்று ஜில்லென்று இருக்கும். பெண் வௌவால்கள் கருவுற்றிருந்தால் ஆண் வௌவால்களைப் பிரிந்து தனியிடங்களுக்குச் சென்றுவிடும். இந்த இடங்களில் லட்சக்கணக்கான கருவுற்ற வௌவால்கள் ஒன்றுகச் சேர்ந்து வௌவால் இனத்திற்கு என்றே ஏற்பட்ட ஒரு பிரமாண்ட பிரசவ ஆஸ்பத்திரியின் தோற்றத்தையளிக்கும்.

சாதாரணமாய் வௌவால் ஒரே குட்டியைத்தான் போடும். பிறவியில் இந்த குட்டி வௌவாலுக்குக் கண்ணே தெரியாது. இரண்டு மூன்று வாரங்களுக்கு இந்தக் குட்டி வௌவால் தன் தாய்மீதே ஒட்டிக்கொண்டிருக்கும். பிறகு தாய் வௌவால் குட்டியை தன்மேல் தூக்குவது சிரமமாய் தோன்றியவுடன், இந்தக் குட்டி வௌவாலை எங்கேயாவது ஒரு உயர்ந்த இடத்தில் இரண்டு கால்களால் தூக்கி வைத்துவிடும்.

தாயின் பால் ஊட்டுவது நின்றவுடனே குட்டி வௌவாலுக்குப் பசிதோன்றும். அப்போது குட்டி வௌவால் தானுகை இரை தேடக் கிளம்பும். மூன்று வாரங்கள் அல்லது ஒரு மாதம் ஆனபிறகு குட்டி வௌவால் பறக்கும் சக்தி அடைகிறது.

வௌவாலைப் பற்றி ஒரு ருசிகரமான அம்சம் என்னவென்ருல் இது தலை கீழாய்த் தொங்கும்போதுதான் வெளியில் உள்ள பொருளின் உண்மைத் தோற்றத்தை அறிய முடிகிறது. வௌவால்கள் அதிக மூளை கொண்டவை யாதலால்தான் தலைகீழாய்த் தொங்குகின்றன வென்றும் சிலர் கேலியாகக் கூறுவதுண்டு.

இதுவும் ஒரு பிழைப்பு !

ஓடும் பஸ்ஸில்ருந்து விழுவது ஒரு அபாயம், ஒரு துரதிருஷ்டம். ஆனல் இதுவும் ஒரு மனிதனுக்கு ஜீவனமாயிருக்கிறது. லண்டனில் பஸ் சர்வீஸ் நடத்தும் கம்பெனியாரிடம் இந்த மனிதர் உத்தியோகத்திலிருக்கிறார். பதினைந்து நிமிஷத்திற்கொருதடவை ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே விழுவதுதான் இவர் வேலை. இம்மாதிரி இவர் விழுவதின் உத்தேசம் பஸ் பிரயாணிகள், பஸ்களில் கூட்டம் அதிகமாயிருக்கும்போது எப்படி சமாளிப்பது என்று காண்பிப்பதற்காகவேதான்.

வாழ்க்கை வண்டியின் தண்டவாளங்கள்



நமது வாழ்க்கையும் ரயிலும் ஒன்று போலவே அமைந்துள்ளது. ஓர் ரயில் வண்டி ஒரு நிலையத்தை விட்டு மற்றொரு நிலையத்திற்குச் செல்லுகிறது. போகும்போதோ பல மலைகளையும், காடுகளையும், வனாந்திரங்களையும் கடக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் இரு தண்டவாளங்களை கொண்டே கடக்கிறது. இஞ்சின் 'டிரைவரை' நம்பியே அனைவரும் செல்கின்றனர். அந்த 'டிரைவர்' இரு தண்டவாளங்களிலிருந்தும் வழுவாமல் ஓட்டி செல்கிறான். அதனால் தான் குறிப்பிட்ட இடத்திற்கு எவ்வித இடைஞ்சலும் இன்றி செல்லமுடிகிறது. ரயில் தண்டவாளத்திலிருந்து தவறிவிட்டால் எவ்வித அபாயம் ஏற்படுகிறது என்பது தெரிந்ததே.

அதேபோல் நம் வாழ்க்கையிலும் என்றைக்கும் நம் குடும்பத்தினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழமுடிவதில்லை. எல்லோரும் பிரயாணம், உத்தியோகம் முதலிய காரணங்களால் பிரிய நேரிடுகிறது. எவ்வாறு ரயில் ஓர் ஊதல் ஊதிவிட்டு அத்தனை நேரம் பழகிய இடத்தைவிட்டுச் செல்கிறதோ அதேபோல் நாமும் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் நம் குடும்பத்தையும், சுற்றத்தாரையும், சிநேகிதர்களையும் பிரிய நேரிடுகிறது. நமது வாழ்க்கைப் பாதையும் எல்லா இடங்களிலும் பண்பட்டு இருப்பதில்லை. கரடுமுரடாகவும் பல இடைஞ்சல்கள் உள்ளதாகவும் தான் இருக்கிறது. ஆனால் நாம் ரயில் வண்டி எவவாறு இரு தண்டவாளங்களையும் பின்பற்றி எல்லா காடு, மலை, முதலியவற்றைத் தாண்டி தான் போகவேண்டிய இடத்திற்குச் செல்கிறதோ, அதேபோல் நாமும் தன்னம்பிக்கை, கடவுள் பக்தி என்ற இரு தண்டவாளங்களையும் பின்பற்றி நமது வாழ்க்கை

யாகிய கரடுமுரடான பாதையைக் கடக்கவேண்டும். எப்படி ரயில் வண்டி இரவிலும் பகலிலும் செல்ல நேரிடுகிறதோ அதேபோல் நம் வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் ஏற்படுகின்றன. ரயில் வண்டி இரவில் செல்லும்போது தன் விளக்கின் ஒளியினால் ஓடுகிறது. அதேபோல் நாமும் எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் நேர்மை, தைரியம் போன்ற விளக்கொளியின் உதவியால் நம் வாழ்க்கைப் பாதையை நாம் கடக்க வேண்டும். எப்படி ஓர் இஞ்சின் டிரைவரை நம்பி இத்தனை மக்களும் ஏறுகின்றனரோ அதே போல் இந்த உலகிலும் ஒவ்வொருவரும் மற்றொருவரை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. எவரும் இந்த சமுதாயத்தில் தனியாய் வாழமுடிவதில்லை. ரயில் எவ்வாறு பிரயாணிகளை அவரவர்களின் இடங்களில் சேர்க்கிறதோ அதேபோல் நம்மை நம்பி வருபவருக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். ரயில் தன் கஷ்டத்தைப் பொருட்படுத்தாது வெயிலிலும் மழையிலும் செல்கிறதோ, அதே போல்நாமும் வாழ்க்கையில் எவ்வித கஷ்டத்தையும் பாராமல் உழைத்தால்தான் முன்னேற முடியும். இஞ்சின் டிரைவர் தன் சாமர்த்தியத்தினால், தான் போக வேண்டிய பாதையைத் தெரிந்து இரு தண்டவாளங்களிலிருந்து வழுவாமல் போகவேண்டிய இடத்திற்கு ஜாக்கிரதையாக இஞ்சினை ஓட்டிச்செல்கிறான். அதைப் பின்பற்றி வரும் ரயில் தொடர்கள் அதேபோல் ஜாக்கிரதையாகச் செல்கின்றன. அதேபோல் குடும்பத் தலைவனும் தன் அறிவினாலும், சாமர்த்தியத்தினாலும் வாழ்க்கையில் முன்னேறும் பாதையில் தன்னம்பிக்கை, கடவுள் பக்தி என்ற இரு தண்டவாளங்களினின்றும் வழுவாமல் சென்றானேயானால் அவனைப்பின்பற்றிவருபவர்களும் அதே வழியில் சென்று வாழ்க்கையில் வெற்றி அடைவார்கள்.

'குடியுயர கோன் உயரும்' என்ற வாக்குப்படி ஒவ்வொருவரும் வாழ்க்கையில் முன்னேறினால் தனியாகவே நாடு உயரும்.

—மஹாலக்ஷ்மி.

விருந்தினரைக் கைவிடாத மாரர்

ஒரு நாள் மத்தியானம் பொழுது போகாமல், அடைசல் நிரம்பிக் கிடந்த புஸ்தக அலமாரியை ஒழித்துச் சுத்தம் செய்து அடுக்கி வைப்பதற்காக எல்லாவற்றையும் வெளியில் எடுத்துப் போட்டுப் பரிசோதித்துக் கொண்டிருந்தேன். அந்தப் புதையலிலிருந்து, "அறிவு நூல் திரட்டு" என்ற புஸ்தகம் அகப்பட்டது. வெகுநாட்களாக அந்தப் புஸ்தகத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். அகப்பட்டதும், கைவேலையை—அதாவது உத்தேச காரியத்தை மறந்து புஸ்தகத்தைப் புரட்டிக்கொண்டே வந்தேன். அரசஞ் சண்முகனுர் திருக்குறளுக்கு அடி வைத்துப் பாடியிருக்கும் "வள்ளுவர் நேரிசை" என்ற வெண்பாக்களைக் கண்ணுற்றேன்.

அதனிடையில் :

வித்தும் அரித்திட்டு விருந்தோம்பினர் மாரர்
வைத்தபொருள் போயபின்னும் வள்ளுவரே !
—மொய்த்தே

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி வேளாண்மைசெய்தற் பொருட்டு

என்ற வெண்பா என் நினைவை உலுப்பிவிட்டது! விருந்தோம்பி வாழும் வாழ்வுக்கு, அத்தனை உயர்வும் உத்தமமும் இருக்கிறது பற்றி.

நமது பாரத நாட்டின்கண் பல புண்ணியசீலர்கள் வள்ளல்களாக வாழ்ந்திருக்கிருர்கள். அவர்களில் ஒருவரே 'மாரர்' என்னும் மகான்.

அதிதி ஸத்காரம் என்னும் இப் புனித ஆசரணையை அனுசரித்து மேம்பட்ட அனைவரிலும் உபமானத்திற்கு 'மாரரை'த் தேர்ந்தெடுத்திருக்கும் அரசனு சண்முகனாரின் அறிவுக் கூர்மையை நினைக்க நினைக்க மாரருடைய சரிதம் என் நினைவின் முன் நின்றது.

பெருஞ் செல்வவான் மாரர். இருந்த ஆஸ்தி யெல்லாம் அதிதி ஸத்காரத்தில் செலவிட்டு ஏழ்மை எய்திவிட்டவர். அந்த ஏழ்மையிலும் தமது குலதர்மமான இந்த உத்தமப் பணியை விட்டுவிடவில்லை. பல தினங்களில் தமக்கென ஒன்றும் மீத்துக் கொள்ளாது விருந்துக்கு வந்த அடியார்களின் பசியைத் தணித்துவிட்டு தம்பதி சகிதமாக உபவாசத்தை மேற்கொள்ள நேரிட்டது. அப்பொழுதும் அவர் தளர்ந்தாரில்லை!

மாரர் மனநிலை கண்ட எம்பெருமான் உள்ளம் உருகிற்று. மாரருக்கு அருள்புரிய மனம் கொண்டார். ஆனால் சோதனை செய்யாமல் அருள்புரிவாரா? அதிதியாக வந்தார். இரவில் உணவுநேரம் கடந்தும் அடியார்களொருவரையும் காணமல் பிறகு இருந்த உணவை உண்டுவிட்டு படுக்கவென்று தலைசாய்க்கப் போகும்போது, வந்தார் சிவபெருமான் அதிதியாக!

"மாரரே" என்று அழைத்து கதவைத் தட்டினார். "இதோ" என்று விரைந்து வந்து கதவைத் திறந்து வந்த விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

"மாரரே, பசிப்பிணியால் வருந்தி பல இடமும் கேட்டு இங்கு வந்திருக்கிறேன், குடலைப் பிய்க்கின்ற என் பசிக்கு உணவு தாரும்" என்று பட்டினிக் களைப்பால் காதடைக்க ஈன சுரத்தில் கேட்டார்.

என்ன செய்வார் மாரர்? 'பகவானே இது என்ன சோதனை ?' என்று கைகளைப் பிசைந்துகொண்டே உள்ளே சென்று "உத்தமியே, அடியார் பசிக்கு என்ன இருக்கிறது ?" என மனைவியிடம் மெல்லக் கேட்டார்.

மனைவி வாட்டத்துடன் பதில் சொல்ல நாவெழாது நின்ருள். மாரருக்குச் சட்டென்று நினைவு வந்தது. உடனே அடியவரிடம் விரைந்து வந்து "பெரியவரே, இதோ ஆயிற்று, கொண்டு வருகிறேன் இருங்கள் என்று சொல்லி, மனைவியை அழைத்துக் கொண்டு கொல்லைப் புறம் விரைந்து சென்ருர். வயல் சகதியில் காலையில் தான் விதைத்த நெல் மணிகளை அரித்து அரித்து எடுத்தார். போதுமான அளவு நெல்லைக் கொணர்ந்து அனலில் வெதுப்பிக் குத்திப் புடைத்து அமுதுண்டாக்கி, அடியவர் பசிக்கு உதவ நாழியாகிவிட்டதே" என்ற பரபரப்புடன் அதிதியை அழைத்து அவருடைய அரும்பசியைத் தணித்தார் மாரர் என்னும் மகாத்மா !

சிவன் அடியும் முடியும் கண்ட அறுபத்துமூவரில் மாரர் ஒருவர். அரனுடைய அருளால் மனிதன் அடைய வேண்டிய சாயுஜ்ய பதவியை அடைந்தார்.

அரும்பாடுபட்டு அர்த்த ராத்திரியில் வயலில் சிதறி இருந்த நெல்மணிகளைப் பொறுக்கி யெடுத்து விருந்தோம்ப—துளிக்கூட சலிக்காத மாரரைக் குறிப்பிட்டுச் சொல்லி திருக்குறளின் மகாவாக்கியச் சிறப்பைப் பரிபூரணமாக்க,

" வித்தும் அரித்திட்டு விருந்தோம்பினுர் மாரர்
வைத்தபொருள்போய பின்னும் வள்ளுவரே !
—மொய்த்தே

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு.

என்று கூட ஒரு படி அதை உயர்த்தி இருக்கிறார் அரசஞ் சண்முகனார்.

மானிட தர்மத்தை இப்படிச் சிறப்பித்திருக்கும் அதிதி ஸத்கார ஆசரணை இப்போது பாரத மக்களால் எவ்வாறு கொள்ளப்படுகிறது? விருந்தோம்பலுக்காகவே இல்லற வாழ்வு என்று வரையறுக்கப்பட்ட புனிதச் செயல் இன்று எந்த நிலையில் இருக்கிறது என்று சிந்தித்த என் மனம்............சென்ற வருஷம் நடந்த ஒரு சம்பவத்தை முன் கொணர்ந்து நிறுத்தியது!

முக்கிய காரியமாக ஒரு இடத்திற்குப்போக நேரிட்டது. ஒரு நண்பர் வீட்டில் இராத்தங்க வேண்டி ஏற்பட்டு விட்டது.

அவர்கள் வீட்டில் நான் புகும்போது மணி பத்து ஆகி விட்டது. அவர்கள் வீட்டில் போனதும் ஏதோ குசலச் பிரச்னம் ஆயிற்று. ஆகார விஷயமாகப் பேச்சு மூச்சே இல்லை! அன்றைக்கு எனக்கு நல்ல பசி!

போன இடம் 'இல்லாத' இடமல்ல. நண்பரும் லோபியல்ல! பின் நான் பட்டினிக் கிடக்க நேரிட்டது எதனால் என்றால்—அந்த ஊரில், அந்தநேரத்தில் ஹோட்டல்கள் சாத்தியாகி விடுகிறது என்பதுதான்! மறுநாள் பொழுது விடிந்தது. நிலம் தெளியுமுன்பே—'பால்' என்ற சத்தம்.

பால் வாங்கினார்கள், ஆனால் எட்டு மணிக்கு ஹோட்டலிலிருந்து ஆகாரமும், கர்பியுமாக வந்த பிறகு காலை உண்டி கிடைத்தது! நண்பர் வீட்டில் ஸ்திரீகள் இல்லாமலில்லை. பதார்த்தங்களில்லாமலில்லை, சம்ஸாரத்தில், இல்லற வாழ்வின் மாண்பில் அவ்வளவு அக்கறை!

அதிதி ஸத்காரம் என்பது ஒரு பாவனமான கிரியை. இன்று இங்கிலீக்கு வந்திருக்கிறது நம் புராதன தர்ம பரிபாலன முறைகள்!

நண்பரின் அன்பும் விருந்தும் நான் பெற்றேன் என்பது வாஸ்தவம். ஆனல் அதில் மகிமை என்பதும், இல்வாழ்க்கையின் பரிமளமும் எங்கே இருக்கிறது?

கு. ப. சேது அம்மாள்

198748

காது குத்தலும் கண் பார்வையும்

கம்மல் அணிவதற்காக காதுகளைக் குத்திக் கொண்டால் கண்களுக்குப் பார்வை தீட்சண்யமாகிற தென்பது உங்களுக்குத் தெரியுமா? இது உண்மையோ, இல்லையோ, இந்த நம்பிக்கை இங்கிலாந்தில் பரவி வருகிறது. அங்கே இப்போது ஆயிரக்கணக்கான பெண்கள் காதைக் குத்திக்கொள்கிறார்களாம். பொது ஜனங்களிடையே இந்த மோகம் தீவிரமாகப் பரவியதற்குக் காரணம் இங்கிலாந்தின் ராணியான எலிசபெத்தான். ராணி எலிஸபெத் காதில் கம்மலோ லோலக்கோ அணியாமலிருப்பதில்லை. இதனல் இந்த ஆபரணத்தின் வியாபாரம் அபார அபிவிருத்தியடைந்துள்ளது.

ராணி அணிவதுபோலவே அனேக சினிமா நடிகைகளும் காதணிகள் அணிந்து கொள்ளுகின்றனர். பிறகு பொதுஜனங்களின் மோகத்திற்குக் கேட்கவா வேண்டும்?

CONSULT

K. M. S. PRESS

1-C 17, DINROZE ESTATE

MOUNT ROAD

MADRAS-2

FOR

ALL HIGH CLASS

JOB WORKS

AND

BOOK WORK

IN

ENGLISH & TAMIL

இருபதடி நீளமுள்ள தாடி

வாழ்க்கையில் ஆடை எவ்வாறு முக்கியமோ அவ்வாறே ஆண்களுக்கு முகக்ஷவரமும் முக்கியத்துவம் பெற்றது. தினமும் க்ஷவரம் செய்து கொள்வதற்குப் பிடிக்கும் நேரம் ஐந்து நிமிஷமென்று வைத்துக் கொண்டால், ஒரு மாதத்தில் 150 நிமிஷங்கள், அதாவது 2 1/2 மணி நேரமாகிறது. ஒரு வருஷத்தில் 30 மணி நேரம் ஆகிறது, அதாவது ஒன்றேகால் நாள். மனிதனின் ஆயுள் பூராவும் இந்த க்ஷவரத்திற்குச் செலவிடும் நேரத்தைக்கணக்கிட்டால் மாதக்கணக்காய் க்ஷவரம் செய்து கொள்வதே மனிதனின் வேலையென்ற முடிவிற்குத்தான் வரவேண்டும்!

முகத்தில் 25,000 ரோமங்கள் இருக்கின்றனவாம். தினந்தோறும் ஒவ்வொரு ரோமமும் ஒரு அங்குலத்தில் நூறில் ஒரு பாகம் வளருகிறது. ஒரு மனிதனின் தன் ஆயுள் பூராவும் க்ஷவரஞ் செய்துகொள்ளும் ரோமங்களை ஒன்றோடொன்றாகத் தொடர்ந்து சேர்த்தால் அவை இருபது அடி நீளம் வரை போகும்.

க்ஷவரம் என்பது தோன்றி 5,000 வருஷங்களுக்கு மேல் ஆகிறது. பழங்காலத்து எகிப்து, ரோமாபுரி, கிரேக்க நாட்டார்கள் எல்லோரும் க்ஷவரத்தை முக்கியமாகக் கருதி வந்தனர். நம் நாட்டிலும் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே சில வைதீகக் காரியங்களில் க்ஷவரம் முக்கியத்துவம் வாய்ந்தது; பழைய காலத்தில் நாகரிகமான பலவித கத்திகளெல்லாம் கிடையாது. கற்களையும், கோடாரியையும் க்ஷவரத்திற்கு உபயோகித்து வந்தனர். நம்நாட்டில் சில வகுப்பார்கள் வாலிபப் பருவமடைந்தவர்

களுக்கு குடுமி வைக்கும் சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வருகின்றனர். இதேபோல் ரோமாபுரியிலும் சில வகுப்பார்கள் குடுமி வைத்திருந்தனர்.

ரோமாபுரியில் க்ஷவரச் சடங்கை முதன் முதலில் செய்துவைப்பவர் நாவிதர்கள் அல்ல. அந்தந்த குடும்பங்களைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒருவர்தான் செய்துவைப்பார். இம்மாதிரி செய்து வைப்பவர் அந்த வாலிபனின் ஆசீர்வாதத் தந்தையாவார்.

வெளிநாடுகளுக்கு யுத்தத்திற்குப் புறப்படுவதற்கு முன், அலெக்ஸாந்தர் தன் சைனியத்தைச் சேர்ந்தவர்களின் தாடியை க்ஷவரஞ்செய்துகொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார். அந்தக்காலத்தில் அநேகர் தாடி வைத்துக்கொண்டிருப்பது வழக்கமாயிருந்தது. யுத்தஞ் செய்யும் வீரர்களின் தாடி எதிரிகளின் கைக்கு அகப்பட்டால் என்ன நேரிடுமென்பதை உணர்ந்தே அலெக்ஸாந்தர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

ஒரு நிமிஷத்தில் ஒரு மனிதனுக்கு க்ஷவரஞ்செய்வதுதான் திறமையான நாவிதனின் லக்ஷணம் என்று அநேக ராஜ்யங்களில் கருதுகிறார்கள். ஆனால் ஐக்கிய நாட்டில் ஒரு கல்லூரியில் ஆராய்ச்சிசெய்த நிபுணர்களின் அபிப்பிராய மென்னவென்றால் மூன்றுமணி நேரம் கொதிக்கும் தண்ணீரில் ரோமங்களை நன்றாக ஊறவைத்த பிறகு செய்து கொள்வதுதான் சுகமான க்ஷவரம் என்பதாகும்.

இரண்டாம் மகாயுத்தத்திற்கு முன்பு ஜெர்மனியில் ஒரு விநோதமான சட்டம் அமுலிலிருந்தது. அதன் பிரகாரம் ஸலூனுக்குச் செல்வோர்களெல்லாம் அவரவர்கள் ஸோப் தேய்க்கும் பிரஷ்களை எடுத்துச் செல்ல வேண்டும். ஸலூன் பிரஷ்களை உபயோகித்தவர்களுக்கு 180 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு வந்தது.

ஓரணாத் தலையின் சாதனை

தபால்காரன் ஒரு கடிதத்தை நம் வீட்டிற்கு வந்து நம் கையில் கொடுப்பது சகஜமானது. மிகவும் அற்ப விஷயமென்றுகூடச் சொல்லலாம். ஆனால் இதைப் பற்றிச் சற்று ஆராய்ச்சி செய்தோமானால் கடிதங்களும் தபாலில் வேறு ரகங்களும் அவற்றை அனுப்புமிடங்களிலிருந்து பிரயாணஞ் செய்து, சேரவேண்டிய இடத்தில் சேருவதென்பது எவ்வளவு பிரமிக்கத்தக்க செயல் என்பது நமக்கே தெரியும்.

பிரிட்டனில் வருஷந்தோறும் ஒன்பதாயிரம் கோடி கடிதங்களும் பார்ஸல்களும் தபால் ஆபீஸ்கள் மூலமாய் பட்டுவாடா செய்யப்படுகின்றன. சிறிய ராஜ்யமான பிரிட்டனில் இவ்வளவு கடிதங்களும் மற்றும் இதர தபால் ரகங்களும் இருக்குமானால் பாரத நாட்டைப்போன்ற மிகப் பெரிய தேசத்தில் இன்னும் எவ்வளவு பங்கு அதிகமாக தபால் பட்டுவாடா இருக்கவேண்டுமென்று நாமே யூகித்துக் கொள்ளலாம். ஆனால் நம் நாட்டில் பொதுமக்களுக்குத் தபாலில் கடிதமெழுதுவதற்கும் பார்ஸல்களை அனுப்புவதற்கும் தகுந்த அறிவும் வசதியும் இல்லாததால் பிரிட்டிஷ் மக்கள் அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும் உள்ள அளவுக்கு தபால் பட்டுவாடா இருக்காது.

பிரிட்டனில் வருஷந்தோறும், பிரஜைகளில் ஒவ்வொருவருக்கும் இருநூறு கடிதங்கள் வருவதுண்டு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப்போது உலகமெங்கும் அமுலிலிருக்கும் தபால் ஏற்பாடு சமீபத்தில் ஏற்பட்டதுதான்.

இது ஏற்பட்ட சமயத்தில் ஒரு ராஜ்யம் பூராவும் சொற்ப செலவில் கடிதங்களை அனுப்பும் திட்டம் இருக்கவில்லை.

நூறு மைல்கள் தூரம் உள்ள ஒரு இடத்திற்கு ஒரு கடிதம் அனுப்புவதற்கு எவ்வளவு விகிதம், 500 மைல் தூரத்திற்கு எவ்வளவு விகிதம், ஆயிரம் மைல் தூரத்திற்கு எவ்வளவு என கணக்கிடப்பட்டிருந்தது. கடிதங்கள் போய்ச் சேருவதற்கும் காலதாமதம் ஆகிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ராஜ்யங்களிலும் பிரயாணஞ் செய்வதற்குச் சாலை வசதிகள் அதிகமாக ஆக, காலப்போக்கில் கடிதங்களும் குறைந்த கால அளவில் போய்ச் சேரத் தொடங்கின.

ரயில் போக்குவரத்து தொடங்கிய பிறகுதான் கடிதங்களின் போக்கு வரத்து மிகவும் சர்தாரணமாயிற்று. இப்பொழுது எந்த நகரத்திலேயும் காலையில் தபாலில் போடும் கடிதம் மாலையில் அந்த நகரத்திற்குள் இருக்கும் இடங்களிலுள்ள விலாசங்களுக்குச் சென்று விடுகின்றன. ராஜ்யத்திற்குள்ளே ஒன்றல்லது இரண்டு தினங்களில் எவ்வளவு தூரமாயினும் போய்ச் சேர்ந்து விடுகின்றன. ஆகாய விமானம் வந்ததிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் கடிதங்களும் வெகு சீக்கிரத்தில் போகும் வசதிகள் கிடைத்திருக்கின்றன.

கடிதங்கள் ஒரு கோடியிலிருந்து மற்ற கோடிக்குப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வேலைகளுக்குப் பக்கபலமாக ஒரு அமைப்புமுறை யிருக்கிறது. எந்தச் சிறிய தபாலாபீஸ்மூலமாகவும் வாரந்தோறும் ஆயிரக்கணக்கான கடிதங்களும் மற்றும் பார்ஸல் வகைகளும் குவிகின்றன.

லண்டனிலுள்ள ஒரு தபர்லாபீஸில் ஒரு கோடி எழுபது லட்சம் கடிதங்களும் பத்து லக்ஷம் பார்ஸல்களும் வாராவாரம் வந்து குவிகின்றன.

இங்கிலாந்தில் தபால்மூலம் போகும் கடிதங்கள், பார்ஸல்கள் முதலியவற்றை அனுப்புவதற்குத் தனியாக ஒரு

மின்சார ரயில் போக்குவரத்து உண்டு. இதில் நாற்பதினு யிரம் மூட்டைகள் நிறைய தினந்தோறும் கடிதங்களும், பார்ஸல்களும் அனுப்பப்படுகின்றன. இந்த மின்சார ரயில் வண்டிக்கு 'டிரைவர்' கூடக் கிடையாது.

அதிவேகமாய்ப் பிரயாணஞ் செய்யும் ரயில் வண்டி களில், அனுப்பும் கடிதங்கள் முதலியவற்றைக் கொண்ட மூட்டைகளை குறிப்பிட்ட ஸ்டேஷன்களில் இறக்கிவிட்டுப் போக பிரத்தியேக ஏற்பாடுகள் இங்கிலாந்தில் செய்யப் பட்டுள்ளன.

நிற்காத ஸ்டேஷன்களில் மூட்டைகளைத் தள்ளுவ தற்கு இந்தத் தபால் வண்டியில் கை போன்ற ஒரு சட்டத்தை இணைத்திருக்கிறார்கள். ரயில் வண்டியில் வரும் தபால் மூட்டைகளை அந்தக் கைபோன்ற சட்டத்தில் மாட்டிவிட்டால் நிற்காத ஸ்டேஷன்களில் அந்த மூட்டை களைத் தள்ளிவிடுகிறது இந்த இணைப்புச் சட்டம். இது போலவே நிற்காத ஸ்டேஷன்களில் அமைத்துள்ள சட் டங்களில் மாட்டியுள்ள தபால் மூட்டைகள் வேகமாய் ஓடும் தபால் வண்டிக்குள் வந்து விழுகின்றன.

தபாலாபீஸ்கள் நம் கடிதங்களையும், பார்ஸல்களையும் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கொண்டு சேர்ப்ப தல்லாமல் வேறு அநேகவித வேலைகளும் செய்கின்றன.

தந்திப் போக்குவரத்தும் தபால் இலாகாவைச் சேர்ந்ததே. தபாலாபீஸ்கள், பாங்குகள் போன்று பணத்தை சேவிங்ஸ் இலாகா மூலம் கொடுக்கல் வாங் கல் செய்வதுண்டு. தபால் ஆபீஸ்களில் ஆயுள் இன்ஷ்யூ ரன்ஸுகளும் உண்டு.

இங்கிலாந்தில் பென்ஷன் பெறும் உத்தியோகஸ்தர் களெல்லாம் பென்ஷன் தொகையைத் தபால் ஆபீஸ் மூலமாகத்தான் பெறவேண்டும்.

—Based on a B. I. S. feature.

''பொருளே சக்தி!'' என்று உலகெங்கும் நிறைந்திருக்கும் கூக்குரலுக்கு ஒரு எதிரொலி.

"பணம் வேண்டாம்! பணம் வேண்டாம்!"

●

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு, பொன், பணம் இவற்றைப் பற்றி எவ்வளவு வெறுப்பு இருந்ததென்பதற்கு அவர் சரிதையில் அத்தாட்சியுண்டு. அவர் நித்திரையில் இருக்கும்போதுகூட பொன்னையோ பொருளையோ அவருடைய தேகத்தில் எந்த பாகத்தின் அருகில் காட்டினாலும் அந்த பாகம் சுருங்கி உள்ளுக்குப் போய் விடுமாம். உலகத்தைத் துறந்த ஒரு யோகியின் உத்தம குணம்தானே இது.

ஆனால் இம்மாதிரி துறவியாகாமலே பணத்தையும், பொருளையும் வெறுப்பவர்களுமுண்டு. கிருகஸ்தர்களாய் வெகு காலமிருந்து, எல்லாச் செல்வங்களையும் அனுபவித்து மனத்திருப்தியடைந்தவர்களைப் பற்றி நாம் கூறவில்லை. வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டு பொன்னையும், பொருளையும் வெறுக்கும் சாதாரண மனிதர்களைப் பற்றித்தான் பேசுகிறோம்.

எவ்வளவு பொருள்களை எவ்வளவு சீக்கிரத்தில் சம்பாதிக்கலாமென்பதுதான் சாதாரண மனிதர்களின் நோக்கம். இதனால்தான் லட்சக்கணக்கான மனிதர்கள் போட்டி

களில் பங்கெடுத்துக்கொள்வதும் குதிரைப் பந்தயம் போன்ற பணம் சம்பாதிக்கும் குறுக்குவழிகளை நாடுவதும் ஆகும். வாழ்க்கை வசதிகளை ஏராளமாகப் பெற்றவர்கள் கூட இருக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்வதுதான் உலகத்தில் சகஜம்.

ஐக்கிய நாட்டில் ஓகியோ நகரத்தில் ஒருவருக்கு அவருடைய உறவினர் ஒருவர் 10 லட்சம் ரூபாய் உயில் எழுதிவைத்தார். ஓகியோ நகரத்திலிருக்கும் இந்த மனிதர் ஒரு கம்பெனியில் மிகவும் சொற்ப வருவாயுள்ள ஒரு ஸேல்ஸ்மேன். இவருக்குக் குடும்பமுண்டு. இவ்வாறிருந்தும் இந்தப் பத்து லட்ச ரூபாயை இவர் நிராகரித்தார். காரணம் தன் உறவினர் உயிலில் இவர் பணத்தைப் பெற்றுக்கொண்டால் அமெரிக்காவைவிட்டு இங்கிலாந்திற்குச் செல்லவேண்டும் என்ற நிபந்தனை கண்டிருந்தது. இவர் பிறந்து வளர்ந்த நாடான அமெரிக்காவைவிட்டு வெளி நாட்டுக்குச் செல்ல இவர் விரும்பவில்லை.

அமெரிக்காவில் மற்ருெரு நகரத்திலுள்ள ஒரு பாங்கி குமாஸ்தாவிற்கு அவருடைய சிநேகிதி இருப்பத்தைந்து லட்ச ரூபாய், விலைமதிப்புள்ள வீடு, நிலம் எல்லாம் எழுதிவைத்தாள். ஆனால் இவர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பொருள்களினாலும், ஆஸ்திகளினாலும் ஏற்படும் தலைவலியைச் சமாளிப்பதைவிட தன்னுடைய உத்தியோகத்தில் கிடைக்கும் சொற்ப சம்பளமே அவருக்குத் திருப்தியளித்தது.

பிரான்ஸில் ஒருவருக்கு அவருடைய சகோதரி 10 லட்ச ரூபாய் சன்மானமாகக் கொடுத்ததை இவர் ஏற்க மறுத்துவிட்டார்.

"எனக்கு வயது 84 ஆகிறது. இனிமேல் பணத்தைப் பற்றி எனக்கு அக்கறையில்லை" என்று இவர் காரணம் கூறினார்.

டென்மார்க் ராஜ்யத்தைச் சேர்ந்த ஒருவர் ஏராள மான சொத்துகள் ஒரு குடும்பத்திற்குக் கிடைப்பதைவிட துர்ப்பாக்கியம் வேறில்லையென்று அபிப்பிராயங் கொண்ட வர். அதனுல்தான் இவர் ஒரு உறவினர் கொடுத்த ஏராளமான சொத்துகளை நிராகரித்துவிட்டார். இவருக்கு வயது 100. சாப்பாட்டிற்கு வழியில்லாததால் சர்க்காரின் அகதிகள் விடுதியில் வசிக்க நேரிட்டாலும் மேற்கூறிய வாறு இவர் தீர்மானத்தை வெளியிட்டார்.

நியூயார்க் வாசிகளான ஒரு குடும்பத்தாருக்கு பணத் தின்மீது ஏற்பட்ட வெறுப்பினுல் தங்கள் சொத்துகளை யெல்லாம் ஹட்ஸன் நதியில் எறிந்துவிட்டார்கள். போலீ ஸார் அப்பொருள்களைத் தேடி இவர்களிடம் கொடுத்த போதும் அப்பொருள்களை இவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை.

ஹங்கேரியைச் சேர்ந்த ஒரு மனிதனுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு அவருடைய உறவினர் ஒருவர் உயில் எழுதி வைத்திருந்தார். அக்குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களுக் குத்தான் இந்தப் பொருள் சேரவேண்டுமென்பது நிபந் தனை. அந்தச் சொத்தை ஏற்றுக் கொள்ளத் தகுதியான ஒரே ஆண் இவராயிருந்தாலும் இவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. சர்க்கார் அனுமதியோடு, தான் ஆண் அல்ல, ஒரு பெண்தான் என்று அங்கீகாரம் பெற்று தன்னைத் தேடிவந்த லக்ஷ்மியை உதறிவிட்டார்.

பணத்தை விரும்புவோர் செய்யும் சூழ்ச்சிகளைவிட பணத்தை வெறுப்பவர்களின் சூழ்ச்சிகள் விந்தையா யிருக்கிறதல்லவா ?

ஜப்பானில் கொலு வைபவம்

தமிழ்நாட்டில் அக்டோபர் மாதத்தில் (புரட்டாசி மாதத்தில்) நவராத்திரி விழாவைக் கொண்டாடுவது வழக்கம். ஜப்பானில் மார்ச்சு மாதத்தில் கொலு வைக்கிறார்கள். இந்த பொம்மைக் கொலுவிற்கு ஜப்பானில் "ஹீனு மட்சூரி" என்ற பெயர் வழங்குகிறது.

நம் நாட்டில் பொம்மைக் கொலு வைப்பதுபோலவே ஜப்பானியர்களும் கொலுவில் வைக்கும் பொம்மைகளுக்கு ஆடை அலங்காரங்கள் செய்து ஐந்தாறு படிகள் அமைத்து அவற்றின் மீது வைப்பார்கள்.

சக்ரவர்த்திகள், சக்ரவர்த்தினிகள், ராஜ குடும்பம், ராஜ சபை இவற்றைச் சேர்ந்த பிரபல மாதர்கள், கீர்த்தி பெற்ற ஜப்பானிய வீரர்கள், சரித்திரப் பிரசித்திபெற்றவர்கள் முதலியவர்களின் பொம்மைகள்தான் ஜப்பானியர்களின் கொலுவில் இடம் பெறும். கலையில் உண்மைத் தேர்ச்சியடைந்தவர்களால் செய்யப்பட்ட இந்தப் பொம்மைகளைப் பல குடும்பங்களில் அநேக தலைமுறைகளாய் பாதுகாத்து வருகின்றனர்.

"ஜப்பானில் கொலு மார்ச்சு மாதம் 3-ஆம் தேதி ஆரம்பமாகிறது. தமிழ் நாட்டுக் கொலு வைப்போல் பெண்களுக்கென்றே, அதுவும் சிறு பெண் குழந்தைகளுக்கென்றே விசேஷமாகக் கொண்டாடும் வைபவம்தான் இது. எல்லோர் வீடுகளிலேயும் உறவினர் குழந்தைகளையும் நண்பர்களின் குழந்தைகளையும் அழைப்பது வழக்கம்.

ஜப்பானில் இந்தக் கொலு வைபவம் ஆரம்பமானதற்குக் காரணம் வெகு ருசிகரமானது. ஆதிகாலத்து ஜப்பானியர்களெல்லாம் இந்தப் பொம்மைகளை சாதாரண மனிதர்களைப் போலவே ஆடையலங்காரங்கள் செய்வித்து இந்தக் கொலுவைக் கொண்டாடிவந்தனர். குடும்பத்தில் நேரிடக்கூடிய கஷ்டங்கள் தங்களைப் பாதிக்காமல் மனித உருவங்கொண்ட இந்த பொம்மைகளைப் பீடிக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

காலக்கிரமத்தில் சாதாரண மனிதர்களின் உருவங்களைச் செய்வதைவிட பிரபல மனிதர்களின் உருவங்களைச் செய்வது

எல்லோருக்கும் பிடித்தமாயிருக்குமென்று பிரபலஸ்தர்களின் உருவங்களைச் செய்து கொலுவில் வைக்கத் தொடங்கினார்கள்.

ஆதிகாலத்தில் எல்லாப்பொம்மைகளும், மரங்களினால் செய்தவை—எல்லாப் பொம்மைகளின் தோற்றமும், அலங்காரமும் ஒன்றுபோலவே யிருந்தன. பொம்மைக்குப் பொம்மை ஆண், பெண் என்ற வித்தியாசமும் அலங்கார வேறுபாடுமில்லாமலுமிருந்தன.

இந்தப் பொம்மைகளைக் கொலுவிற்கென்ற குறிப்பிட்ட தினங்களைத் தவிர, குழந்தைகளின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போதும் பொம்மைகளைக் கொலுவிருக்கச் செய்வார்கள். இம்மாதிரிச் செய்வதால் குழந்தைகள் க்ஷேமமாயிருக்கும் என்றும் நம்பிக்கைக் கொண்டிருந்தனர் பழங்காலத்து ஜப்பானியர்கள். குழந்தைகளின்க்ஷேமத்துக்குரிய பாதுகாப்பு என்ற நம்பிக்கை மறைந்த பின் இந்தப் பொம்மைகள் விசேஷ வேலைப்பாடுகளுடனும் அழகான பிரபலஸ்தர்களின் உருவங்களுடனும் தோன்ற ஆரம்பித்தன.

நம்நாட்டுக் கொலுவில், லக்ஷ்மி, சரஸ்வதி, விநாயகர், பார்வதி, சிவபெருமான், ஸ்ரீராமன், சீதை, முருகன் முதலிய தெய்வ அம்சங்கள் வாய்ந்த பொம்மைகளையும் மளிகைச் செட்டியார், போலீஸ் சேவகன், சிங்கம், புலி, நாய், பூனை, டெலிபோன், அடுப்பு முதலிய விநோத பொம்மைகளையும் கொலுவில் வைப்பதுபோல ஜப்பானியர்களும் இப்பொழுது தெய்வாம்சம்பொருந்தியவர்கள், பிரபலஸ்தர்கள், விநோதத் தோற்றமுள்ள பொம்மைகள் முதலியவற்றை ஏராளமாகக் கொலுவிற்கு உபயோகிக்கிறார்கள். அலங்காரக் கலையில் ஜப்பானியர்கள் அபாரத் தேர்ச்சி பெற்றவர்கள். அதனால் ஜப்பானியர்களின் கொலு வைபவம் விவரிக்க முடியாத அழகு வாய்ந்ததாக இருக்கும்.

முதன் முதலாகக் கொலுவை ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் கொண்டாடி வந்தார்கள். இதைக்கண்டு இவர்களின் உறவினர்களும் நண்பர்களும் அவர்கள் வீடுகளிலும் கொலு வைக்க ஆரம்பித்தனர். காலப்போக்கில் பொதுமக்கள் அனைவரும் ஆண்டுதோறும் கொண்டாடும் ஒரு வைபவமாக, 'ஹீனமட்சூரி'யைக் கொண்டாடி வருகின்றனர் ஜப்பானியர்கள்.

தொண்டருக்குத் தொண்டு செய்வீர்

•

லோகோபகாரி நெல்லையப்பர் என்று நண்பர்கள் வழங்கும் பரலி. சு. நெல்லையப்பரைப் பெயர் அளவிலேனும் அறியாதவர்கள் தமிழ் நாட்டில் இருக்கமுடியாது. அவர் வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளை, கவிச் சக்ரவர்த்தி சுப்ரமணிய பாரதியார், மகான் வ. வெ. சு. ஐயர் முதலிய பழைமையான தேசபக்தர்கள் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். கப்பலோட்டிய சிதம்பரனாருடன் அவர் தமது இரு சகோதரர்களுடனும் அந்த சுதேசிக் கப்பல் கம்பெனியில் ஊழியம் புரிந்தவர். அவருடன் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமது இருபதாவது ஆண்டிலேயே சிறை சென்றார். சிதம்பரனார் கோவை சிறையில் இருந்தபொழுது கோவையிலேயே அஞ்ஞாதவாசமாக சுமார் ஓர் ஆண்டு தங்கி அவருக்கு உதவிகள் புரிந்தவர். மகாகவி பாரதியாருடன் புதுச்சேரியில் வனவாசம் செய்தவர். அச்சமே உச்சமாக இருந்த அந்தக்காலத்தில், அடக்குமுறை ஆதிக்கம் செலுத்திய அந்தக் காலத்தில், வந்தேமாதரத்தையும், சுதேசியத்தையும் தமிழ் நாட்டார் மறந்திருந்த அந்தக் காலத்தில் பாரதியாரின் கண்ணன் பாட்டையும் நாட்டுப் பாடல்களையும் 1917-ம் ஆண்டில் முதல் முறையாக வெளியிட்டவர். பாரதியாருடன் புதுச்சேரியில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்த நெல்லையப்பர் சென்னையில் பலபத்திரிகைகளில் தொடர்பு கொண்டிருந்து, 1922-ஆம் ஆண்டில் லோகோபகாரியைத் தமக்கே உரிமையாகப் பெற்று அதன் வாயிலாகப்

பல ஆண்டுகள் சிறப்பாகத் தேசத் தொண்டும், தமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் செய்திருக்கிருர். அவர் சென்னை சிந்தாத்திரிப் பேட்டை காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும், தேசத் தொண்டு புரிந்திருக்கிருர். இளமையான இருபதாவது ஆண்டிலேயே சிறைபுகுந்த அவர் தமது ஐம்பதாவது ஆண்டிலும் ஆறுமாதம் சிறைவாசம்செய்து மகிழ்ச்சியுடன் திரும்பியவர். நெல்லையப்பர் சிறந்த எழுத்தாளர் மட்டுமின்றி பாரதியாரைப் பின்பற்றி சைவ பரிபாலன சபையென்ற ஒரு சபையின் வாயிலாக சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் வேதமான திருவாசகத்தை இரண்டணுப் பதிப்பாக இருபதிணுயிரம் பிரதிகள் வெளியிடச் செய்து தமிழில் சமய நூல்கள் அடக்க விலைப் பதிப்பாக வெளிவருவதற்கு காரணமாயிருந்தவர். கொடை வள்ளலில் சிறந்த பாரியின் கருணையை வியந்து, "பாரி" யின்பெயரையே தனது புனைபெயராகக் கொண்டதுடன், பாரி திருநாளைச் சென்ற முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டாடத் தொடங்கியவர் பாரி நிலையம் என்பதொரு பதிப்பு நிலையமும் தொடங்கியவர். எழுத்தாளர் சங்கம் தோன்றுமுன் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்ப் பத்திராதிபர் சங்கம் தோன்ற வேண்டுமென்று எழுதி முயன்றவர்.

தேசத் தொண்டிலேயே பல ஆண்டுகள் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ நெல்லையப்பர் இப்பொழுது அறுபத்தைந்தாவது ஆண்டு எய்தியவராய் நகர வாழ்க்கையைத் துறந்து, இயற்கை வாழ்வை நாடிச் சென்னையை அடுத்த குரோம் பேட்டையில் குடியேறி வாழ்ந்து வருகிருர். தேசசேவையிலேயே தமிழ் வாழ்நாளெல்லாம் செலவிட்டுவரும் இவர் எஞ்சியுள்ள காலத்திலும் தமக்கேற்ற பொதுநலத் தொண்டைக் கவலையின்றிச் செய்துவருமாறு தமிழ் நாட்டாரின் நன்றிப் பரிசாக அவருக்கு ஒரு நிதி திரட்டி அளிப்பதென்று சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் முடிவு செய்திருக்கிருர்கள். அந்த நிதிக்குத் தமிழகத்திலுள்ள எழுத்தாளர்

களும் செல்வர்களும் பிற ரும் தங்கள் தங்களால் இயன்ற தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி உதவி இந்த நன் முயற்சியை ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

பாரதியாரின் அன்புக்குப் பாத்திரமான ஸ்ரீ நெல்லையப்பர் நம்மிடையே இன்னும் தேசத் தொண்டும், தமிழ் தொண்டும் புரிந்து நீடூழி வாழ வழி செய்வது நம்முடைய பொறுப்பாகும். ஒவ்வொரு குடும்பத்தாரும் இந்நிதிக்குத் தாராளமாக உதவ வேண்டுகிறோம்.

பணம் அனுப்புவோர்:—

"குமுதம்" ஆசிரியர், ஸ்ரீ எஸ். ஏ. பி. அண்ணாமலை, பொருளாளர், நெல்லையப்பர் நிதி, தபால் பெட்டி நெ. 1008, சென்னை-10. என்ற விலாசத்திற்கு அனுப்புவார்களாக.



நோயாளிக்கு சிஷ்ருஷை செய்வதென்பது மேல்நாடுகளில் அநேகருக்கு மதத்தைப்போல் கைக்கொள்ளும் ஓர் நம்பிக்கை.

மலேயாவில் மேல்நாட்டு மாதர்களின் அற்புதத் தொண்டு

●

கூரைவேய்ந்த குடிசைகள். மூங்கில் வாரைகள் அங்கு மிங்கும் நீட்டிக்கொண்டிருக்கும்படி அமைக்கப்பட்டவை. இது தான் மலேயாவிலுள்ள ஒரு சாதாரணக் குக்கிராமம். இம்மாதிரி இடங்களில் வசிக்கும் மக்களுக்கு டாக்டர் வசதி ஏது என்றுதான் நமக்குத் தோன்றும். ஆனால் பிரிட்டன், ஆஸ்திரேலியா, முதலிய ராஜ்யங்களிலுள்ள பெண்களுக்கு நோயாளிகளை சிஷ்ருஷிப்பதிலுள்ள ஆவலினால் மலேயாவில் எந்தக் குக்கிராமத்திலும் நோயாளிகளைக் கவனிப்பாரற்ற நிலைமை கிடையாது.

ஜில்லா அதிகாரியின் மேஜை மீது ஒரு மகஜர் கிடக்கிறது. "எங்களூரில் வசிக்கும் மிஸி அம்மாவை வேறு ஊருக்கு மாற்றக்கூடாது" என்று துவங்கும் அந்தக் கடிதத்தில் கிராமத் தலைவன் கையெழுத்திட்டிருக்கிறான். அதற்குக் கீழே பஞ்சாயத்தார்களும் கிராம மக்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். மலேயா காடுகளுக்குள் தனியாக இருக்கும் குக்கிராமவாசிகள் தயாரித்தது தான் அந்த மகஜர்.

பொதுமக்கள் எந்தக் குடிசைகளில் வாழ்கின்றார்களோ அம்மாதிரியே ஒரு மூங்கில் குடிசையில் இந்த பிரிட்டன், ஆஸ்திரேலியா தேசங்களிலிருந்து வரும் மருத்துவ தாதிகள் வசிக்கிறார்கள். கர்ப்பிணிக்கு உதவியாக இவர்களில் ஒரு மருத்துவச்சியை வேறு கிராமத்திற்கு மாற்றிவிட்டதாக வதந்தி கிளம்பியவுடன் தான் மேற்கூறிய மகஜர் கிளம்பியது. பல மாதங்களாக உடனிருந்து பழகிய மருத்துவச்சியைப் பிரிய கிராமவாசிகளுக்கு மனமில்லை. உடனே ஓர் மகஜர் தயாரிக்கிறார்கள், அவளைமாற்றக்கூடாதென்று கோரி!

தன்னலமற்ற சேவையின் பாராட்டுத்தான் இந்த மகஜர்!

மக்களுடைய நன்றியை — அன்பை-பாசத்தை வெளிக்காட்டும் சின்னம்தான் இது!

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து முதலான தேசங்களிலிருந்து வரும் மாதர்கள் தன்னலமற்று மலேயா கிராமங்களில் இம்மாதிரி அற்புதமாக ஜீவகாருண்ய சேவை செய்கிறார்கள். சிதறிக் கிடக்கும் மலேயா கிராமங்களில் இந்த சேவை செய்வதற்கென்றே 58 கோஷ்டிகள் உண்டு. இந்த கோஷ்டிகளில் பெண்களும் இருக்கிறார்கள்.

இவர்கள் செய்யும் சேவை பொதுமக்களின் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டதென்பதற்கு அத்தாட்சிகள் பல உண்டு. ஒரு மருத்துவச்சி வசித்துக்கொண்டிருந்த கிராமத்திலுள்ள ஒரு தெருவிற்கே அவளுடைய பெயரை வைத்துவிட்டனர். மற்றொரு குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் கிராமத்துப் பெண் மருத்துவச்சியின் பெயரை இந்த ஆண் குழந்தைக்கு வைத்துவிட்டனர். அது பெண் பெயராயிற்றே என்றுகூட யோசிக்கவில்லை!

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து முதலான தேசங்களிலிருந்து மலேயா கிராமங்களில் மருத்துவ சேவைசெய்யவரும் மாதர்கள் சாதாரணமாக ஒரு வருஷ ஒப்பந்தத்தில்தான் வருவது வழக்கம். ஆனால் அநேக மாதர்களும் தங்கள் ஒப்பந்த காலமான ஒரு வருஷத்திற்குப் பிறகும் மலேயா கிராமங்களில் தங்கி பொதுமக்களுக்குச் சேவைசெய்து வருகின்றனர்.

மருத்துவத் தொழில் செய்யும் மாதர்களும் மற்றும் அவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த நிபுணர்களும் பொதுநல சேவையில் கிராமவாசிகளுக்குப் பயிற்சியளிக்கிறார்கள். குக்கிராமங்களில் கர்ப்பிணிகளுக்குப் பிரசவ உதவி முதலியவற்றை அளிப்பதோடு மேற்கூறிய கோஷ்டியார் பெரிய கிராமங்களில் ஆஸ்பத்திரிகளை நடத்துகின்றனர். கர்ப்பிணிகளையும் பிரசவித்த பெண்களையும் கவனித்துக் கொள்ள 'நர்ஸ்' வீடுகளுக்குச் செல்வதுண்டு.

குக் கிராமங்களில் ஸ்திரமாக இருந்து, பொது மக்களுக்குச் சேவை செய்வதல்லாமல் இன்னொரு மகத்தான சேவையை இந்த மாதர்கள் செய்கின்றனர். பிரயாண வசதிகள் சரியானமுறையில்லாத இடங்களில் கூட ஒன்றிரண்டு குடும்பங்களிருப்பதுண்டு. இம்மாதிரி இடங்களுக்குப் படகு மூலமாகவோ. வேறு போக்குவரத்து வசதி மூலமாகவோ இந்த மருத்துவச்சிகள் சென்று தேவையான சேவை புரிகின்றனர்.

பஹாங் நதி முகத்துவாரத்திலிருந்து மேலே முப்பது மைல்கள் வரையில் கரையோரமாக 16 கிராமங்கள் உண்டு. அவற்றிற்குச் செல்ல நதி மார்க்கம் தான் உண்டு இரு மருத்துவச்சி

கள் படகின்மூலம் ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விஜயம் செய்கிறார்கள். சில கிராமங்களில் சராசரி 170 நோயாளிகள் உண்டு. இந்தப் பெண்கள் படகிலேயே தங்கி வாழ்க்கை நடத்துகிறார்கள்.

ட்ரெங்கானு சமஸ்தானப் பகுதியில் மகத்தான கஷ்டங்களை எதிர்த்து நின்று மருத்துவச்சிகள் வாழ்க்கை நடத்துகிறார்கள். கிழக்குக் கரையோரத்திலுள்ள பெஸட் கிராமத்தில் தண்ணீர் வசதியற்ற சிறு குடிசையில் ஓர் 'நர்ஸ்' வசிக்கிறாள். காலையில் எட்டு மணிக்கு அவளுடைய வேலை துவங்கி விடுகிறது. கிராம வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளைக் கவனித்துவிட்டு, உள்ளூர் மருத்துவச்சிக்குத் துணையாக அவள், பல பெண்களை வீடுகளில் சென்று பார்க்கிறாள். பிறகு பள்ளிக்கூடத்திற்குச் சென்று சிறுவர்களுக்கு உதவி தேவையா எனக் கவனிக்கிறாள். பிறகு நாட்டுப்படகில் ஏறி, நதியைக்கடந்து, எதிர்ப்புறமிருக்கும் சிறு கிராமப்பள்ளியை நோக்கி நடக்கிறாள். கீழே மணல். ஆனால் மேலே இளங்காற்று வீசும் தென்னைகள்! தொத்துநோய்க் காலமாக இருந்தால், குழந்தைகளுக்கு நோய்தடுப்பு மருந்துகளை ஊசிமூலம் புகட்டியும் வேறு பல சேவைகளும் செய்கிறாள். உச்சிப் பொழுதுக்கு சமுதாய நல மன்றத்திற்குத் திரும்பி, அங்கு காத்திருக்கும் நோயாளிகளுக்குச் சேவை செய்கிறாள். பிற்பகல் மூன்று மணி வரையில் இந்தச்சேவை. இடையில் அவகாசம் கிடைத்தால் ஒரு கோப்பை காபி அருந்துவாள். பிறகு மாலை ஐந்தரை மணி வரையில் சேவா மன்றத்திற்கு வர இயலாத பிணியாளர்களைத் தேடிச் சென்று சிகிச்சை செய்கிறாள். மீண்டும் படகுப் பிரயாணம், வீடு திரும்பும் போது மணி ஏழு அடித்துவிடும், அதன்பிறகு தான் விச்ராந்தியாக அமர்ந்து உணவு கொள்ளமுடியும். மலேயாவில் கம்யூனிஸ்டுகளின் அட்டகாசமிருப்பதால் உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது சற்று நிலைமை மாறியிருப்பினும் தடை நீங்கவில்லை. ஆகையால், தன்னுடைய தினசரி உணவைக்கூட அவள் எடுத்துச் செல்ல முடியவில்லை.

இந்த 'நர்ஸ்'களின் தன்னலமற்ற சேவையும் உழைப்பும் மேற்கூறியவாறு மலேயாப் பெண்களைப் பெரிதும் வசீகரித்துவிட்டன. இவர்களில் பலர் சேவை உணர்ச்சியுடன் மக்களுக்குப் பணியாற்ற முன்வந்திருக்கிறார்கள். இவர்கள் தம் தம் கிராமங்களில் நர்ஸ்களுக்கு உதவியாகப் பணி புரிகிறார்கள்.

B. I. S. Feature

இரண்டாம் மகா யுத்தத்தில் பிரிட்டிஷார் அநேக கொடுந் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தபோதிலும் ஒரு பெரும் துரதிருஷ்டத்தைத் தடுத்தனர்.

குண்டுகளை ஏமாற்றிய குழந்தைகள்

●

பழைய காலத்து தர்ம யுத்தங்களுக்கும் இக்காலங்களில் நடக்கும் யுத்தங்களுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. தர்ம யுத்தங்களில் ஈடுபடும் சேனைகளுக்குமட்டும்தான் உயிராபத்தோ, தேகத்தில் காயமோ ஏற்படலாம். ஆனால் இக்காலத்து யுத்தங்களிலோ சேனைகளை அழிப்பதற்கும் அதோடு யுத்த களத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கும் படை வீரர்களின் பந்துக்களையும் நாசஞ்செய்ய முடிகிறது. இதற்குக் காரணம் ஆகாய விமானங்களும் அவை மூலம் ஏற்படும் குண்டு வீச்சுமே.

சென்ற மகா யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் இந்த உண்மையைத் தங்கள் சொந்த அனுபவத்தில் நன்கு அறிந்திருந்தனர். யுத்தம்நடப்பது ஐரோப்பா கண்டத்தில். ஆனால் குண்டு வீச்சோ லண்டன் முதலிய நகரங்களில்.

சர்க்காரின் தீர்க்கதரிசனம்

ஐரோப்பா கண்டத்திலே வேறு எங்கேயாவது யுத்தம் நடந்தாலும் தங்கள் ராஜ்யங்களிலுள்ள லண்டன் முதலிய முக்கிய நகரங்களில் ஜெர்மானியர்களின் குண்டு வீச்சு இருக்குமென்பதை புத்தியுடனும் தீர்க்க தரிசனத்துடனும் அறிந்து கொண்டார்கள்

பிரிட்டிஷார்கள். யுத்தக் களத்தில்நடக்கும் குண்டு வீச்சுகளினுல் மாண்டுபோகிறவர்கள் படைகள். வெகு தூரத்திலுள்ள நகரங்களில் குண்டு வீச்சினுல் மாண்டு போகிறவர்கள் சின்னஞ்சிறு குழந்தைகள், ஸ்திரீகள், யுத்தத்தில் ஈடுபடாத அப்பாவிப் புருஷர்கள்.

நாட்டுப்புறங்களை நோக்கி சிறுவர் படை

பிரிட்டிஷ் சர்க்கார் நகரங்களிலிருக்கும் குழந்தைகளை குண்டு வீச்சு அபாயத்திலிருந்து தப்புவிக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

நகரங்களிலுள்ள எல்லாப் பள்ளிக்கூட அதிகாரிகளையும் முன்னெச்சரிக்கை செய்து யுத்தம் தொடங்கிய தினத்தன்றே கூடுமான வரை எல்லாக் குழந்தைகளையும் நகரங்களிலிருந்து நாட்டுப்புறங்களுக்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்தனர் பிரிட்டிஷ் சர்க்கார்.

யுத்தம் ஆரம்பித்தது 1939–ஆம் வருஷம், செப்டம்பர் மாதம், முதல் தேதி. இதே தினத்தில் எல்லா பிரிட்டன் நகரங்களிலிருந்தும் பள்ளிக்கூடச் சிறுவர்கள் திரள் திரளாக நாட்டுப்புறங்களுக்குச் சென்றுவிட்டனர்.

எல்லாக் குழந்தைகளும் நாட்டுப்புறங்களுக்குச் சென்றேயாகவேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் கட்டாயப் படுத்தவில்லை. ஆனுல் யார் யாருக்குத் தங்கள் குழந்தைகள் குண்டுவீச்சால் நேரிடும் ஆபத்துக்கு ஆளாகக் கூடாதென்ற ஆவல் இருக்கிறதோ அவர்களுடைய குழந்தைகளுக்கு நாட்டுப்புறத்தில் வீட்டு வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவை செய்திருக்கிரூமென்று சர்க்கார் பகிரங்கமாக அறிவித்தார்கள்.

ஏழைக்குழந்தைகளுக்காக

நகரவாசிகளில் பணக்காரர்களுக்கு நாட்டுப்புறங்களில் தங்கள் சொந்த வீடுகளோ அல்லது உறவினர், நண்பர்கள் முதலியவர்களின் வீடு வசதிகளோ இருந்தது.

அதனுல் பணக்கார வீட்டுக் குழந்தைகளுக்கு அநேகமாக சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ஏற்பாடுகள் தேவையில்லாமலிருந்தது. நகரங்களிலுள்ள ஏழை மக்களுக்குத்தான் விபத்துநேரிடுமென்று சர்க்காருக்குத் தீர்

மானமாய்த் தெரிந்திருந்தது. அதனால் பெரும்பாலும் இம்மாதிரி ஏழைக் குழந்தைகளுக்கென்றே ஆங்கில சர்க்கார் இந்த ஏற்பாடுகளைச் செய்து அநேக ஆயிரம் குழந்தைகளை ஹிட்லரின் குண்டுகளுக்கு இரையாகாமல் பாதுகாத்தார்கள்.

மிக அழகான ஏற்பாடு

1939-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், முதல் தேதி, வெள்ளிக்கிழமை, நேரம், விடியற்காலை. சாலைகளில் ஜன சந்தடியே கிடையாது. அதிகாலையில் பால் கொண்டு போகும் வான்களும்கூட இன்னும் வரக்காணோம். நிழல்கள் போல் தோன்றும் குழந்தைகள் வரிசை வரிசையாகத் தங்கள் பள்ளிக்கூடங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர்களும் உதவி ஆசிரியர்களும் பள்ளிக்குவரும் குழந்தைகளுடைய ஜாபிதாவைத் தயார் செய்யக் காத்துக்கொண்டிருந்தனர். குழந்தைகள் வந்தவுடன் இந்த ஜாபிதாவைத் தயார் செய்து அவர்கள் கையில் கொண்டுபோக வேண்டிய பொருள்கள்யாவுமிருக்கின்றனவாவென்று சோதனை செய்தார்கள். இந்தப் பொருள்களில் குண்டுகளினால் ஏற்படும் விஷவாயுவை தடுப்பதற்கு முகமூடி முக்கியமானது.

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வந்துசேர்ந்த குழந்தைகளின் ஜாபிதாவைத் தயார்செய்து பஸ்மூலமாகவோ, ரயில் மூலமாகவோ அவர்கள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு அனுப்பிவிட்டார்கள்.

யுத்தகால வளர்ப்புப் பெற்றோர்கள்

இந்தக் குழந்தைகளை வரவேற்க நாட்டுப்புறங்களில் அநேக இடங்களில் ஆட்கள் தயாராயிருந்தனர்.

சர்க்கார் முன் அறிக்கை பிரகாரம் இந்த இடங்களிலுள்ள ஜனங்கள், யார் யார் தங்கள், தங்கள் வீடுகளில் எத்தனை குழந்தைகளை ஏற்றுக்கொள்ளத் தயார் என்பதை அந்தந்த நகர சபைகளுக்கு அறிவித்திருந்தனர்.

இவ்வாறு தெரிவித்திருந்த ஜனங்கள் அவர்கள் விரும்பிய பிரகாரம்குழந்தைகளைஏற்றுக்கொள்ளத்திரள் திரளாக குழந்தைகள்வந்து சேரும் இடங்களில் காத்

திருந்தனர். தங்கள் பெற்றோரைவிட்டு, அந்நியரிடம் வந்துசேரும் இக்குழந்தைகளை எவ்வளவு அன்போடு வரவேற்றுப் பாராட்ட வேண்டுமென்பதை இந்த ஜனங்கள் நன்குணர்ந்திருந்தார்கள்.

சங்கடமான காரியம்

பிறர் குழந்தையை தங்கள் குடும்பங்களில் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு தங்கள் குழந்தைகளைப் போலவே பாராட்டுவதென்பது ஒரு சாதாரண மனிதன் விரும்பாத காரியம் அல்லவா? ஆனால் பெருந்துயரங்கள் நேரிடும்பொழுது பிறர் குழந்தைகளைப் பற்றிச் சாதாரணமாக இருக்கும் வெறுப்பை மனத்தைவிட்டு அகற்றுவதுதானேமனிதத் தன்மை. இந்த இங்கிலாந்துக் குழந்தைகளை வரவேற்றுப் பாராட்டுவதில் இன்னொரு சிரமமென்னவென்றால் இந்தக் குழந்தைகளெல்லாம் நகர வாசிகளாயிருந்தவர்கள். ஓரளவுக்கு நகர வசதிகளோடு வளர்ந்தவர்கள். நாட்டுப்புறத்திலோ, சூழ்நிலை அறவே வேறு. நகர சூழ்நிலையிலிருந்த குழந்தைகள் நாட்டுப்புறத்துச் சூழ்நிலையில் எவ்வாறு களிப்போடு இருக்கமுடியுமென்று மிகவும் பயப்பட்டார்கள். ஆதலால் இக்குழந்தைகளை யுத்த காலத்தில் எவ்வாறாயினும் மனப் பூரிப்புடன் வாழ்விக்க வேண்டுமென்ற திடசித்தத்துடன் தான் நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் நகரக் குழந்தைகளை வரவேற்றார்கள்.

குழந்தைகளுக்கும் கஷ்டம்!

நாட்டுப்புறத்தில் இருக்கும் சூழ்நிலை அறவே வேறு என்று கூறினோமே, இது வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திற்கும் பொருந்தும். நகரத்தில் இக்குழந்தைகள் சாப்பிட்டுக்கொண்டிருந்த உணவை நாட்டுப்புறத்தில் கண்ணாலேயே பார்க்கமுடியாது. நாட்டுப்புறத்தில் மக்கள் உண்ணும் உணவு கண்பார்வைக்கு அழகாயில்லாவிட்டாலும் புஷ்டியளிக்கக்கூடியவை.

நகரத்தில் வாழ்ந்த குழந்தைகளுக்கு இந்த உணவைக் கண்ணால் பார்த்தாலே அருவருப்பாயிருக்கும். ஒரு குழந்தை தன்னை வரவேற்ற வீட்டில் தனக்குக் காலை உணவாய்க் கொடுத்த 'ஓட்ஸ்' கஞ்சி

யைக் கண்டவுடன், கண்ணீர் விட்டதாம். என்னவென்று விசாரித்தவுடன் குழந்தை இவ்வாறு கூறியதாம். "எங்கம்மா எனக்கு அலமாரியைத் தினம் பெருக்கி அதனால் சிதறும் ரொட்டித் துண்டுகளைத் தான் காலை உணவாகத்தருவாள்! இந்த வழவழப்பாகவும் கூழ்போன்றும் உள்ள பொருளை எப்படி விழுங்குவது? கடவுளே!" என்று அழுததாம்.

குழந்தையா வாத்தா?

நகரங்களில் ஏழை மக்கள் வாழுமிடங்களில் ஜலவசதி தாராளமாக இராதென்பது தெரிந்த விஷயம். அதனால் குழந்தைகள் ஒரு வாரத்தில் ஒருமுறையோ ஒரு மாதத்தில் இரண்டு முறையோ தான் ஸ்நானம் செய்வது வழக்கம்.

நாட்டுப்புறத்தில் ஜலம் தாராளமாகக் கிடைப்பதில் நகரக் குழந்தைகளுக்குத் தினசரி ஸ்நானம் செய்யும் பழக்கத்தைக் கற்று கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் சில குழந்தைகளுக்குத் தினசரி ஸ்நானத்தைப் பற்றி வெறுப்பும் பயமும்தான் ஏற்பட்டது. "நாங்கள் எல்லோரும் மனிதக் குழந்தைகளா, அல்லது நீரில் வாழும் வாத்துகளா" என்று ஒரு குழந்தை முறையிட்டதாம்.

தினமும் ஸ்நானம் செய்வது, தலையில் பேன் வராமல் காப்பாற்றிக்கொள்வது முதலிய விஷயங்களில் நாட்டுப்புறத்துத் தம்பதிகளுக்கு இந்த நகரத்துக் குழந்தைகளால் மிகவும் மனக்குழப்பமேற்பட்டது.

படுக்கைமீது வெறுப்பு

நாட்டுப் புறத்திலுள்ள ஜனங்களில் வாழ்க்கை வசதிகள் ஓரளவுக்குத் திருப்தியாக இருந்தவர்கள்தான் நகரக் குழந்தைகளை வைத்துக் கொண்டவர்கள். இவர்கள் அமைதியுடன் குழந்தைகளுக்கு இரவில் நித்திரை செய்ய அன்புடன் கட்டில் முதலியவற்றை அளித்தார்களாம். நடை பாதைகளிலே நித்திரை செய்து பழக்கமான இக்குழந்தைகளுக்கு கட்டிலையும் படுக்கையையும் கண்டதும் இரவில் தூக்கமே வரவில்லையாம். ஒரு குழந்தையை ஏற்றுக்கொண்ட ஒருவர் இரவில் பத்து மணிக்குத் தன் வளர்ப்புக் குழந்தையைத் தூங்குகிறதா இல்லையா வென்று

அறைக்குச் சென்றுபார்த்தார். கட்டிலின்மீது படுக்கைதானிருந்தது. குழந்தை இல்லை. அறையிலெங்கும் தேடிப்பார்த்தார். குழந்தையைக் காணவில்லை. ஜன்னல் வழியாய்க் குதித்து ஓடிவிட்டதோவென்று திகிலடைந்தார். போலீசுக்குத் தகவல் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார். இப்படி நினைத்தபோது: தூக்கத்தில் குழந்தைகள் விடும் பெருமூச்சுபோல், கட்டிலின் கீழேயிருந்துகேட்டது. கட்டிலுக்கடியில் குழந்தை அமைதியாய்த் தூங்குவதைக் கண்டார். அன்புடன் அக்குழந்தையை கட்டிலில் அமர்த்திவிட்டுத் தானும் நித்திரை செய்யச் சென்றார்.

தந்தையின் தொழில்

நகரத்திலிருந்து வந்த குழந்தைகள் எந்தந்த விதமான குடும்பங்களிலிருந்து வந்தனவென்பதைப் பற்றியும் ஒரு விந்தையான கதையிருக்கிறது.

ஒரு குழந்தை தங்கியிருந்த வீட்டில் திடீரென ஒருஅலமாரியின் சாவியைக் காணவில்லை. அலமாரியைத் திறந்தால்தான் குழந்தைகளுக்கு வேண்டிய தின்பண்டங்கள் கிடைக்கும் தன் வீட்டிலிருந்த மற்ற சாவிகளைக் கொண்டு திறக்க முயற்சித்தார். ஒன்றும் பலிக்கவில்லை. குழந்தைகள் பசியோடிருக்கின்றனவே யென்று தவிக்கும் வேளையில் நகரத்திலிருந்துவந்த ஐந்து வயதுக் குழந்தை "எனக்கு ஒரு ஆணி கொடுத்தால் அலமாரியைத் திறந்துதருகிறேன்" என்று கூறினான். அவனிடம் ஒரு பெரிய ஆணியைக் கொடுத்ததும் ஒரே விநாடியில் அவன் அலமாரியைத் திறந்துவிட்டான். இவ்வளவு சாமர்த்தியம் இச்சிறு குழந்தைக்கு எப்படி வந்ததென்று அக் குடும்பத்திலுள்ளவர்களனைவரும் ஆச்சரியப்பட்டனர். அவனைக் கேட்டதற்கு இவ்வாறு பதில்கூறினான் "என் தந்தை தினந்தோறும் இரவு ஒன்பது அல்லது பத்து மணி ஆகிவிட்டால் ஆணிகள், சாவிகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பிவிடுவார். சில நாட்களில் என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். இவருடன் சென்றுதான் பூட்டுகளைத் திறப்பதில் எனக்கு நல்ல பயிற்சி கிடைத்தது!"

குழந்தையுடைய தந்தையின் தொழில் என்னவென்று நாமே யூகிக்கலாம்.

பால் கொடுப்பது பசுவா, புட்டியா ?

நகரவசதிகளோடுவாழ்ந்த குழந்தைகள் நாட்டுப்புற வசதிகளைப் பற்றி என்னென்ன அபிப்பிராயங்கள் கொண்டிருந்தன ரென்று இக்குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு எழுதிய சில கடிதங்களிலிருந்து தெளிவாகிறது.

" இவ்வூரில் நோய்கள் வந்தால் டாக்டரைக் கூப்பிடும் வழக்கமேயில்லை. ஏதோ இலைகள், வேர்கள், முதலியவற்றை உட்கொண்டு தான் நோயாளிகள் குணமடைகிறார்கள் " என்று ஒரு குழந்தை எழுதினான்.

"நானிருக்குமிடத்தில் நம் வீட்டில் வருவதுபோல் பால் சுத்தமாகப் புட்டியில் அடைத்து வருவதில்லை. ஒருபசு என்றொரு மிருகத்திலிருந்து பாலை எடுத்து அதைத்தான் சாப்பிடுகிறார்கள்." இது மற்றொரு குழந்தையின் கடிதம்.

இளம் சூதாடிகள்

ஒருவர் தனக்குச் சொந்தமாகக் குழந்தைகளில்லாததால் நான்கு நகரக்குழந்தைகளை ஏற்றுக்கொண்டார். இக்குழந்தைகள் வந்து சேர்ந்த மாலைவேளையில் சிறு குழந்தைகளுக்குத் தகுதியான விளையாட்டு சாமான்களை வாங்கிக் கொண்டுவந்தார். குழந்தைகளைத் தேடி அவர்கள் குரல்கள் கேட்ட அறைக்கு வந்ததும் இவர் கண்ட காட்சி இவருக்கு வியப்பை அளித்தது. ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு அவர்கள் நகரத்திலிருந்தே கொண்டு வந்திருந்த ஒரு அழுக்கடைந்த சீட்டுக்கட்டை வைத்துக்கொண்டு சூதாட்டமாடிக் கொண்டிருந்தார்கள் !

குழந்தைகள் நன்மையடைந்தன.

இந்த நாலைந்து வயதான நகரக்குழந்தைகள் அனைவரும் நாட்டுப்புறத்திலுள்ள சூழ்நிலையில் திடகாத்திரம் பெற்றனவென்பதில் சந்தேகமேயில்லை. நகரத்திலுள்ள தங்கள் பெற்றோர்கள் அளித்த கந்தல் ஆடைகளைத் தரித்து வளர்ந்த குழந்தைகள் நாட்டுப்புறத்தில் வந்து அழகான ஆடைகளைத் தரித்துக்கொண்டு மகிழ்ச்சி யடைந்தார்கள்.

இம்மாதிரித் தங்கள் குழந்தைகள் அடைந்த நன்மைக்கு இந்தக் குழந்தைகளின் பெற்ருேர்கள் அனைவரும் மனமார்ந்த நன்றி செலுத்தினர். ஆனல் மனித குலத்தில் கண்டிப்பாய் வேறுபாடுகள் உண்டல்லவா?

ஒரு தாய் நாட்டுப்புறத்திலிருக்கும் தன் குழந்தை தன் வரலாற்றைப் பற்றி எழுதிய கடிதம் கிடைத்ததும் அக்குழந்தை இருந்த இடத்திற்கு வந்தாள். அக்குழந்தையையும் அக்குழந்தை அணிந்திருந்த ஆடைகளையும் கண்டதும் இவளுக்கு மிகவும் சந்தோஷம். இந்த ஆடைகளோடேயே குழந்தையை தன்னுடன் அழைத்துச் செல்ல என்னவழி என்று யோசித்தாள். அநேக ஸ்திரீகள் நகரத்திலிருந்து நாட்டுப் புறத்திலிருந்த தங்கள் குழந்தைகளைப் பார்ப்பதற்கு வருவதுபோல் வந்து குழந்தைகளை சன்மானம் கிடைத்த நல்ல ஆடைகளை அணியச் சொல்லி அந்த ஊரின் விசேஷங்களைத் தங்களுக்குக் காண்பிக்க குழந்தைகளை அழைத்துச் செல்லும் பாவனையில் திரும்ப நகரத்திற்கே அழைத்துச்சென்ற கள்ளிகளின் கதைகளை அந்த வீட்டு ஸ்திரீ கேள்விப்பட்டிருந்ததால் அவளும் ஜாக்கிரதையாயிருந்தாள்.

"குழந்தையைச் சற்று வெளியே அழைத்துச் செல்லட்டுமா' என்று நகரத்திலிருந்து வந்த தாயார் கேட்டதும் நகரத்துக் குழந்தையை நோக்கி "புது ஆடைகளை அவிழ்த்து வைத்துவிட்டு பழையஆடைகளை அணிந்துகொண்டு உன் தாயார்கூடச் செல், அம்மா" என்று கூறினாள் நாட்டுப்புற ஸ்திரீ.

"புதிய ஆடைகளில் குழந்தை நன்ருக இருக்கிருள். அப்படியே என்னுடன் சற்றுநேரம் வரட்டுமே" என்று குழந்தையின் தாயார்கூறியதற்கு நாட்டுப்புறத்து ஸ்திரீ "ஆடைகளிலெல்லாம் குழந்தையின் பெயரை எழுதவேண்டும்' குழந்தை வெளியே சென்று வருவதற்கு முன்பு அந்த வேலையைச் செய்து வைக்கிறேன்" என்று கூறினாள். தன் சூட்சி பலிக்காததால் குழந்தையின் தாயார் அப்பொழுதே தன் ஊருக்குச் சென்றுவிட்டாள். இம்மாதிரியெல்லாம் நன்றிகெட்ட செயல்களும் மற்றும் குறைபாடுகளும் ஏராள

மாயிருந்தாலும் நகரத்தை விட்டு நாட்டுப்புறத்திற்குச் சென்றதால்தான் அநேக ஆயிரம் பிரிட்டிஷ் குழந்தைகள் உயிர் தப்பியதென்று திட்டமாய்க் கூறலாம்.

மக்களின் பாக்கியம்

கோர மகாயுத்தத்தினல் அநேக தீங்குகள் நேரிட்டன. ஆனால் சில நன்மைகளும் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று நகரவாசிகளும் நாட்டுப்புற வாசிகளும் சில காலம் ஒன்றுசேர்ந்து வாழக்கிடைத்த சந்தர்ப்பமாகும். வாழ்கை வசதிகளோடு கவலைகளே இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்த நாட்டுப்புற மக்கள் கவலையிலேயே ஆயுள்பூராவும் வாழ்க்கை நடத்தும் குடும்பங்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ள நேரிட்டது. இம்மாதிரி சாதாரணமாய் தொடர்பில்லாத மனிதக் கூட்டங்களுக்குத் தொடர்பைஉண்டாக்கி ஒரு புதிய ஐக்கியத்தை பிரிட்டிஷ் சமூகத்தில் ஏற்படுத்தியது இரண்டாம் மகாயுத்தம்.

கொடிய விஷப்பாம்பின் தலையில் அழகான மாணிக்கம் இருக்கிறதென்று ஒரு ஆங்கிலக் கவி கூறியது உண்மையல்லவா?



உங்களுக்குத் தெரியுமா?

உலகத்தில் தீட்சண்ய கண்பார்வையுடையவர்கள் மிகவும் குறைவே.

★

ஒருமணி நேரம் தினமும் படிக்கும் ஒருவர் ஒரு வருஷத்தில் ஒருகோடி வார்த்தைகளைப் படிக்கிறார்.

★

புருவங்களை நெரித்து வெறுப்பைக்காட்டுவதற்கு 50 தசைகள் வேலைசெய்யவேண்டியிருக்கிறது. ஆனால் புன்னகை புரிவதற்கோ 13 தசைகளே வேலைசெய்கின்றன.

★

குதிரைகள் நின்றுகொண்டிருக்கும்போதே தூங்கும் சக்திவாய்ந்தவை. நின்றுகொண்டு தூங்குவதனால் படுத்துகொண்டு தூங்குவதைவிட சீக்கிரமாக சோர்வு நீங்குகிறதாம்.

★

பிராணி இனங்களில் முதன்முதலில் வீட்டுமிருகமாக இருக்கப் பயிற்சிபெற்றது நாய்தான்.

★

ஜப்பானியர்கள் அவர்களுடைய கப்பல்களுக்குப் பெயரிடும் போது 'மாரு' என்ற பதத்தைச் சேர்க்கின்றனர். (நிப்பான் மாரு, தைஷாமாரு) இந்த மாரு என்ற பதத்திற்கு வட்டம் என்று அர்த்தம். அதாவது புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிவந்து சேரும் சூசகம். க்ஷேமமாக சமுத்திரயாத்திரை செய்து திரும்பவேண்டுமென்பது கருத்து.

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor:- N. S. Mani.

178748
சென்னை 600 008

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.